விலை : 20.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 புரட்டாதி 02 திங்கட்கிழமை (18.09.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 273


## 20—வது திருத்தம்: உயர் நீதிமன்றம் நாளை அறிவிப்பு

# சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்லாது

# நிறைவேற்றவே அரசு பகீரத முயற்சி

(கொழும்பு)

20-வது அரசியலமைப்பு திருத்தத்தை நாளை மறுதினம் 20-ம் திகதி பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்து கொள்ள அரசாங்கம் திட்டமிட்டுள்ள போதும், 20-வது திருத்தம் குறித்து நாளை உயர்நீதி மன்றத்தின் வியாக்கியானம் அறிவிக்கப்படவுள்ளது. தீர்ப்பு பாதகமாக அமைந்தால், நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றக் கூடிய வகையில் வரைபை மீண்டும் திருத்துவதற்கு அரசு பகீரத முயற்சியில் ஈடுபட்டுள்ளது. (23-ம் பக்.)



## 20-வது திருத்தம் தோற்றால் மாற்று வழி கூறுகிறது கபே!

(கொழும்பு)

20வது திருத்தச்சட்டத்துக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள அடிப்படை உரிமை வழக்கிலும் அரசாங்கத்தின் நிலைப்பாட்டுக்கு எதிராக தீர்ப்பு வழங்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

சட்டமூலத்தை நிறைவேற்றிக் கொள்ள பொதுமக்கள் கருத்துக் கணிப்பொன்றை நடத்துமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிடலாம் என்று கூறப்படுகின்றது.

அதே நேரம் எதிர்வரும் 20-ம் திகதி நாடாளுமன்றத்தில் குறித்த சட்ட மூலம் தொடர்பான வாக்கெடுப்பின் போது, ஆளுங்கட்சியைச் சேர்ந்த சிலர் எதிர்த்து வாக்களிக்கலாம் என்ற அச்சமும் காணப்படுகின்றது. இவ்வாறான 23

## கூட்டு எதிர்க் கட்சியினர் ஜனாதிபதியுடன் சந்திப்பு

(கொழும்பு)

கூட்டு எதிர்க்கட்சியின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் அவசரமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்துள்ளனர்.

விசேட பேச்சுவார்த்தைக்காக இந்த சந்திப்பு நடந்துள்ளது. தினேஷ் குணவர்த்தன, டளஸ் அழகப்பெரும, திஸ்ஸ விதாரண உள்ளிட்டோர் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இங்கு இரண்டு விடயங்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ள காணாமல் போனவர்கள் சம்பந்தமான சர்வதேச இணக்கப்பாடு தொடர்பான சட்டமூலம் மற்றும் உள்ளூ 23

### முல்லையில் தாக்குதல்

## 3 பொலிஸார் காயம் 16 பேர் கைது

(பரந்தன்)

முல்லைத்தீவு மாவட்டம் வெலிஓயா பகுதியில் பொலிஸார் மீது பிரதேச வாசிகள் நடத்திய தாக்குதலில் 3 பொலிஸார் காயமடைந்துள்ளதுடன், பொலிஸ் வாகனமும் சேதப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெலிஓயா ஜனகபுரம் பகுதியில் கஞ்சா விற்பனையில் ஈடு 24

## காணாமல் போனோரின் உறவுகளை சந்தித்த சர்வதேச மன்னிப்புச் சபை

### சர்வதேச மயப்படுத்த உதவுவதாக உறுதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

எமது பிள்ளைகள் உயிருடன் உள்ளார்கள் என்ற ஆதாரத்துடன் தான் நாம் போராடிக்கொண்டு இருக்கிறோம் என தெரிவித்த காணாமல் போனவர்களுடைய உறவினர்கள், சர்வதேசத்தின் அழுத்தத்தின் ஊடாகவே இலங்கை அரசு எமக்கான நீதியை தரும் எனவும் சர்வதேச மன்னிப்பு சபையிடம் சுட்டிக் காட்டியுள்ளனர்.

சர்வதேச மன்னிப்பு சபையின் இலங்கைக்கான பிரதிநிதி ஜெலண்டா பொஸ்ரர் உள்ளிட்ட குழுவினர் நேற்றைய தினம் யாழ் மாவட்டத்துக்கு வருகை தந்திருந்தனர்.

இவர்கள், வடக்கு கிழக்கில் காணாமல் போனவர்கள் தொடர்பாக அரசினால் முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்திட்டங்கள், காணாமல் போனவர்களுடைய குடும்ப 24

## சேவைக்குத் திரும்புமாறு அமைச்சர் வேண்டுகோள்

(கொழும்பு)

பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வரும் இலங்கை மின்சார சபையின் ஊழியர்களை கூடுமான விரைவில் பணிக்கு திரும்புமாறும் மின்சக்தி மற்றும் மீள்புத்தாக்கல் அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை, 14 ஆம் 15 ஆம் திகதிகளை சம்பளத்துடனான விடுமுறையாக கருதுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபையின் உயர் அதிகாரிகளுக்கு சம்பளம் வழங்கப்படுகின்றபோது, பாரிய மோசடிகள் இடம்பெறுவதாக கூறி இந்த ஆர்ப்பாட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த குற்றச்சாட்டு உள்ளிட்ட மூன்று கோரிக்கைகளை 24

## 21-ம் திகதி அரசியலமைப்பு சபை கூடி இடைக்கால அறிக்கை வெளியீடு

(கொழும்பு)

அரசியலமைப்புச் சட்டவாக்க சபை எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் கூடவுள்ளதுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இடைக்கால அறிக்கையை சபையில் சமர்ப்பிக்க உள்ளார்.

அரசியலமைப்பு நடவடிக்கை குழு நியமித்த ஆறு உப குழுக்களின் அறிக்கை மற்றும் பொதுமக்களின் கருத்துக்களை கேட்டறிந்து லால் விஜேநாயக்க தயாரித்த அறிக்கையை அடிப்படையாக கொண்டு இந்த இடைக்கால அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த இடைக்கால அறிக்கை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும். இதனையடுத்து இறுதி அறிக்கை தயாரிக்கப்பட உள்ளது. (மு)

## வடக்கு அதிவேக பாதை; உதவ இந்தியா இணக்கம்

(கொழும்பு)

வடக்கு அதிவேக நெடுஞ்சாலையை அமைப்பதற்கு உதவிகளை வழங்க இந்தியா இணங்கியுள்ளதாக தெரியவருகிறது.

அண்மையில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ், ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் நடத்திய பேச்சுக்களின் போதும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன கடந்த வாரம் புதுடெல்லிக்கு மேற்கொண்ட பயணத்தின் போதும் நடத்தப்பட்ட பேச்சுக்களின் போதும், இதற்கான இணக்கப்பாடுகள் காணப்பட்டதாக கூறப்படுகிறது.

இந்திய வெளிவிவகார 24

## கிளி.யில் வாள்வெட்டு நால்வர் படுகாயம்




(பரந்தன்)

கிளிநொச்சியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் நால்வர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலை 24

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கண்ணீர் அஞ்சலி



அமரர்

**செல்லையா யோகநாதன்**

(பெல்ஜியம்)

எமது பாடசாலை ஆசிரியை திருமதி நகுலேஸ்வரி ஜெகதீஸ்வரன் அவர்களின் அன்புத் தந்தை செல்லையா யோகநாதன் அவர்கள் இறைபதமடைந்தமையையிட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவரின் குடும்பத்தினருக்கு அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
கிளி/வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்

(சி-9672)

## இராஜதந்திர சந்தர்ப்பத்தை தவறக்கூடாது மாவை எம்.பி விளக்கம்

தமிழ் மக்களுக்கு நல்லாட்சி அரசாங்கத்தில் கிடைக்கப்பெற்றுள்ள இராஜதந்திர சந்தர்ப்பங்களை இழந்துவிடக்கூடாது என நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா வலியுறுத்தியுள்ளார்.

முல்லைத்தீவு முள்ளியவளையில் சிறந்த சமூக சேவையாளர் விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வில் நேற்று கலந்துகொண்டு உரை யாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இன்று இருக்ககூடிய நல்ல சூழலை நாம் நிராகரித்தால் தமிழ் மக்கள் நிராகரிக்கப்படும் சந்தர்ப்பம் உருவாகும் என மாவை சேனாதிராசா இதன்போது தெரிவித்தார். இந்நிகழ்வில் தமிழரசுக்கட்சி தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய மாவை சேனாதிராசா மற்றும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் வடமாகாண சபை உறுப்பினர் ரிப்கான் பதியுதீன் மாவட்ட அரசாங்க அதிபர ரூபவதி கேதீஸ்வரன் உள்ளிட்ட பலர்கலந்து கொண்டனர்.(மு-281)

## வாகனங்கள் வாடகைக்கு

கார்கள், வான்கள் நாள் வாடகைக்கு விடப்படும்.

**0770295211**

(802)

# தசாப்தம் மூன்று கடந்து சென்றாலும் உங்கள் சகாப்தம் என்றும் தொட்ரும்!!!

அமரர்

**நடராஜா ஐயர் மனோகரன்**



| பூலோக தரிசனம் | சிவலோக தரிசனம் |
|---|---|
| 22.04.1948 | 18.09.1987 |

எங்கள் குலவிளக்கு அணைந்து இன்றுடன் முப்பதாண்டுகள்
பத்திரமாய் எங்களைப் பாதுகாத்த எம் குலதெய்வம்
நாங்கள் நல்லாயிருக்க பாடுபட்ட எங்கள் உயிரே மீண்டும் வருமா
உங்கள் மீள் வருகைக்காக நீங்கள் காட்டிய நல்வழியில்
என்றென்றும் பயணிப்போம்
"வையத்துள் வாள்வாங்கு வாழ்பவன் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"
ஓம் சாந்தி!!! ஓம் சாந்தி!!! ஓம் சாந்தி!!!

விண்ணிலிருந்து தங்களது
ஆசிகளுக்காக என்றென்றும் காத்திருக்கும்
குடும்பத்தினர்.

'மருதகோட்டம்'
ஆஸ்பத்திரி ஒழுங்கை, மானிப்பாய்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

**யோகராசா துஷ்யந்தன்**



(BEd, NDT, SLPS, SLEAS, LLB (following)

எமது பாடசாலை ஆசிரியர் **திரு.யோகராசா துஷ்யந்தன்** அவர்கள்

அதிபர் சேவை போட்டிப் பரீட்சை மூலம் அதிபர் சேவை தரம்-III இனைப் பெற்றுள்ளமையுடன், இலங்கை கல்வி நிர்வாக சேவை தரத்தினையும் பெற்றுள்ளமையினை இன்றைய பிறந்த தின நன்நாளில் உவகையுடன் பாராட்டுவதில் பெருமகிழ்வடைகிறோம்

வாழ்க வளமுடன்
ஆசிரியர் நலன்புரி சங்கம்
யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம், புத்தூர்

(சி-9980)

# 25ஆம் ஆண்டு நினைவாக...



**சிதம்பரப்பிள்ளை சிவகுரு**

திதி:திரயோதசி -18.09.2017
(உதவி ஆணையாளர்
கமநல சேவைகள் திணைக்களம்)

காற்றுடன் நீங்கள் கலந்து
இன்றுடன் 25 வருடங்கள் ஆகிவிட்டன அப்பா
உள்நெஞ்சில் ஆழ் கடல் அன்பால்
எம்மை தோளிலும் மார்பிலும் சுமந்து
எங்களை வழி நடத்தியவர் நீங்கள்
என்றும் நீங்களே எங்கள் வழிகாட்டி
என்றும் நீங்களே எங்கள் இதயதெய்வம்!!!
இந்த மண்ணில் உங்களை போல
இனி யாரை நாங்கள் காண்போம்!

கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

குடும்பத்தினர்

(சி-9662)

# மணி விழா வாழ்த்துக்கள்

**'சிவாகம ஜோதி'**

**சிவஸ்ரீ மு.சண்முகரெட்ணக்குருக்கள்**

(திருகோணமலை திருக்கோணேசர் தேவஸ்தான பிரதம குரு)



வேதவேதாரணிய சுவேதவனப் பெருமான் திருவருளும்
திருகோணமலை ஆலடிப்பிள்ளையார் திருவருளும்
திருகோணமலை திருக்கோணநாதர் பெருவருளும்
எமது தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளியம்மன், இலட்சுமனன்
தோட்டம் ஸ்ரீவீரமாகாளியம்மன் வட பத்திரகாளி அம்மன்
திருவருளும் மணிவிழா நாயகன்
தம்பதியினர்க்கு கிடைக்க வேண்டி வாழ்த்துகின்றோம்.

இங்ஙனம்

- சைவ சித்தாந்த பண்டிதர், சிவாகம உபதேச வாசஸ்பதி, சிவாகம வித்தியா பூஷணம் சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்த ராஜாக் குருக்கள் புவனேஸ்வரி தம்பதியினர். (நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் ஆதீனகர்த்தா)
- சிவஸ்ரீ இராமலிங்க சுந்தரலிங்க குருக்கள் பிரபாலினி தம்பதியினர் (நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவில் பிரதமகுரு)
- சிவஸ்ரீ திருஞானசுந்தர திருஞானசம்பந்தக் குருக்கள் ஜீவிதா குடும்பத்தினர் (முல்லை.குமுழமுனை கற்பக பிள்ளையார் தேவஸ்தானம்)
- சிவஸ்ரீ சண்முகரெட்ணக் குருக்கள் பிரசன்னன் குருக்கள் சங்கீத்தனி குடும்பத்தினர் (திருகோணமலை திருக்கோணேச நாதர் ஆலய பிரதம குரு)



# பொன்சேகாவால் ராணுவ ஆட்சியை ஏற்படுத்த முடியும்!

## அஜித் பிரசன்ன அச்சம்

(கொழும்பு)

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு இருக்கும் அதிகாரத்திற்கு அமைய அவரால் இராணுவ ஆட்சியை கூட ஏற்படுத்த முடியும் என மேஜர் அஜித் பிரசன்ன தெரிவித்துள்ளார்.

இராணுவத்தின் நிரந்தர உறுப்பினரான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகிப்பது அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானது எனவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

சரத் பொன்சேகா சீருடை அணிகிறார். அவர் ஒரு பீல்ட் மார்ஷல். அவர் இன்னும் பீல்ட் மார்ஷலுக்குரிய அதிகாரங்களை பயன்படுத்தவில்லை.

அவர் இராணுவத்தின் நிரந்தர உறுப்பினர் என்பதால், இராணுவத்துடன் தொடர்புகள் உள்ளன.

உத்தரவிடும் அதிகாரங்கள் உள்ளன. நிரந்தரமாக இராணுவத்துடன் தொடர்புகளை கொண்டிருந்த ஹிட்லர் எப்படி ஆட்சியை கைப்பற்றினார் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்படுத்தும் சரத் பொன்சேகாவுக்கு எதிராக கட்டாயம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மேஜர் அஜித் பிரசன்ன மேலும் தெரிவித்தார். (இ-3)

# சகல தேர்தல்களையும் தொகுதிவாரி முறையில் நடத்த அரசாங்கம் முயற்சி

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் வட மத்திய மாகாண சபையின் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பலப்படுத்தி எதிர்வரும் தேர்தல்களில் வெற்றி பெறுவதற்காக ஆற்ற வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாகவும் தற்போது மாகாண சபையில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த ஜனாதிபதி, தற்போது நாட்டில் காணப்படும் விருப்பு வாக்கு தேர்தல் முறையினால் அரசியல்வாதிகள் நாட்டைப் பற்றி சிந்திப்பதற்கு முன்னர் தமது தனிப்பட்ட அரசியல் வெற்றிக்காகவே செயற்படுகின்றனர். இதனால் நாட்டு மக்கள் எதிர்பார்க்கும் வெற்றிகளை பெற்றுக்கொடுக்க முடியாது போயுள்ளது.

அரசாங்கத்தில் காணப்படும், அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் சில தரப்பினர் எதிர்ப்பினை முன் வைத்தபோதிலும் தனது தலைமையின் கீழ் விருப்புவாக்கு தேர்தல் முறைக்குப் பதிலாக தொகுதிவாரி தேர்தல் முறையின் கீழ் உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை கட்சி பேதமின்றி சகல மக்களும் பெற்றுக்கொண்ட வெற்றியாகவே தான் கருதுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நாட்டில் சகல தேர்தல்களும் ஒரே முறையில் நடைபெற வேண்டும் என்பதுடன், அதற்கேற்றவாறு விரைவில் நடைபெறவுள்ள மாகாண சபை தேர்தலை தொகுதிவாரி அடிப்படையில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலையும் விருப்புவாக்கு முறைக்கு பதிலாக தொகுதி வாரி தேர்தல் முறையில் நடத்துவதற்கு தான் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி வலியுறுத்தினார். (இ-3)

# சீனப் பயணத்தை திடீரென இரத்துச் செய்தார் மகிந்த



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அடுத்தவாரம் சீனாவுக்கு மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்த பயணத்தை திடீரென இரத்துச் செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சீனாவின் குவான்சோ நகரில் நடக்கும் கண்காட்சி ஒன்றில் பங்கேற்பதற்காக, எதிர்வரும் 21 ஆம் திகதி மகிந்த ராஜபக்ஷ சீனா செல்லவிருந்தார். அவர் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை அங்கு தங்கியிருக்கவும் திட்டமிடப்பட்டிருந்தது.

குவான்டொங் மாகாண ஆளுநர் மா ஷிங்ரூயின் அழைப்பின் பேரிலேயே மகிந்த ராஜபக்ஷவின் இந்தப் பயணம் இடம்பெறவிருந்தது.

அடுத்தமாதம் மகாராஷ்டிரா மாநிலத்தில் நடக்கும் பௌத்த மத நிகழ்வு ஒன்றில் பங்கேற்க மகிந்த ராஜபக்ஷ, இந்தியா செல்லவிருந்தார். இந்திய மத்திய அரசாங்கத்தின் பின்னணியுடனேயே இந்த நிகழ்வுக்கு அவர் அழைக்கப்பட்டிருந்தார்.

இந்தப் பயணத்தின்போது, மகிந்த ராஜபக்ஷவுடன், இந்திய அரசு பேச்சுக்களை நடத்துவதற்கு திட்டமிட்டிருந்த நிலையில், சீன அரசாங்கம், குவான்டொங் ஆளுநர் மூலம், மகிந்தவுக்கு அழைப்பை அனுப்பியிருந்தது.

இதையடுத்து, இந்தியப் பயணத்துக்கு முன்னர், சீனப் பயணத்தை மேற்கொள்ள மகிந்த ராஜபக்ஷ திட்டமிட்டிருந்தார்.

இது இந்தியாவுக்கு எரிச்சலை ஏற்படுத்தியிருந்ததாக செய்திகள் வெளியாகியிருந்த நிலையிலேயே, சீனப் பயணத்தை மகிந்த ராஜபக்ஷ திடீரென கைவிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-3)

# சூழ்ச்சிகளால் அரசை கவிழ்க்க முடியாது

## அமைச்சர் வஜிர நம்பிக்கை



(கொழும்பு)

சூழ்ச்சிகள் மற்றும் சதி நடவடிக்கைகளால் இந்த அரசாங்கத்தைக் கவிழ்க்க முடியாது என்று உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலவரங்கள் மற்றும் 20வது திருத்தச்சட்டம் தொடர்பில் சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கியுள்ள நேர்காணலில் அமைச்சர் வஜிர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த அரசாங்கம் அரச பணியாளர்கள் உள்ளிட்ட அனைவரது நலனை முன்னிட்டும் பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்துள்ளது.

ஆனால் கடந்த அரசாங்கத்தின் காலத்தின் நாட்டைச் சீரழித்தவர்கள் இன்று அரசாங்கத்துக்கு எதிராக குற்றச்சாட்டுகளை முன்வைக்கத் தலைப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் டிசெம்பர் மாதத்தின் பின்னரும் தேசிய அரசாங்கம் தொடர்பான இரு கட்சி உடன்படிக்கை நீடிக்கப்படும். ஜனாதிபதி மற்றும் பிரதமர் அதற்கான இணக்கப்பாட்டுடன் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# கைதிகள் இருவர் தப்பியோட்டம்

பொலநறுவையில் கைதிகள் இருவர் தப்பியோடியுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொலநறுவை புதிய நகரப் பகுதியில் இருக்கும் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட இரண்டு கைதிகளே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. (இ-3)

# அருந்திகவின் வருகையால் கூட்டு எதிரணியில் குழப்பம்

பதவி பறிக்கப்பட்ட முன்னாள் பிரதியமைச்சர் அருந்திக மீண்டும் கூட்டு எதிர்க்கட்சியில் இணைந்துகொள்வதை புத்தளம் மாவட்ட பொதுஜன பெரமுன கட்சி ஆதரவாளர்கள் விரும்பவில்லை என்று தெரிய வந்துள்ளது.

இது தொடர்பாக கடந்த வாரம் புத்தளம் மாவட்ட ஆதரவாளர்கள் ஒன்றிணைந்து கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்தவிடம் முறையிட்டுள்ளனர்.

அதற்குப் பதிலளித்த அவர் கட்சியை வலுப்படுத்துவதற்காக அருந்திக மட்டுமன்றி இன்னும் பலரையும் கட்சிக்குள் உள்வாங்கும் தேவை இருப்பதாக தெரிவித்துள்ளார்.

அதே நேரம் எவர் வந்தாலும் கட்சியின் எந்தவொரு ஆதரவாளருக்கும் அநீதி இழைக்கப்படமாட்டாது என்றும் உறுதியளித்துள்ளார். (இ-7)

# மாவை சேனாதிராசா தலைமையில் புரட்டாதி சனியன்று கூடுகிறது தமிழரசுக் கட்சியின் மத்திய குழு!

புதிய அரசமைப்பை உருவாக்கும் வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை, வடக்கு மாகாண அமைச்சரவை விவகாரம் உள்ளிட்ட சமகால அரசியல் விவகாரங்கள் தொடர்பாக, முக்கிய முடிவுகளை எடுப்பதற்காக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை அம்பாறையில் நடைபெறவுள்ளது.



தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை. சேனாதிராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுத் தலைவருமான இரா.சம்பந்தன், தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளரும் கிழக்கு மாகாண சபை அமைச்சருமான கி.துரைராஜசிங்கம் மற்றும் தமிழரசுக் கட்சியின் வடக்கு, கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபைகளின் அமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், மத்திய செயற்குழு உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

வடக்கு மாகாண சபையின் அமைச்சரவையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி பங்கேற்பதில்லை என்று அந்தக் கட்சியின் மாகாண சபை உறுப்பினர்கள் தீர்மானித்திருந்தனர். இந்தத் தீர்மானத்தை அங்கீகரிக்குமாறு கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்துக்கு அனுப்பியிருந்தனர். கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் கடந்த மாதம் நடத்துவதற்குத் திட்டமிட்டிருந்தபோதும் அது பின்னர் ஒத்திவைக்கப்பட்டது.

இரண்டு தடவைகள் ஒத்திவைக்கப்பட்ட இந்தக் கூட்டம் எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் வடக்கு மாகாண அமைச்சரவை விவகாரம் மட்டுமன்றி, புதிய அரசமைப்பை உருவாக்கும் வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை மற்றும் சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டு முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-3)

# நாய் கடித்து பச்சிளம் குழந்தை பலி!

பிறந்து ஒருவாரமேயான பச்சிளம் குழந்தையொன்று நாய்க்கடிக்கு இலக்காகி உயிரிழந்த சோக சம்பவம் ஒன்று பொலநறுவையில் இடம்பெற்றுள்ளது. பொலநறுவை மாவட்டத்தின் ஹபரணை, நாமல் புர பிரதேசத்தில் இந்த துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இப்பிரதேசத்திலுள்ள வீடொன்றினுள் பிறந்து ஏழு நாட்களே ஆகியிருந்த குழந்தை தூங்கிக் கொண்டிருந்துள்ளது. இதன்போது அயலவர்களினால் வளர்க்கப்பட்ட நாயொன்று வீட்டினுள் புகுந்து தூங்கிக் கொண்டிருந்த குழந்தையை கடித்துள்ளது.

நாய்க்கடிக்கு இலக்கான குழந்தை படுகாயமடைந்துள்ளது. இதனையடுத்து குழந்தையின் உறவினர்கள் உடனடியாக குழந்தையை ஹபரணை வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றுள்ளனர். குழந்தையின் நிலை கவலைக்கிடமாக இருந்ததால் அங்கிருந்து தம்புள்ளை பொது வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்ட நிலையில் குழந்தை பரிதாபகரமாக நேற்றுக்காலை உயிரிழந்துள்ளது. (இ-3)

# சென்னை மண்ணு தங்க மண்ணு தல தோனி ஆடினார் சிங்கமுன்னு முதலாவது ஒரு நாள் போட்டியில் இந்தியாவிடம் வீழ்ந்தது ஆஸி

சென்னை மகராசன் தல தோனி, தனது 2ஆவது தாய்வீடான சென்னையில் பாண்ட்யா வோடு இணைந்து சிங்கம் போல ஆட அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான முதலாவது ஒரு நாள் போட்டியில் இந்திய அணி டக்வேர்த் லூயிஸ் முறையில் 26 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

11 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை இழந்த இந்திய அணி, 87 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறிய வேளை ஹர்திக் பாண்ட்யாவோடு இணைந்த தோனி, தங்கமான சென்னை மண்ணில் சிங்கம் போல ஆடி 6ஆவது விக்கெட்டுக்காக பகிர்ந்த 118 ஓட்டங்களால் ஆட்டத்தின் போக்கை மாற்றியதுடன் இந்திய அணியின் வெற்றிக்கு வித்திட்டார்.



சுமார் 24 மாதங்களுக்குப்பின் தோனியின் துடுப்பாட்டத்தை அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டியில் காணும் வாய்ப்பு சென்னை ரசிகர்களுக்கு கிடைத்தது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

இத்தொடரின் முதல் ஒரு நாள் போட்டி நேற்று சென்னை சேப்பாக்கத்தில் நடந்தது. நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் ஹோலி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

இந்திய அணியில் சுழற்பந்துவீச்சாளர்கள் குல்தீப் யாதவ், சகால் இடம் பிடித்தனர். லோகேஷ் ராகுல், ஜடேஜாவுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. அவுஸ்திரேலிய அணியில் ஹில்டன் கார்ட்ரைட் அறிமுக வாய்ப்பு பெற்றார்.

### ஹோலி அதிர்ச்சி

இந்திய அணிக்கு ரோகித், ரகானே ஆரம்பம் கொடுத்தனர். குல்டர்-நைல் 'வேகத்தில்' ரகானே (5) ஆட்டமிழந்தார். தொடர்ந்து குல்டர், அபாரமாக பந்துவீசினார். இவரது பந்தில் அணித் தலைவர் ஹோலி 'டக்-அவுட்டாகி' அதிர்ச்சி அளித்தார். பின், வந்த மணிஷ் பாண்டேவும் 'டக்-அவுட்டாக' இந்திய ரசிகர்கள் ஏமாற்றம் அடைந்தனர். ரோகித் 28 ஓட்டங்களில் வெளியேறினார். ஆறுதலாக செயல்பட்ட ஜாதவ் 40 ஓட்டங்களில் ஸ்டாய்னிஸ் பந்தில் திரும்பினார்.

### தோனி அரை சதம்

பின், இணைந்த தோனி, ஹர்திக் பாண்ட்யா ஜோடி சிறப்பாக செயல்பட்டது. ஜாம்பா வீசிய 37ஆவது ஓவரில் தொடர்ந்து ஒரு பவுண்டரி, 'ஹட்ரிக்' சிக்ஸர் விளாசிய பாண்ட்யா அரை சதம் கடந்தார். இவர் 83 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பொறுப்புடன் விளையாடிய தோனியும் அரை சதம் எட்டினார். தொடர்ந்து அசத்திய இவர் போல்க்னர் பந்துவீச்சில் இரண்டு பவுண்டரி, ஒரு சிக்ஸர் அடித்து ரசிகர்களை மகிழ்வித்தார். தோனி 79 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இறுதியில் இந்திய அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 281 ஓட்டங்கள் எடுத்தது. புவனேஷ்வர் (32) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

### இலக்கு மாற்றம்

போட்டி மழையால் சுமார் 2:30 மணி நேரம் பாதிக்கப்பட்டது. இதனால், அவுஸ்திரேலிய அணிக்கு 21 ஓவர்களில் 164 ஓட்டங்கள் என இலக்கு மாற்றி அமைக்கப்பட்டது.

அவுஸ்திரேலிய அணிக்கு கார்ட்ரைட், அணித் தலைவர் ஸ்மித் தலா ஒரு ஓட்டத்தில் ஆட்டமிழந்தனர்.பாண்ட்யா பந்தில் டிராவிஸ் ஹெட் (5) ஆட்டமிழந்தார். வோர்னர் 25 ஓட்டங்கள் எடுத்தார். குல்தீப் பந்துவீச்சில் மக்ஸ்வெல் 'ஹட்ரிக்' சிக்ஸர் விளாசினார். இவர் 39 ஓட்டங்களில் திரும்பினார். ஸ்டாய்னிஸ் (3), வேட் (9) உள்ளிட்டோர் ஏமாற்ற,

ஆஸ்திரேலிய அணி 21 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 137 ஓட்டங்கள் எடுத்தது. போல்க்னர் (32), ஷாம்பா (5) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இதன் மூலம், இந்திய அணி 'டக்-வோர்த் லூயிஸ்' விதிப்படி 26 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்டநாயகனாக இந்திய அணியின் ஹர்திக் பாண்ட்யா தெரிவானார்.

இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது ஒரு நாள் போட்டி வரும் 24ஆம் திகதி கொல்கத்தாவில் ஆரம்பமாகிறது.

## ரி20இல் தனது வெற்றி வேட்கையை தொடரும் மேற்கிந்தியத் தீவுகள்




இங்கிலாந்து அணிக்கெதிரான ஒரே யொரு ரி20 போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இங்கிலாந்து சென்றுள்ள மேற்கிந்திய தீவுகள் அணி டெஸ்ட், ஒருநாள் மற்றும் ரி20 தொடரில் விளையாடி வருகிறது.

இதில் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை இங்கிலாந்து அணி 2-1 என கைப்பற்றிய நிலையில்,

இரு அணிகளுக்கிடையேயான ஒரே யொரு ரி20 கிரிக்கெட் போட்டி செஸ்டர்-லிஸ்டிரிட் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத் தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணிக்கு கிறிஸ் ஹெயிலும் எவின் லூயிஸும் ஆரம்பம் வழங்கினர்.

தொடக்கம் முதலே இந்த ஜோடி அதிரடியாக விளையாடியது. அணியின் ஓட்ட எண்ணிக்கை 77ஐ தொட்டபோது கிறிஸ் ஹெயில் 40 ஓட்டங்களில் (3 பவுண்., 4 சிக்ஸ்) ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து மார்லன் சாமுவேல்ஸ் களமிறங்கினார். சிறப்பாக விளையாடிய லூயிஸ அரைசதம் அடித்தார். அவர் 51 ஓட்டங்களில ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்துவந்த வீரர்களில் ரோவ்மேன் பவல் மட்டும் சற்று நிலைத்துநின்று விளையாடி 28 ஓட்டங்கள் எடுத்தார். மற்றையவர்கள் சொற்ப ஓட்டங்களில் வெளியேறினர்.

20 ஓவர்கள் முடிவில் மேற்கிந்திய தீவுகள் அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 176 ஓட்டங்கள் குவித்தது. இங்கிலாந்தின் லியாம் பிளங்கெற், அடில் ரசீத் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

177 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து அணி களமிறங்கியது.

தொடக்க வீரரான ஜேசன் ரோய் முதல் பந்திலேயே ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தார். அடுத்து அலெக்ஸ் ஹேல்ஸுடன் ஜோ ரூட் ஜோடி சேர்ந்தார். அணியின் ஓட்ட எண்ணிக்கை 64ஆக இருக்கும்பொழுது ஹேல்ஸ் 43 ஓட்டங்களில் போல்டானார். அடுத்து களமிறங்கிய இயன் மோர்கன் 2, ஜோ ரூட் 17, ஜோஸ் பட்லர் 30, ஜொனி பேர்ஸ்டோ 27 ஓட்டங்களில் வெளியேற,

இங்கிலாந்து அணி 19.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 155 ஓட்டங்களை மட்டுமே எடுத்து 21 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

பந்துவீச்சில் மேற்கிந்திய தீவுகள் சார்பில் கெஸ்ரிக் வில்லியம்ஸ், கார்லோஸ் பிரத்வெயிட் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் சுனில் நரேன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இவ்வெற்றி மூலம் மேற்கிந்தியத் தீவுகள் ரி20 தொடரை கைப்பற்றியது. போட்டியின் ஆட்டநாயகனாக மேற்கிந்திய தீவுகளின் சுனில் நரேன் தெரிவானார்.

இரு அணிகளுக்கிடையேயான முதலாவது ஒரு நாள் போட்டி நாளை மன்செஸ்டரில் தொடங்குகிறது.

## மாணவிக்கு தொலைபேசி இலக்கத்தை கொடுத்த ஆசிரியருக்கு நடந்த விபரீதம்

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற க.பொ.த உயர்தர பரீட்சையின் போது பரீட்சை எழுதிக்கொண்டிருந்த மாணவியிடம் தொலைபேசி இலக்கத்தினை வழங்கிய ஆசிரியருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் மு.இராதகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், சில வாரங்களுக்கு முன்பு க.பொ.த உயர் தர பரீட்சைகள் இடம்பெற்றன. இதன்போது வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற பரீட்சையின்போது அங்கு பரீட்சை எழுதிக்கொண்டிருந்த மாணவி யொருவருக்கு (தனியார் விண்ணப்பதாரி) கடமையிலிருந்த மேற்பார்வையாளர் பிறிதொரு ஆசிரியரிடம் அவரது தொலைபேசி இலக்கத்தினை வழங்கி குறித்த மாணவியிடம் வழங்குமாறு பணித்துள்ளார்.

குறித்த மேற்பார்வையாளரின் வேண்டுகோளுக்கிணங்க ஆசிரியர் மாணவியிடம் தொலைபேசி இலக்கத்தினை வழங்கியுள்ளார்.

குறித்த மாணவி பரீட்சை முடிவடைந்தவுடன் பரீட்சை நிலைய பொறுப்பதிகாரியிடம் இது குறித்து முறையிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக குறித்த ஆசிரியரை இட மாற்றியுள்ளதாக வலயக்கல்வி பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை குறித்த ஆசிரியர் மீது இவ்வாறான மேலும் முறைப்பாடுகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு-250)


## மண்டைதீவு மக்கள் முன்னேற்ற ஒன்றியம்

## 2015, 2016ஆம் ஆண்டுக்கான கௌரவிப்பும் பரிசில் வழங்கலும்

மண்டைதீவு மக்கள் முன்னேற்ற ஒன்றியம் மண்டைதீவு மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்று G.C.E (O/L) சித்தி பெற்ற மாணவர்களையும் வெளியூர்களில் கல்வி பயின்று பல்கலைக்கழக அனுமதி பெற்ற மண்டைதீவைச் சேர்ந்த மாணவர்களையும் கௌரவித்து பரிசில் வழங்கத் தீர்மானித்துள்ளது.

இதன்படி 2015ஆம், 2016ஆம் ஆண்டுகளில் தகுதியான மாணவர்கள் தங்கள் விபரங்களைத் தத்தமது பாடசாலை அதிபர்களூடாக உறுதிப்படுத்தி ஒன்றியத்தின் காப்பாளருக்கு 25.09.2017க்கு முன்னர் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

வெளியூர்களில் பயின்ற மாணவர்கள் பெற்றிருக்க வேண்டிய தகைமைகள் பின்வருமாறு,


❖ 2015, 2016ல் G.C.E (O/L) - சித்தி பெற்று 9A - 9C பெற்ற மாணவர்கள் மட்டும்.
❖ 2015, 2016ல் G.C.E (A/L) - சித்தி பெற்று பல்கலைக்கழகம் சென்றவர்கள் மட்டும்
❖ 2015, 2016ல் தரம் 5 புலமைப்பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் மட்டும்

இறுதி முடிவு மக்கள் முன்னேற்ற ஒன்றியத்தின் நிர்வாக சபைக்கே உரியதாகும்.

**மக்கள் முன்னேற்ற ஒன்றியம்**
**மண்டைதீவு**

**வே.ஞானோதரன்**
**காப்பாளர்**

# தன் இனத்திற்காக மெழுகாய் உருகியவனின் நினைவேந்தல்




இந்திய அரசிடம் ஐந்து அம்சக் கோரிக்கையை வைத்து உண்ணாவிரதம் இருந்து மரணித்த தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வின் மூன்றாம் நாள் நிகழ்வுகள் நேற்றுக்காலை 9மணியளவில் நல்லூரில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. நினைவேந்தல் குழுவைச் சேர்ந்த சு.சுதாகரன், திலீபனின் திருவுருவப்படத்திற்கு சுடர் ஏற்றினார். அதனை அடுத்து தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் மலர்மாலை அணிவித்தார். தொடர்ந்து மாணவிகள் மற்றும் பொது மக்கள் மலர் அஞ்சலி செலுத்தினர். (படங்கள்:- உ.சாளின்)

## வாழ்வாதாரத்தை அபகரிக்கும் திருடர்கள்!

(யாழ்ப்பாணம்)

வாழ்வாதார உதவியாக வழங்கப்பட்ட 70 ஆயிரம் ரூபாய் பெறுமதியான இரண்டு ஆடுகள் களவாடப்பட்டுள்ளதாக குடும்பத் தலை வர் ஒருவரால் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிகாலை 3 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற் றுள்ளது.

புத்தூர் கிழக்கு ஈசவன் கோவிலடிசை சேர்ந்த சிவராசன் என்பவரின் ஆடுகளே திருடப்பட்டுள்ளன.

குறித்த ஆடுகள் கட்டப்பட்டிருந்த கொட்டகைக்கு அருகே இருந்த வேலி பிரித்து ஆடுகள் திருடப்பட்டுள் ளன. சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை அச்சுவேலி பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

புத்தூர் பிரதேசத்தில் வறுமைக் கோட்டின் கீழுள்ள குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவியாக வழங்கப்பட்ட கால்நடைகள் தொடர்ச்சியாக களவாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## விழிப்புணர்வு கண்காட்சி

சாவகச்சேரி வைத்திய அதிகாரிப் பிரிவிற்குட்பட்ட குடும்பநல உத்தியோகத்தர்கள் மற்றும் தாய்மார் கழகம் இணைந்து நடத்தும் சுகாதாரம் மற்றும் போசாக்கு விழிப்புணர்வுக் கண்காட்சி இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி சுகாதார வைத்தியப் பணிமனையில் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி க.தயாளன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வேல்ட்விசன் லங்கா நிறு வனத்தின் சாவகச்சேரி பிரதேச அபிவிருத்தித் திட்ட முகாமையாளர் ஜி.றொசைறோ கலந்து கொள்வார். (இ-10-29)

## விவசாயக் கண்காட்சி நாளை யாழில் ஆரம்பம்

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளக்கூடிய சந்தையை நோக்கிய நிலைபேறானவிவசாயம்எனும்தொனிப் பொருளிலான விவசாயக் கண்காட்சி நாளை 19ஆம் திகதிசெவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை வரை 5 நாட்கள் காலை 9.30 மணிமுதல் இரவு 8 மணிவரை யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் இடம் பெறவுள்ளது.

வடமாகாணவிவசாயஅமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக வடமாகாண விவசாயமும் கமநல சேவைகளும் கால்நடை அபிவிருத்தி நீர்ப்பாசன அமைச்சர் க.சிவநேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## மீனவர்களுக்கு உதவிகள் வழங்க மீளாய்வு விண்ணப்பங்கள் கோரல்

கடற்றொழில் திணைக்களத்தினால் இயற்கை இடர் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கான உதவித்திட்டம் வழங்குவதற்கான மீளாய்வு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள் ளன. இயற்கை இடர் மற்றும் பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் தங்கள் பிரதேச மீனவர் சங்கத்திடம் மேற்படி விண்ணப்பங்களை பெற்று குறித்தஅனர்த்தம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தால் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பி வைக்குமாறு கடற்றொழிலாளர் திணைக்களத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (இ-10-107)

## இளங்கலைஞர் மன்றம்
## அனைத்து கலைஞர்களுக்குமான அறிவித்தல்

கலைஞர்களின் மேம்பாட்டுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று சட்டநாதர் வீதியிலுள்ள இளங்கலைஞர் மன்ற கலா மண்டபத்தில் 24.09.2017 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. அங்கத்துவமுள்ள அங்கத்துவமற்ற அனைத்து கலைஞர்களையும் தவறாது கலந்து கொண்டு பயன்பெறுமாறு அன்புடன் அழைப்பதோடு அனைத்து அங்கத்தவர்களும் தங்கள் அங்கத்துவத்தை எதிர்வரும் 05.10.2017 இற்கு முன்பு புதுப்பித்துக் கொள்வதோடு மன்றத்துடன் இணைய விரும்புவோர் புதிய விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்து இணைத்துக் கொள்ளலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிர்வாகசபை (சி-9669)

## மோதிரத்தை தொலைத்ததால் சிறுமிக்கு சூடு வைத்த தாய்!

தங்க மோதிரத்தைத்தொலைத்ததால் ஆத்திரம் அடைந்த தாய் தனது 7 வயது மகளுக்கு, கரண்டியால் சூடு வைத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில், அச்சிறுமியின் தாய் கைது செய்யப்பட்டுள்ளாரென, ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் ஏறாவூர்பொலிஸ் பிரிவில் பள்ளியடி வீதியை அண்டியுள்ள வீட்டில் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றுள்ளது.

மத்ரசாவுக்கு அல்குர் ஆன் ஓதல் பயிற்சி வகுப்புக்காகச் சென்றிருந்த மேற்படி சிறுமி. வீடு திரும்பும் போது அவள் அணிந்திருந்த மோதிரம் இல்லாதிருப்பதைக் கண்ட தாய் ஆத்திரப்பட்டு, சிறுமிக்கு நெஞ்சுப் பகுதி, கால்பாதம், கைகள், வயிற்றுப் பகுதி ஆகியற்றில் கரண்டியால் சூடு வைத்துள்ளார்.

சிறுமியின் அவலக் குரல் கேட்ட அயலவர்கள், இது குறித்து பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

உடனடியாக ஸ்தலத்துக்கு விரைந்த பொலிஸார், சிறுமியை மீட்டு, ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்ததோடு, தாயைக் கைது செய்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட சிறுமி, மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட தாயை, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தனது தாய்தான் தனக்கு சூடு வைத்ததாக பொலிஸ் வாக்குமூலத்தில் சிறுமி தெரிவித்துள்ளார். இச்சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (இ-3)

## இராசி பலன்

18.09.2017
(புரட்டாதி 02, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
திரயோதசி பிற்பகல் 1.27 மணிவரை
மகரம் பின்னிரவு 12.28 மணிவரை
சுபநேரம் 12.03-1.33 மணிவரை
இராகுகாலம் 7.33-9.03 மணிவரை
சஸ்திரஹத மஹாளயம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>உத்தராடம்,<br>திருவோணம் | | ராகு |
| கேது | | | செவ்,<br>புத,சுக்<br>சந் |
| | சனி | குரு | சூரி |

**மீனம்:** அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள், உடல் நலனில் ஏற்பட்ட பாதிப்புக்கள் அகலும், உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள்.

**மேடம்:** சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம் பெறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**இடபம்:** வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், தொழி லில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மிதுனம்:** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், பொதுப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்:** மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றையும் செய்து முடிப்பீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**கடகம்:** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடக்கலாம், புதிய பொருட்சேர்க்கையுண்டு, உங்கள் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும்.

**மகரம்:** நிதானத்தோடு செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள், உதவுவதாகச் சொல்லியவர்கள் உங்களை விட்டு விலகலாம், பயணத்தின் போது பெருமளவில் கவனம் தேவை.

**சிம்மம்:** நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், திட்டமிட்ட காரியங்களில் திடீர் மாற்றங்கள் ஏற்படலாம்.

**தனுசு:** சாமர்த்தியமாக பேசி சமாளிப்பீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடருவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**விருச்சிகம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், பணத் தேவைகள் எளிதில் கௌரவமான நாள், போசன நன்மையுண்டு.

**துலாம்:** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், செய் தொழில் மேன்மையுண்டு, எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம்.

**கன்னி:** சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், உடல் நலனில் ஏற்பட்ட பாதிப்புக்கள் அகலும்.

# யாழ்.பொதுநூலகம் தீக்கிரையாக்கப்பட்ட போது இப்படியும் நடக்குமோ என்று சினந்தவன் நான்

## வடமாகாண முதலமைச்சர் கவலையுடன் சுட்டிக்காட்டு

யாழ்.பொது நூலகம் கயவர் கூட்டத்தினால் முற்றாக தீக்கிரையாக்கப்பட்ட போது அதனை எண்ணிக் கலங்கியவர்களில் நானும் ஒருவன். இப்படியும் நடக்குமோ என்று சினந்தவன் நான் என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கவலையுடன் தெரிவித்தார்.

ஏழாலையைச் சேர்ந்த சிவலிங்கம் சிவகாந்தனின் சமூகநல சேவைகளைப் பாராட்டி கௌரவிக்கும் விழா விழிசிட்டி பாடசாலை மைதானத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சரவை மாற்றங்களின் பின்னர் எழுந்துள்ள மிகக் கூடிய வேலைப்பளுக்களுக்கு மத்தியில் தம்பி பாலச்சந்திரன் கஜதீபனின் வலுக்கட்டாயமான அழைப்பை தட்ட முடியாதுதான் இந்த நிகழ்விற்கு வருகை தந்திருக்கின்றேன். என்னை வலுக்கட்டாயமாக அழைத்து விட்டு அவர் ஜெனிவா நோக்கி பயணமாகி விட்டார்.

சிவலிங்கம் சிவகாந்தை சுமார் 2 அல்லது 3 வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் ஒரு வைபவத்தில் முதன் முறையாக சந் தித்தேன். ஆசியாவிலேயே சிறந்த நூல் நிலையமாக அக் காலத்தில் அடையாளப படுத்த ப்பட்ட யாழ். பொதுநூலகம் கயவர் கூட்டத்தினால் முற்றாக தீக்கிரையாக்கப்பட்ட போது அதனை எண்ணிக் கலங்கியவர்களில் நானும் ஒருவன்.

இப்படியும் நடக்குமா என்று சினந்தவன் நான். அப்போது நான் சாவகச்சேரி மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றினேன். 1981ஆம் ஆண்டு ஜூன் மாதம் 2 ஆம் திகதி அதிகாலை என்று நினைக்கின்றேன்.

அப்போதைய சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, ஒரு சிங்கள அலுவலர்தான், ஒரு வருடைய மரணவீட்டை அறிவிப்பது போல அறிவித்தார். "சேர்!மிகவும் வருந்தத் தகுந்தவிடயமொன்று நேற்றிரவு நடந்துள்ளது. எமது இராணுவத்தினர் சிவில் உடையில் சென்று இங்குள்ள யாழ். நூலகத்தை எரித்து விட்டார்கள். அமைச்சர் காமினி திசாநாயக்க அப்போது அங்கிருந்தார். சிங்களமக்கள் வெட்கித் தலைகுனியும் ஒரு வெறியாட்ட நிகழ்வு நேற்றிரவு நடந்துள்ளது" என்று வருத்தத்துடன் தெரிவித்தார். அந் நூல் நிலையம் இன்று மீளப் புதுப்பிக்கப்பட்டு இயங்குகின்ற போதும் அவர்களின்



அப்போதிருந்த 95,000 க்கு மேலான நூல்கள் எரிந்தவை எரிந்தவைதான்.

எமது நூலகத்தின் புத்தகத்தேவைகளை நன்கு உணர்ந்து கொண்ட சிவகாந்தன் லண்டனில் இருந்து தருவிக்கப்பட்ட ஒரு தொகுதி புத்தகங்களையும் போட்டோக் கொப்பி இயந்திரம் ஒன்றையும் நூல் நிலையத்தில் வைத்து எனது கைகளில் ஒப்படைத்திருந்தார். அவை அப்போதைய நூலகரிடம் வழங்கப்பட்டன. அப்போது நான் சிவகாந்தனின் பொதுப் பணிகள் தொடர்பாக அவ்வளவாக அறிந்திருக்கவில்லை. மீண்டும் கஜதீபனுடன் என்னை இவ் விழாவிற்கு அழைக்க வந்திருந்த போதே இவர் பற்றிய மேலதிகமான தகவல்களைப் பெற்றுக் கொண்டேன். சிவகாந்தன் லண்டனில் கணக்காளராக பணியாற்றுகின்றார் எனவும் அவர் லண்டனில் வாழ்கின்ற போதும் அவருடைய சிந்தனைகள் தாம் பிறந்த மண்,தமது உறவுகள் ஆகியவை மீதே தொடர்ந்து இருந்து வந்துள்ளது எனவும் கூறப்பட்டது.

தெருத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு அடித்த கதையாக ஒரு சிறு மூக்குக் கண்ணாடியை வழங்கி விட்டு அதனைப் படம் பிடித்து இங்கே வெளியாகின்ற அனைத்துப் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கும் சமூக சேவையாளர்கள் மத்தியில் சிவகாந்தனின் வலக்கை கொடுப்பது இடக்கைக்கு தெரியாது பல பொதுப் பணிகளைச் செய்து வருகின்றார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-11)




# நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

யாழ்.அத்தியார் இந்துக்கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் பாடசாலை அதிபர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டு மற்றும்இளைஞர் விவகார அமைச்சர் கலாநிதி. கந்தையா சர்வேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் சிதம்பரப்பிள்ளை மாணிக்கராசா, பொன்னுத்துரை சிவசுப்பிரமணியம் (லண்டன்) ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இந்நிகழ்வில் நிறுவுநர் நினைவுப் பேருரையினை கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் அதிபரும் பழைய மாணவருமான வே.கா.கணபதிப்பிள்ளை வழங்கவுள்ளார். (இ-3)

# மோ.சைக்கிள் தடம்புரள்வு!

## இளைஞன் படுகாயம்

வேகக் கட்டுப்பாட்டையிழந்த மோட்டார்சைக்கிள் வீதியை விட்டு விலகி தடம் புரண்டதில் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில்யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் கொழும்புத்துறை விதானையார் வீதியிறுள்ள வளைவொன்றில் திரும்பும் போது வேகக்கட்டுப்பாட்டையிழந்த மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி தடம் புரண்டதில் கொழும்புத்துறையைச் சேர்ந்த சுவக்கீன் எடிசன் (வயது-22) என்பவரே படுகாயடைந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாண பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-10-51)

# பெயர் மாற்றமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத்தை யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் எனப் பெயர் மாற்றம் செய்து புதிய நிர்வாகத் சபைத் தெரிவும் அண்மையில் இடம்பெற்றது. இதில் தலைவராக ஆ.உதயசங்கர், செயலாளராக சி.தர்சன், பொருளாளராக சி.அருட்செல்வம், உப தலைவராக ந.பிரபாகரன், உப செயலாளராக அ.அல்பேட், கண்காணிப்புக் குழுத் தலைவராக கு.மதன்ராஜ், போசகராக சி. இரத்தினகுமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (இ-3)

# சிங்களம் மீது வெறுப்புக்கு தனிச்சட்டம் தான் காரணம்

## தேசிய மொழிகள் அமைச்சர் மனோவுக்கு யாழில் சுட்டிக்காட்டு

தனிச்சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்டமையால் தான் தமிழ் மக்கள் சிங்கள மொழியை கற்பதில் இப்போதும் வெறுப்பு காட்டி வருகின்றனர் என தேசிய மொழிகள் மற்றும் சகவாழ்வுக்கான அமைச்சர் மனோ கணேசனுக்கு யாழ்.சிவில் சமூக பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். மேலும் தமிழ் மக்களுக்கு சிங்கள மொழி கற்பிப்பதில் காட்டும் ஆர்வத்தை, சிங்களவர்களுக்கு தமிழ் மொழி கற்பிப்பதிலும் காட்டுமாறும் அறிவுரை கூறியுள்ளனர்.

யாழ்.சிவில் சமூக பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் முற்பகல் நடைபெற்றது. இதன் போது தமிழ் மக்கள் சிங்கள மொழி கற்பதில் ஆர்வம் காட்டுகின்றனர் இல்லை



எனவும், இதனால் இனங்களுக்கு இடையே புரிந்துணர்வு இல்லாமல் போகின்றது எனவும் அமைச்சர் மனோகணேசன் வருத்தம் தெரிவித்திருந்தார். அமைச்சருடைய இந்த கருத்தை அடுத்தே சிவில் சமூக பிரதிநிதிகளால் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் சிங்கள மொழி கற்பதில் ஆர்வத்துடன் தான் உள்ளார்கள். 1956 ஆம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வரப்படுவதற்கு முன்னர் தமிழ் மக்களில் பெருமான்மையானோர் நன்றாகவே சிங்கள மொழி தெரிந்தவர்களாகவே இருந்தார்கள். தாமாகவே விரும்பி சிங்கள மொழியை கற்று வந்தார்கள். ஆனால் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்ட பின்னரே சிங்கள மொழியையும் மக்களையும் தமிழ் மக்கள் வெறுக்க ஆரம்பித்தார்கள். தற்போது வரை அந்த வெறுப்பு தொடர்கின்றது.

சிங்களம் தான் உயர்ந்தது என்ற மனநிலை இப் போதும் சிங்களவர்களிடத்தே உள்ளது. அந்த மனநிலை மாற்றப்பட வேண்டும். அதன் பின்னர் மும்மொழி கொள்கை என்பது சமத்துவத்துடன் அமுல்படுத்தப்பட வேண்டும். சிங்கள மக்களும் தமிழ்மொழியை கற்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். தனியே தமிழர்கள் தான் சிங்களம் படிக்க வேண்டும் என்பதில் அர்த்தமில்லை. அதனால் உண்மையான புரிந்துணர்வு ஏற்பட போவதில்லை.

மேலும் பாடசாலைகளில் சிங்கள மொழியை கற்பிப்பதற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். அதன் மூலம் ஆரம்ப பராயத்தில் இருந்தே சிங்களம் தெரிந்தவர்களாக வளர முடியும் எனவும் சில சிவில் சமூக பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியிருந்தனர். இது தொடர்பில் தமது அமைச்சு ஏற்கனவே தீர்மானித்துள்ளதாக அமைச்சர் மனோகணேசன் தெரிவித்தார். (இ-[illegible])







இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் வருடாந்த ஓய்வூதியதாரர்கள் கௌரவிப்பும் புலமைப்பரிசில் பரிசளிப்பு விழாவும் நேற்று முன்தினம் காலை நாவலர் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் வங்கி முகாமையாளர்கள், ஊழியர்கள், நிறுவன தலைவர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள் :-உ.சாளின்)

115

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?

பிட்டார். இது தொடர்பில் தனியான விசாரணை நடத்து மாறு பொலிஸாருக்கு நீதிபதி உத்தர விட்டதுடன் சந்தேகநபர் தப்பித்துச் செல்லும் முயற்சிக்கு உடந்தையாக இருந்தவர்களை உடன் கைது செய்து மன்றில் நிறுத்துமாறும் நீதிபதி கட்டளையிட்டார்.

இந்த வழக்கில் சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.தவராசா வுடன் சட்டத்தரணிகளான கே. சுகாஸ், எஸ். விஜயராணி, ரி. ஜனகன், ஆதித்தன் கார்த்திகா, அம்பிகா சிறிதரன் ஆகியோர் மாணவி வித்தியாவின் குடும்பம் சார்பில் மன்றில் ஆஜராகியிருந்தனர்.

இவை ஊர்காவற்றுறை கைதிகள் ஆஜராகிய போதும் வழங்கப்பட்டிருந்தது.

இவை ஊர்காவற்றுறை, யாழ்ப்பாண நீதிமன்றில் நடந்தேற,

வித்தியாவின் கொலைக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்தும் பல்வேறு இடங்களில் நடந்தன.

01.06.2015 அன்று மாணவி வித்தியா கொல்லப்பட்டு 19 நாட்கள் கடந்த நிலையிலும் கிளிநொச்சி, மன்னார், வவுனியா, அக்கரைப்பற்று, மூதூர் ஆகிய இடங்களில் ஆர்ப்பாட்டங்களும் கண்டனங்களும் நடந்தன.


கிளிநொச்சி


அக்கரைப்பற்று

## மாணவி வித்தியா கொலை நடந்தது என்ன?

01.06.2015 அன்று கொலைச் சந்தேகநபர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

வித்தியா கொலை செய்யப்பட்ட தினத்தில் தான் கொழும்பில் இருந்ததாக 9 சந்தேக நபர்களில் ஒருவர் நீதிமன்றில் தெரிவித்ததுடன் 13.05.2015 அன்று வெள்ளவத்தையிலுள்ள ஹற்றன் நஷனல் வங்கியின் தானியங்கி இயந்திரம் மூலம் (ATM) தான் பணம் பெற்றதாகவும் நீதிமன்றில் கூற,

வெள்ளவத்தை ஹற்றன் நஷனல் வங்கியின் (ATM) இயந்திரப் பிரிவில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்புக் கமராவின் (CCTV) வீடியோ பதிவைப் பெற்றுக்கொள்ளுமாறு ஊர்காவற்றுறை நீதிபதி செ.லெனின்குமார் உத்தரவிட்டார்.

இதேவேளை வித்தியாவின் படுகொலையுடன் சம்பந்தப்பட்டவர் எனச் சந்தேகிக்கப்படும் 9ஆவது சந்தேகநபர் மகாலிங்கம் சசிகுமார் (சுவிஸ் குமார்) மாணவி வித்தியாவின் கொலை நடந்த மறுநாள் கைது செய்யப்பட்டதாக பொலிஸாரின் அறிக்கையின் முற்பகுதியில் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் பின்னர் 21.05.2015 அன்று வெள்ளவத்தையில் வைத்து கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பது முன்னுக்குப் பின் முரணானது என மாணவி வித்தியாவின் குடும்பத்தின் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி. தவராசா நீதிமன்றில் முன்வைத்தார்.

சந்தேகநபர் சுவிஸ்குமாரை புங்குடுதீவில் வைத்து பொது மக்கள் பிடித்துள்ளனர். அவரைப் பொலிஸில் ஒப்படைப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

இருந்தும் 21.05.2015 அன்று அவர் வெள்ளவத்தையில் கைது செய்யப் பட்டது எப்படி? அவர் எவ்வாறு தப்பிச் சென்றார். ஒரு குற்றவாளி தப்பித்துச் செல்வதற்கு காரணமாக இருந்தவர்கள் யார் என்ற கேள்விகளை சட்டத்தரணி கே.வி. தவராசா முன்வைத்ததோடு குற்றவாளி தப்பித்துக் கொள்வதற்கு ஏற்றவாறு பொலிஸாரால் தயாரிக்கப்பட்ட முதல் அறிக்கை என்றும் குறிப்பிட்டார்...

நீதிமன்றில் நடந்து கொண்டிருக்கும்போது அதேசமயம் யாழ்ப்பாண நீதிமன்றைத் தாக்கினர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 130 பேரில் 47 கைதிகள் 01.06.2015 அன்று யாழ்ப்பாண நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

இவர்களில் இருவர் 15 வயதுக்குக் குறைந்தவர்கள் என்ற அடிப்படையில் யாழ்ப்பாண நீதிபதி பெ.சிவகுமார் அந்த இரண்டுபேருக்கும் பிணை வழங்கினார்.

ஏனையவர்களைத் தொடர்ந்து 2015.06.09 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார்.

வித்தியாவின் கொலையுடன் சம்பந்தப்பட்டதாகக் கருதப்படும் சந்தேக நபர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜராகிய போது பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் வழங்கிய பந்தோபஸ்து, யாழ்.நீதிமன்றில்

கிளிநொச்சியில் கிளி. மாவட்ட மகளிர் சம்மேளனமும் சிறகுகள் பண்பாட்டு மையமும் இணைந்து கிளிநொச்சி பழைய மாவட்ட செயலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இதேபோன்று மன்னாரில் மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியம் மன்னார் பொதுநூலகத்திற்கு முன்பாகத் திரண்டு மாணவி வித்தியாவின் கொலைக்குக் கண்டனம் தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

வவுனியா பிரதேச செயலகத்திற்கு முன்பாக நீதிக்கான பயணம் என்ற அமைப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது. மூதூரிலும் அக்கரைப்பற்றிலும் ஆர்ப்பாட்டங்கள் களை கட்டியிருந்தன.

இதில் அக்கரைப்பற்றில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் பொதுமக்களின் கையொப்பம் பெறப்பட்டு ஜனாதிபதி மைத்திரிக்கு மகஜர் அனுப்பி வைக்கும் ஏற்பாடுகளும் நடந்தன.

(தொடரும்)

-புருசோத்தமன்-

# மீள்குடியேற்றத்திற்கு வழங்குகின்ற நிதியை ராணுவத்திற்கு வழங்குவது ஏற்கமுடியாது

## வடக்கு மாகாண புனர்வாழ்வு அமைச்சர் தெரிவிப்பு



(கண்டாவளை)

சர்வதேச நியமங்களுக்கு அமைவாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீள்குடியேற்றத்திற்காக வழங்கப்படுகின்ற நிதியை இன அழிப்பு யுத்தத்தை மேற்கொண்டு மக்களுடைய்ய காணிகளை கையகப்படுத்தி வைத்திருக்கின்ற இராணுவத்திற்கு வழங்குவ தென்பது ஏற்றுக் கொள்ள முடியாததொன்று என வடக்கு மாகாண புனர்வாழ்வு அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

சமதளத்தில் ஒன்றாக எனும் தொனிப் பொருளில் மாற்றுத்திறனாளிகளால் உருவாக்கப்பட்ட பொருட்களின் மாகாண மட்ட வணிக கண்காட்சியும் தொழிற்சந்தையும் கிளிநொச்சியில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு மாகாண புனர்வாழ்வு அமைச்சர் அனந்தி சசிதரன் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்கள் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், அபிவிருத்திகள் என்று பார்க்கப்படுகின்ற போது பல வேலைத்திட்டங்கள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு பகுதிகளில் கோடிக்கணக்கான நிதியைக் கொடுத்து மூடப்பட்டிருக்கின்றதைக் காண்கின்றோம். ஆனால், அபிவிருத்திகள் தொடர்பான கலந்துரையாடல்களில் தொண்டு நிறுவனங்கள் எங்களுக்குக் காட்டுகின்றது. அங்கே மூடப்பட்ட அல்லது அந்தப்பிரதேசத்திற்கு பொருத்தமற்ற அபிவிருத்தித் திட்டங்களை முடிவுறுத்திவிட்டு அதனை மக்களுக்கான கோடிக்கணக் கான அபிவிருத்தி என்று காட்டுகின்ற நிலைமையை நாங்கள் பார்க்கின்றோம்.

வடக்கு, கிழக்கில் யுத்தம் காரணமாக ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு விசேட கவனமொன்றை மத்திய அரசாங்கம் வடக்கு மாகாணத்தினூடாக செய்யவேண்டும் என்ற கோரிக்கையை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகின்றோம். ஆனால் அவர்கள் எங்களையும் புறந்தள்ளிவிட்டு தாங்கள் தங்களுடைய நடவடிக்கைகளை மேற்கொள்வதால் ஒரு முகப்படுத்தப்பட்டு அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படாமல் ஒரு வரையே பல உதவி போய்ச் செல்வதும் பலருக்கு எந்த உதவியும் கிடைக்காமல் போவதும் என்ற நிலைமையை நாங்கள் அவதானித்து வருகின்றோம். வடக்கு மாகாணத்திற்கு பல மில்லியன் ரூபா நிதியை கேட்கின்ற போது அதில் 10 வீத நிதியை கூட தருவதற்கு இந்த மத்திய அரசாங்கம் தயாராகவில்லை.

எங்களுடைய பல திட்டங்கள் நிராகரிக்கப்பட்டு புறந்தள்ளப்பட்டிருக்கின்றது.

இதுமட்டுமல்ல பல கடமைகளை செய்வதற்கு எமது திணைக்களங்கள் சார்ந்த உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு கூட ஆளுநர் பல முட்டுக்கட்டைகளை போடுகின்ற நிலைமைகளைக் கூட காண்கின்றோம்.

ஏனெனில் அவர்கள் மனதளவில் மிகத்திடமாக இருக்கின்றார்கள். வடக்கு மாகாண சபையை வினைத்திறனற்ற ஒன்றாக இருக்க வேண்டும் என்று காட்டுவதற்கு பல வேலைகளை செய்கின்றார்.

எனவே தென்னிலங்கையைப் பார்க்கும் போது, அங்குள்ள மாகாண அமைச்சர்கள் தகுதியில்லாத அல்லது யாரையும் நியமிக்கலாம் என்ற நிலைமைகள் காணப்படுகின்றதும் நாங்கள் தகைமையுள்ள பொருத்தமான ஒருவரைக் கேட்டால் கூட அதனைவிடுத்து, தான் தோன்றித்தனமாக நியமனங்களை வழங்கும் எதேச்சதிகார நிலைமையை எங்கள் மீது காட்டுகின்றது.

திட்டமிட்டு மேற் கொள்ளப்பட்ட இன அழிப்புப் போரில் முற்றுமுழுதான பொருளாதாரத்தை இழந்து, உறவுகளை இழந்து, உடல் அவயவங்களை இழந்து உடல் உளரீதியாகப் பாதிக்கப்பட்ட இனம் என்ற வகையில் சர்வதேச நியமங்களுக்கு உட்பட்டு எமது மக்களின் வாழ்வாதார உதவித் திட்டங்களை இலங்கை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும். அதுவே தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான ஒன்றாக அமையும்.


மக்களின் காணிகளில் படையினர் இருந்துவிட்டு அதில் கட்டடங்களை அமைத்து விட்டு அதிலிருந்து வெளியேறுவதற்கு பல மில்லியன் ரூபா நிதிகளைக் கேட்கின்றது. ஆனால், பொதுமக்களின் காணிகளில் இருந்து இராணுவம் அழித்த எதற்கும் இழப்பீடுகள் வழங்கப்படுவதில்லை.

அப்பாவிப்பொதுமக்கள் மீது போரை நடத்திவிட்டு சர்வதேச நியமங்களுக்கு அமைய மீள்குடியேற்றத்திற்கு வ்ழங்கப்படுகின்ற நிதியை யுத்தம் நடத்திய இராணுவத்திற்கே திருப்பச் செலுத்துகின்ற நிலைமை காணப்படுகின்றது.

எங்களுக்கான அபிவிருத்தி நிதிகளை மத்திய அரசாங்கம் நினைத்தவாறு கையாளுகின்ற அல்லது தானே தனது திட்டங்களை வகுத்துக் கொள்கின்ற நிலைமையை வடக்கு கிழக்குப்பகுதிகளில் காணப்படுகின்றதென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)




# காணிப் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் குழுக்கூட்டம் முல்லையில்



முல்லைத்தீவு மாவட்ட மக்களின் காணிப்பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் குழுக்கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அரசியலமைப்பு கற்கை நிறுவனத்தின் ஏற்பாட்டில் மாவட்டத்தில் தெற்கில் இருந்து சட்டவாளர்கள் மற்றும் நில அளவையாளர்கள் வருகை தந்து மூன்று இடங்களில் இந்த ஆராயும் குழுக்கூட்டம் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாப்பிலவு, சிலாவத்தை, கிச்சிராபுரம், முறிப்பு, நாகஞ்சோலை, நீராவிபிட்டி ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்களுக்கு கிச்சிராபுரம் பொது நோக்கு மண்டபத்திலும் முள்ளிவாய்க்கால், வட்டுவாகல், முல்லைத்தீவு ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்களுக்கு முல்லைத்தீவு கோவில்குடியிருப்பு பொது நோக்கு மண்டபத்திலும், கொக்குளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்களுக்கு கொக்குளாய் பொதுநோக்கு மண்டபத்திலும் காணிப் பிரச்சினைகள் தொடர்பிலான ஆராய்வு குழுக் கூட்டம் இடம்பெற்றுள்ளது.

இதில் கோவில்குடியிருப்பில் 25 குடும்பங்களும், கொக்குளாயில் 25 குடும்பங்களும், கிச்சிராபுரத்தில் 65குடும்பங்களும் முதல் கட்டமாக கலந்து கொண்டு அரச, தனியார் காணிகள் தொடர்பில் நாட்டில் உள்ள சட்டங்களையும் காணிபங்கீடுகளையும் பற்றி எந்தெந்த காணிகளுக்கு எப்படி ஆட்சி செய்வது பற்றியும், அறிந்து கொண்டுள்ளதுடன் மக்களின் காணிகள் தொடர்பிலான பிரச்சினைகளை முறையிட்டுள்ளார்கள். (2-281)

# பாடசாலை தற்காலிக கொட்டகையினுள் தூக்கில் தொங்கிய நிலையில் சடலம் மீட்பு

முல்லைத்தீவு கல்வி வலயத்திற்குட்பட்ட மு/புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க பாடசாலையின் தற்காலிக கொட்டகை ஒன்றினுள் வயோதிபர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நேரத்தில் நடைபெற்றிருக்கலாம் என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

கடந்த 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாடசாலை முடிவடைந்த நிலையில், நேற்று முன்தினம் சனிக்கிழமையும், நேற்று ஞாயிற்றுக்கிழமையும் பாடசாலை விடுமுறை நாளாக இருந்தமையால் மாணவர்கள், ஆசிரியர்கள் பாடசாலைக்கு சமூகமளிக்கவில்லை.

இந் நிலையில், பாடசாலை வளாகத்தின் தற்காலிக கொட்டகை ஒன்றினுள் கட்டடப் பொருட்கள் வைத்திருந்த களஞ்சிய அறையில் இவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சடலத்தை பாடசாலை வளாகத்தில் வைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்ட புதுக்குடியிருப்பு பொலிஸார் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் நீதவான் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்கள்.

நீதவான் பார்வையிட்டு விசாரணைகளை முன்னெடுத்த பின்னர் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைக்க நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இவ்வாறு தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டவர் 10 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு பகுதியை சேர்ந்த குமாரசாமி இராசலிங்கம் (வயது-72) என்பவரே என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

இவரது மரணம் கொலையா அல்லது தற்கொலையா என்று அறியும் பொருட்டு விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-15)

# எருவைக் கொண்டு மூடி கடத்தப்படவிருந்த 55 முதிரை மரக்குற்றிகள் பொலிஸாரிடம் சிக்கின



பூநகரிப் பகுதியில் இருந்து சங்குப்பிட்டிப் பாலத்தினூடாக சாண எருவைக்கொண்டு நிரப்பப்பட்ட பாரவூர்தி ஒன்றினுள் மறைத்து வைக்கப்பட்டு கடத்தப்படவிருந்த சுமார் 10 இலட்சம் ரூபா பெறுமதியான 55 முதிரை மரக்குற்றிகள் கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளதாக பூநகரி பொலிஸார் தெரிவிக்கின்றனர். இச்சம்பவம் கடந்த 16ஆம் திகதி நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது, பூநகரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கபிலபண்டாரவிற்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து பொறுப்பதிகாரி தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினரே சங்குப்பிட்டி பொலிஸ் தடை முகாமில் வைத்து குறித்த வாகனத்தை வழிமறித்தனர். இதன்போது பொலிஸார் பாரவூர்தியில் சந்தேகம் கொண்டு சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர். இதனையடுத்து முதிரை மரக் குற்றிகள் மறைத்து வைக்கப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டது.

மேற்படி சம்பவம் பற்றி பொலிஸார் தெரிவிக்கையில், பூநகரி அடர்ந்த காட்டுப் பகுதியில் சட்டவிரோதமாக வெட்டப்பட்ட இம்மரக் குற்றிகள் யாழ்ப்பாணத்திற்கு கடத்தப்படவிருந்தது. அண்மைக் காலத்திலிருந்து பிடிக்கப்பட்ட 7 ஆவது கடைசி மரக்கடத்தலாகும். இக்கடத்தலில் ஈடுபட்ட இரு சந்தேக நபர்களும் பூநகரி பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். மரக்குற்றிகளும் பாரவூர்தியும் பூநகரிப் பொலிஸ் நிலையப் பாதுகாப்பில் உள்ள நிலையில் விரைவில் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் சந்தேக நபர்களை முன்னிலைப்படுத்தவுள்ளதாகவும் வாகனமும் மரக்குற்றியும் பாரப்படுத்தப்படவுள்ளதாகவும் பொலிஸ் நிலையத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப் பாரிய கடத்தலை முறியடிக்க பொலிஸ் சார்ஜன்டுகளான செனிவிரத்ன நிரோஜன், இந்துசன், ரத்நாயக்க, மதுசன் ஆகியோர் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (2-84)

# பேருந்து சேவையை ஏற்படுத்தி போக்குவரத்தை இலகுபடுத்துங்கள்

(குருமன்காடு)

வவுனியா - நொச்சிமோட்டை கிராமசேவையாளர் பிரிவிலுள்ள துவரங்குளத்திற்கு பேருந்து சேவையை ஏற்படுத்தி மற்றும் முன்பள்ளி என்பவற்றை அமைத்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் முடிவுற்ற பின்பு இப்பகுதியில் கடந்த 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றப்பட்ட பின்னர் சீரான போக்குவரத்து இன்மை மற்றும் பிள்ளைகளுக்கான முன்பள்ளி தேவை என்பவற்றை வலியுறுத்தி வருகின்றோம். நொச்சிமோட்டை பகுதியிலிருந்து 3 கிலோமீற்றர் தூரத்திலுள்ள துவரங்குளம் பகுதியில் 25 தொடக்கம் 30 வரையான குடும்பங்கள் வசித்து வருகின்றோம். இந்த நிலையில் வைத்தியசாலை, பிரதேச செயலகம், மாவட்ட செயலகம் போன்ற இதர தேவைகள் நிமித்தம் வவுனியா நகருக்கு செல்லவேண்டிய தேவை ஏற்படுகின்றது.

பிரதான ஏ-9 வீதியிலிருந்து 3 கிலோமீற்றர் நடந்தும் ஏனைய வாகனங்களிலும் பயணத்தினை மேற்கொள்ள வேண்டிய நிலை காணப்படுகிறது. எமது இந்த நிலை தொடர்பாக மக்கள் பிரதிநிதிகளின் கவனத்திற்குக் கொண்டு சென்ற போதும் தீர்வினை பெற்றுக் கொள்ள முடியவில்லை.

எனவே இந்த விடயங்களை கவனத்தில் கொண்டு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-250)

# வேடம் புனைதல் நிகழ்வு நாளை

(பூநகரி)

கிளி/ பூநகரி மத்திய கல்லூரி ஆரம்பப்பிரிவு மாணவர்களின் "வேடம் புனைதல்" நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் கல்லூரி முதல்வர் அரசகேசரி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பூநகரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். தருமரத்தினம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினராக பூநகரி செம்பன் குண்டு அ.த. க.பாடசாலை அதிபர் இ. கலைச் செல்வன் கலந்து கொள்ளவுள்ளார்.

125 இற்கு மேற்பட்ட ஆரம்பப் பிரிவு மாணவர்கள் பல்வேறு வகையான வேடங்கள் புனைந்து ஊர்வலமாக பூநகரி வாடியடி முனீஸ்வரன் ஆலயத்தில் இருந்து பாடசாலை வளாகத்திற்கு அழைத்து வரப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (2-84)

# அரசாங்கத்தின் கபடத்தனமான நடவடிக்கைகளை எதிர்க்கட்சித் தலைவர் சர்வதேசத்திற்கு தெரியப்படுத்த வேண்டும்

## ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் கோரிக்கை

எதிர்க்கட்சி தலைவர் அரசாங்கத்தின் கபடத்தனமான நடவடிக்கைகளை சர்வதேசத்திற்கு வெளிச்சம் போட்டு காட்ட வேண்டும் என்கின்ற கோரிக்கையை ஈ.பி.ஆர்.எல்.எப் .முன்வைக்கின்றது என அதன் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

(ஈ.பி.ஆர்.எல்.எப்.) அரசியல் உயர் பீட கூட்டம் நேற்று முன்தினம் மாலை வவுனியாவில் நடை பெற்றது. இதன் பின்னரே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் தெரிவித்ததாவது.

எதிர்வரும் 21ஆம் திகதி வர இருக்கின்ற அரசியல் சாசன வழிகாட்டல் குழுவினுடைய இடைக்கால அறிக்கை தொடர்பாகவும் நாங்கள் கலந்துரையாடியிருக்கின்றோம். தமிழ் மக்களுடைய அடிப்படை கோரிக்கையான வடக்கு- கிழக்கு இணைப்பு, சமஷ்டி அரசியல் அமைப்பு முறைமை. மத சார்பற்ற நாடு. தமிழ் மக்களுடைய சுயநிர்ணய உரிமை உட்பட பல அடிப்படை உரிமைகள் நிராகரிக்கப்பட்ட நிலைமையில் ஒற்றையாட்சிக்குள் அதிகார பரவலாக்கல் தொடர்பாகவே இது இருக்கும் என நாம் கருதுகின்றோம். எனினும் 21ஆம் திகதி அறிக்கை வெளி வந்த பின்னர் எமது அரசியல் குழு கூடி அதனை ஆராய்ந்து அதன் நன்மை தீமை தொடர்பாக மக்களிற்கு விளங்கப்படுத்துவது என்கிற முடிவினை நாங்கள் எடுத்திருக்கின்றோம்.

அதேவேளை ஐ.நா. மனித உரிமை அமையத்தில் இலங்கை அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை மிகவும் அவமதித்து. உதாசீனப்படுத்தி எமக்கு கால அவகாசம்தேவை என கூறுவதும் அதனை நடைமுறைப்படுத்த மாட்டோம் என்கின்ற மோசமான நிலைமைக்கு இதனை கொண்டு வந்திருக்கின்றார்கள். இந்நிலையில் எதிர்க்கட்சி தலைவர் அர சாங்கத்தின் கபடத்தனமான நடவடிக்கைகளை சர்வ தேசத்திற்கு வெளிச்சம் போட்டு காட்ட வேண்டும் என்கின்ற கோரிக்கையையும் ஈ.பி.ஆர்.எல்.எவ். முன் வைத்துள்ளது.

இதேவேளை எமது கட்சி உறுப்பினர் இருபதாவது அரசியல் அமைப்புக்கு ஆதரவு அளித்தமை தொடர்பாகவும் கலந்துரையாடியிருக்கிறோம்.

இதேவேளை. வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனின் அலுவலகத்தில் அக்கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டமானது சுமார் நான்கு மணித்தியாலயங்களாக இடம்பெற்றிருந்தது. தற்கால அரசியல் நிலைப்பாடுகள், இருபதாவது அரசியல் திருத்தம் தொடர்பான விடயங்கள், கிழக்கு மாகாணசபையில் அக்கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் 20 ஆவது திருத்தத்திற்கு ஆதரவளித்தமை தொடர்பான குழப்பகரமான நிலைமைகள், தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் ஈ.பி.ஆர். எல்.எவ். தொடர்ந்தும் செயற்படுவது தொடர்பாக கட்சிக்குள் உள்ள முரண்பாடுகள் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இக்கூட்டத்தில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன். வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன். கிழக்கு மாகாணசபை உறுப்பினர் துரைரட்ணம், முன்னாள் மன்னார் நகரசபை உறுப் பினர் குமரேஸ், மூத்த உறுப்பினர் கே.அருந்தவராசா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (2-250)




# வீசிய சுழல் காற்றினால் கூரை, வீடுகள் சேதமாகின



(மல்லாவி)

புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள இரணைப்பாலை கிராமத்தில் திடீரென வீசிய சுழல் காற்றின் காரணமாக இரணைப்பாலை சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்தின் களஞ்சிய அறையின் கூரை முற்றாக தூக்கி வீசப்பட்டு சேதமடைந்துள்ளதோடு குடியிருப்பு மக்களின் வீடுகளும் பகுதியளவில் சுழல் காற்று காரணமாக சேதமடைந்துள்ளது.

இந்த சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை வேளையில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் கிராம மக்களினால் அப்பகுதி கிராம அலுவலரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன் புதுக்குடியிருப்பு பொலிஸாரும் சம்பவம் தொடர்பில் தகவல்களை சேகரித்து வருகின்றனர். (2-15)

# உரைப்பை தைக்கும் நூல் பாணினுள்

வவுனியாவில் காலை உணவுக்காக பாண் வாங்கிய நபர் ஒருவர் குறித்த பாணை வெட்டிய போது அதனுள் நீளமான உரைப்பை தைக்கும் நூல் காணப்பட்டுள்ளது.



நேற்று காலை வவுனியா, சூசைப்பிள்ளையார் குளம் பகுதியில் உள்ள கடை ஒன்றுக்குச் சென்று காலை உணவுக்காக நபர் ஒருவர் பாண் வாங்கியுள்ளார். வீட்டிற்குச் சென்று அப் பாணை வெட்டிய போது அதில் உரைப்பை தைப்பதற்கு பயன்படுத்தப்படும் பச்சை நிற நீளமான நூல் ஒன்று காணப்பட்டுள்ளது.

இதனையடுத்து, குறித்த சம்பவம் தொடர்பில் பாண் விற்பனை செய்த வர்த்தகருக்கு தெரியப்படுத்தப் பட்டது. (2-250)

# நாம் வாழ்ந்த பூர்வீக நிலத்தில் புத்தாண்டை கொண்டாட வேண்டும் இரணைதீவு மக்கள் விருப்பம்

புத்தாண்டை எமது பூர்வீக நிலத்தில் கொண்டாடுவதற்கு அரசாங்கம் எமது நிலங்களை விடுவிக்க வேண்டும் என இரணைதீவு மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த மே மாதம் முதலாம் நாளான மேதினத்தன்று தமது பூர்வீக நிலத்தை விடுவிக்கக் கோரி கிளிநொச்சி இரணைதீவு மக்கள் 140 நாட்களுக்கு மேலாக் தொடர் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். கடந்த 140 நாட்களாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்கள் எங்களுடைய நிலம் விடுவிக்கப்படும் என்ற நம்பிக்கையின் ஒளிக்கீற்று எங்களுக்குத் தென்படுகின்றது. ஆனால் எப்போது விடுவிக்கப்படும் என்பது இதுவரை எங்களுக்கு அறிவிக்கப்பட வில்லை.

கடந்த 31 ஆம்திகதி பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் ஆகியோர் தலைமையில் பூநகரி கடற்படை முகாமில் நடைபெற்ற சந்திப்பின் போது நீண்ட இழுபறிக்குப் பின்னர் பொதுமக்களுக்குச்சொந்தமான 186 ஏக்கர் காணிகளை மட்டும் அடையாளப்படுத்தி பாதுகாப்பினுடைய அனுமதியைப் பெறுவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனவே விரைவாக எங்களுடைய காணிகள் அடையாளப்படுத்தப்பட்டு குறித்த காணிகள் விடுவிக்கப்பட்டு நாங்கள் எமதுசொந்த நிலத்தில் மீள் குடியேறி வாழ்வாதாரத் தொழில்களைச் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். புத்தாண்டை எமது பூர்வீக நிலத்தில் கொண்டாட வேண்டுமென்ற அவா வில் இவ்விடத்தில் இருக்கின் றோம். இந்த மாதத்திலோ அல் லது அடுத்த மாத நடுப்பகுதியிலோ எங்களை எங்கள் நிலத்தில் மிக விரைவாகக்குடியேற்ற இந்த அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென இரணைதீவு மக்கள் தெரிவித்துள்ளனர். (2-315)

# இனந்தெரியாத நபர்கள் அச்சுறுத்தல் மனிதவுரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

இனந்தெரியாத நபர்களால் கடுமையான முறையில் அச்சுறுத்தல் விடுக்கப் பட்டதாக தெரிவித்து கடந்த வாரம்இரண்டு முறைப்பாடுகள் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் வவுனியா கிளையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில் யாழ்ப் பாணம் அல்வாய் வட மேற்கு அல்வாயை சேர்ந்த தாமோதரம்பிள்ளை வாகீசன் (வயது 29) என்பவரை கடந்த 6 ஆம் திகதி குற்றப்புலனாய்வுப் பிரிவினர் என தெரிவித்த இரு நபர்கள் தாக்கியதுடன் அவரை கொலை செய்துவிடுவோம் என்று அச்சுறுத்தியுள்ளதாக முறைப்பாட்டினை பதிவு செய்துள்ளார்.

அவருடன் சேர்த்து அவரது குடும்ப உறுப்பினர்களையும் ஈவிரக்கம் இல்லாமல் கொலை செய்வதாக மிரட்டியதாகவும், மன நிம்மதியிழந்து மன அழுத்தத்திற்கு ஆளாகியிருக்கும் தனக்கு உரிய பாதுகாப்பை வழங்குமாறு தனது முறைப்பாட்டில் பதிவு செய்துள்ளார்.

அத்துடன் இணுவில் மேற்கைச் சேர்ந்த பரஞ்சோதி செங்கமலம் (வயது 70) என்ற வயோதிபப் பெண் அவருடைய வீட்டில் தனிமையில் இருந்த போது. வீட்டில் இல்லாத தனது மகனை விசாரித்து தாக்கியுள்ளனர். கூக்குரல் இட்டு கத்திய போது அவர்கள் அவ் இடத்தை விட்டு நகர்ந்து சென்றுள்ளனர். தாம் மீண்டும் வரும் போது மகன் வீட்டில் இருக்க வேண்டும் என கூறிவிட்டு சென்றுள்ளனர்.

எனவே உயிர் அச்சுறுத்தல் காரணமாக தற்போது புதுக் குடியிருப்பு வீதி வவுனியாவில் தஞ்சமடைந்துள்ளதாக தெரிவித்து இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (2-9)

# முகாம் வாழ்க்கையை விட மோசமாக வாழ்கின்றோம்

## பூந்தோட்டம் முகாமிலிருந்து குடியேற்றப்பட்ட மக்கள் கவலை



முகாம் வாழ்க்கையை விட மோசமாக வாழ்கின்றோம் என பூந்தோட்டம் முகாமில் இருந்து புளியங்குளம், பரசங்குளம் பகுதியில் குடியேற்றம் செய்யப்பட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து, காணிகள் அற்ற நிலையில் சுமார் 20 வருடங்களுக்கு மேலாக வவுனியா, பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த மக்களை மீள் குடியேற்றம் செய்வதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் வவுனியா, நெடுங்கேணி பிரதேச செயலகத்திற்குட்பட்ட சின்ன அடம்பன் இராசபுரத்தில் 150 வீடுகளை பயனாளிகளிடத்தில் கையளிக்கும் நிகழ்வு கடந்த ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் எம்.பி. றோகண புஸ்பகுமார தலைமையில் நடைபெற்றது.

லைக்காவின் ஞானம் அறக்கட்டளையின் அனுசரணையுடன் அமைக்கப்பட்ட 150 வீடுகள் கையளிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் கலந்துகொண்டிருந்தார்.

சின்ன அடம்பன் இராசபுரம் பகுதியில் 68 வீடுகளும் புளியங்குளம் பரசங்குளம் பகுதியில் 82 வீடுகளும் அமைக்கப்பட்டு லைக்கா ஞானம் கிராமம் என பெயர் சூட்டப்பட்டிருந்தது.

இந் நிலையில், கடந்த ஜூன் மாதம் முதல் முகாமில் இருந்து வெளியேறி புளியங்குளம். பரசங்குளம் ஆகிய கிராமங்களில் லைக்கா ஞானம் அறக்கட்டளையினால் அமைக்கப்பட்ட 82 வீடுகளிலும் குடியேறியுள்ள மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்கி வருவதாக தெரிவித்துள்ளனர்.

அத்துடன் கடந்த சில தினங்களாக வவுனியாவில் பெய்த கடும்மழை காரணமாக லைக்கா ஞானம் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட வீடுகள் சிலவற்றின் கூரைகள் காற்றில் தூக்கியெறியப்பட்டுள்ளது. அங்கு அமைக்கப்பட்ட வீடுகளின் கூரைப்பகுதிகள், சமையலறையின் புகை போக்கும் பகுதி என்பவற்றின் ஊடாக மழைநீர் நேரடியாகவே வீட்டிற்குள் வருவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், கிராமத்தினைச் சூழ அடர்ந்த காடுகள் காணப்படுவதனால் யானைகள் வந்து செல்வதாகவும். அச்சத்துடனேயே தினசரி தங்களது வாழ்க்கையினை கொண்டு நடத்த வேண்டியுள்ளதாகவும். மின் இணைப்புக்கள் கூட முழுமையாக வழங்கப் படவில்லை எனவும் தெரிவிக்கும் இம் மக்கள். முகாம் வாழ்க்கையினை விட மோசமான நிலையிலேயே தற்போது வாழ்வதாகவும் கவலை வெளியிட்டுள்ளனர். (2-250)

# சமூக சேவையாளர்கள் விருது வழங்கி கௌரவிப்பு



முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறந்த சமூக சேவையாளர்களுக்கு விருது வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை முல்லைத்தீவில் நடைபெற்றது.

இதன்போது மாவட்டத்தின் சிறந்த சமூக சேவையாளர்களுக்கு விருது வழங்கப்பட்டதோடு பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் தமிழரசுக் கட்சி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா மற்றும் வன்னிபாராளுமன்றஉறுப்பினர் சிவசக்தி ஆனந்தன். வட மாகாண சபை உறுப்பினர் ரிப்கான் பதியுதீன், மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-281)

# அரசின் எதிர் நடவடிக்கைக்கு பயமில்லை தீர்வு தரும் வரை போராட்டம் தொடரும்

## மின்சார சபை ஊழியர்கள் அறிவிப்பு

மின்சார சபை ஊழியர்களுக்கு எதிராக அரசாங்கம் எந்தவிதமான நடவடிக்கையை எடுத்தாலும் தமது கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரையில் வேலைநிறுத்தப் போராட்டம் தொடரும் என இலங்கை மின்சார சபை தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.

வேலை நிறுத்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு 5 நாட்கள் ஆவதாகவும், இது வரையில் அதிகாரிகள் எந்தவிதமான தீர்வு நடவடிக்கையையும் முன்வைக்கவில்லையெனவும் அச்சங்கத்தின் செயலாளர் ரஞ்ஜன ஜயலால் அறிவித்துள்ளார்.

கடந்த 13 ஆம் திகதி நாம் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தை ஆரம்பித்தோம். இன்றும் போராட்டம் தொடரும். அரசாங்கம் ஓய்வு பெற்ற ஊழியர்களை சேவைக்கு அழைத்துள்ளது. இருப்பினும், எந்தவொரு ஓய்வு பெற்ற ஊழியரும் சேவைக்கு சமூகமளிக்கவில்லை.

பொது மக்களை அசௌகரியங்களுக்குள்ளாக்குவது அரசாங்கமே. நாம் சேவையிலிருந்து விலகிக் கொண்டவர்களாக கருதப்படுவதாக கடிதங்கள்கூட அனுப்பப்பட்டுள்ளன. எதிர்வரும் நாட்களிலும் எமது தொழில் தொடர்பில் அரசாங்கம் எந்தவிதமான முடிவுகளுக்கு வந்தாலும், எமது போராட்டம் தொடரும் எனவும் மின்சார சபை ஊழியர்கள் சங்கத்தின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (இ-3)




# காங்கேசன் துறையில் புதிதாக மீள்குடியேற்றக்குழு ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை பகுதியில் கடந்த 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றத்தை வலியுறுத்தி எதிர்காலத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மீள் குடியேற்ற குழு ஒன்று நேற்றைய தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை ஜே/233, ஜே/234, ஜே/235 ஆகிய கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இதுவரை விடுவிக்கப்படாத பகுதி மக்கள் ஒன்றிணைந்து தமது மீள் குடியேற்றம் தொடர்பாக, கோண்டாவிலில் அமைந்துள்ள வேதபாராயண சனசமூக மண்டபத்தில் நேற்றைய தினம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

இக் கலந்துரையாடலில் தமது மீள்குடியேற்றம் தொடர்பாகவும் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் அத்தியாவசிய தேவைகள் தொடர்பிலும் கலந்துரையாடியிருந்தனர். இதில் கலந்து கொண்டவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

நாம் கடந்த 1990 ஆம் ஆண்டு காங்கேசன்துறை பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வசித்து வருகிறோம். தற்போது அப் பகுதி மக்கள் படிப்படியாக மீள் குடியேறி வருகின்றனர். மேலும் பல பகுதி விடுவிக்கப்படாமல் உள்ளது. எமது பகுதிகளில் முன்னர் சுமார் 633 குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. இடம் பெயர்ந்த பின்னர் சுமார் 1000 குடும்பங்களாக அதிகரித்துள்ளன. அவற்றில் 100 க்கும் குறைந்த குடும்பங்களே தற்போது மீள்குடியேற்றப்பட்டுள்ளன. ஏனையவர்களும் மிக விரைவில் குடியேற்றப்பட வேண்டும்.

குறிப்பாக மீள்குடியேற்றிய பின்னர் அனைவருக்கும் வீடுகள் அமைத்து தரப்பட வேண்டும் என்பது எமது முக்கிய கோரிக்கையாக உள்ளது. ஏனெனில் எமது வீடுகள் போரினால் அழிவடையவில்லை. 2013 ஆம் ஆண்டுக்கு பின்னர் தான் எமது வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன. எனவே தற்போது வீட்டுக்காக வழங்கப்படும் 8 இலட்சம் ரூபாய் பெறுமதி எமக்கு போதுமானதாக இல்லை. எமது வீடுகளை போன்று அமைத்து தர வேண்டும். அத்துடன் அடிப்படை தேவைகளான வைத்தியசாலை, பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், கடைத் தொகுதி, குடிநீர், வீதிகள் போன்ற வசதிகள் ஏற்படுத்தித் தர வேண்டும் எனத் தெரிவித்தனர்.

மீள்குடியேற்றம் தொடர்பில் துறைசார் அமைச்சு, அதிகாரிகள் மற்றும் இராணுவ அதிகாரிகள் ஆகியோருடன் கலந்துரையாடி அவர்களுக்கு அழுத்தம் கொடுத்து அந்தந்த பகுதிகளில் மக்கள் மீள்குடியேறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு 15 பேர் கொண்ட நிர்வாக குழு நேற்றைய தினம் உருவாக்கப்பட்டுள்ளது. அதில் தலைவராக கி.மனோகரன், செயலாளராக கமலநாதன், பொருளாளராக ஜெயதாஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் இந்த கலந்துரையாடலில் காங்கேசன்துறை மீன்பிடி கூட்டுறவு சங்கத்தின் தலைவர், செயலாளர் ஆகியோர் இணைந்து காங்கேசன்துறையில் விடுவிக்கப்படாமல் உள்ள மீன்பிடி துறையை விடுவித்து தமது வாழ்வாதாரத்தை பெருக்க அனுமதியை பெற்றுத்தரக் கோரி மீள்குடியேற்ற அமைச்சரிடம் கையளிக்குமாறு வலி வடக்கு மீள் குடியேற்ற தலைவர் அ.குணபாலசிங்கத்திடம் மகஜர் ஒன்றும் கையளித்திருந்தனர். (இ-9)

# கல்லறை புனரமைப்புக்கு ஒன்பது கோடி ஒதுக்கீடு

## தாய், தந்தையரால் மாட்டிய தனயன்

(கொழும்பு)

கோத்தபாய ராஜபக்ஷவின் கையொப்பங்கள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட உள்ளதாக, நிதி மோசடி விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது. டி.ஏ.ராஜபக்ஷ மற்றும் அவரது பாரியாரின் கல்லறைகள் புனரமைப்பு பணிக்கு ஒன்பது கோடி ரூபா அரசாங்கப் பணம் பயன்படுத்தப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்த நிதியை பயன்படுத்தப்படுவதற்கு அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உத்தரவிட்டிருந்தார் என சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது.

சட்டமா அதிபர் திணைக்களம் வழங்கிய ஆலோசனைக்கு அமைய கோத்தபாய ராஜபக்ஷவின் கையொப்பங்கள் பரிசீலனைக்கு உட்படுத்தப்படவுள்ளன. சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைகள் கிடைக்கப் பெற்றதன் பின்னர், கோத்தபாய ராஜபக்ஷவிடம் வாக்குமூலமொன்று பதிவு செய்யப்படவுள்ளதாக நிதி மோசடி விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின்



பெற்றோரான டி.ஏ.ராஜபக்ஷ மற்றும் அவரது பாரியாரின் கல்லறையும் அதனை அண்டிய பகுதியும் புனரமைக்கப்பட்டு அலங்காரப்படுத்தப்படுவதற்கு அரச பணம் செலவிடப்பட்டுள்ளமை விசாரணைகளின் மூலம் அம்பலமாகியுள்ளது. (இ-3)

# அபிவிருத்தி வேலைகள் குறித்து இன்று விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்தி வேலைகளை அடையாளப்படுத்தல் மற்றும் முன்னுரிமைப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் மீசாலை கிழக்கு ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் என்று நகராட்சி மன்ற செயலாளர் கா.சண்முகநாதன் அறிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலில் மீசாலை மேற்கு ஜே/318 கிராம சேவகர் பிரிவிலுள்ள மக்கள் அனைவரும் தவறாது கலந்துகொண்டு கிராமத்தினது அபிவிருத்தி தொடர்பாக முன்னேற்றகரமான வேலைத்திட்டங்களை முன்னுரிமைப்படுத்தி கிராமத்தின் அபிவிருத்தியில் பங்கெடுக்குமாறு நகராட்சி மன்ற செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (இ-89)

# மகிந்தவின் சொத்துக்களைத் தேடி வெளிநாடுகளில் தீவிர விசாரணை



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சொத்துக்களைத் தேடி வெளி நாடுகளில் அரசாங்கம் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. பொலிஸ் நிதிமோசடிப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் ஓய்வுபெற்ற பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி வைத்தியலங்காரவிடம் அதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறித்த விசாரணைகளின் ஒரு கட்டமாக ரவி வைத்தியலங்கார அண்மையில் உக்ரேன் நாட்டுக்குச் சென்றுள்ளார்.

அங்கு மகிந்த குடும்பத்துக்கு பெரும் மதிப்பிலான சொத்துக்கள் இருப்பதாக கிடைத்த தகவல்கள் தொடர்பில் விசாரிக்கவே அவர் உக்ரேன் சென்றுள்ளார்.

எனினும் ரவி வைத்தியலங்காரவின் விசாரணைகளில் அது தொடர்பான எந்தவொரு தகவலும் கிடைக்கப் பெறாத நிலையில் அவர் வெறும் கையுடன் நாடு திரும்பியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு தகவல்கள் கிடைத்துள்ளது.

மேலும் இது குறித்து அவர் மகிந்த ராஜபக்ஷவிடம் பிரஸ்தாபித்த போது, அது தொடர்பான தகவல்களை நானும் அறிந்திருந்தேன்.

இந்த அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் எனக்கு இருப்பதாக கூறிக்கொண்டிருக்கும் 18 பில்லியன் டொலர்கள் பெறுமதியான சொத்துக்களைத் தேடிக் கண்டுபிடித்தால் நல்லதுதான்.

அதன்மூலம் நாட்டின் அபிவிருத்திக்காக தேசிய வளங்களை விற்பனை செய்வது தடைப்படலாம் என மகிந்த கிண்டலாக பதிலளித்துள்ளார். (இ-3)

# கொள்ளையடித்து தானம் வழங்குவதில் பயனில்லை என்பது புத்தரின் உபதேசம்

## போட்டுத் தாக்குகிறார் பொன்சேகா



(கொழும்பு)

அரசியல்வாதிகளுக்கு கிடைக்கும் அதிகாரங்கள் தவறு செய்வதற்காக அல்ல எனவும் தவறுகளை செய்துவிட்டு, அதிகாரத்திற்கு அமையவே அதனை செய்ததாக கூறமுடியாது எனவும் அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றின் போது, சில் துணி வழக்கில் இரண்டு அரச அதிகாரிகளுக்கு தண்டனை வழங்கப்பட்டமை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெளியிட்டிருந்த கருத்து குறித்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

எவராவது தவறு செய்துவிட்டு எனக்கு அதிகாரம் இருந்தது, அதன்படியே உத்தரவிட்டேன், முடிந்தால் எனக்கு எதிராக எதையாவது செய்யுங்கள் என்று கூற முடியாது.

தவறாக பயன்படுத்தப்பட்டது மக்களின் பணம் என்றால் தகுதி, தராதரம் பாராது சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு விதிக்கப்பட்ட அபராத தொகையை செலுத்த பிக்குமார் பிண்ட பாத்திரம் ஏந்துவது குறித்து கருத்து வெளியிட்ட பொன் சேகா, சிலர் இந்த காரண த்தை கொண்டு பலமுறை களை பயன்படுத்தி பண த்தை திரட்டி வருகின்ற னர்.

சேகரிக்கும் பணத்தையும் இவர்கள் கொள்ளையிடுவார்கள் என்ற நம்பிக்கையே எனக்குள்ளது. கொள்ளையடித்து தானம் வழங்கினால், எந்த நன்மைகளும் கிடைக்காது என புத்த பகவான் தெளிவாக உபதேசித்துள்ளார்.

புத்த பகவானின் பிள்ளைகளுக்கு நாங்கள் இதனை தெளிவுபடுத்த வேண்டிய அவசியமில்லை. என்னை அங்கொடைக்கு அனுப்ப வேண்டும்என்றுகூறுவார்கள்.

தற்போது அடிக்கடி நீதிமன்றத்திற்கு சென்று வருபவர்கள், அவர்கள் எங்கு செல்ல வேண்டும் என்பதை நீதிமன்றமும் மக்களும் தீர்மானிப்பார்கள் எனவும் சரத் பொன்சேகா மேலும் தெரிவித்தார்.(இ-3)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.
**திருஞானலிங்கம் பிரதாபன்**

கொக்குவிலைச் சார்ந்தவரும் எமது பேரவையின் உபசெயலாளருமான திரு. திருஞானலிங்கம் பிரதாபன் அவர்கள் அகில இலங்கை சமாதான நீதவானாகச் சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: நல்லூர் பிரதேச மூத்தோர் பேரவை

(396)



## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: செவ் 12 இல்<br>உயரம்: 5’7"<br>தகைமை/தொழில்:B.E/ அரசதொழில்<br>தொ.இ: B/7783 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 54 செவ் 1 இல்<br>உயரம்: 5’<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/7091 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>உயரம்: 5’1"<br>தகைமை/தொழில்:Diploma/ சிங்கப்பூர்<br>தொ.இ: B/7784 | பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 54 செவ் 2 இல்<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்: A/Lலண்டன் PR<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/7092 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>உயரம்: 178cm<br>தகைமை/தொழில்:BED/ஆசிரியர்<br>தொ.இ: B/7785 | பிறப்பு: 1970 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 58<br>உயரம்: 159cm<br>தகைமை/தொழில்: பட்டதாரி<br>தொ.இ: G/7098 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 8 சூரிசெவ் 6 இல்<br>உயரம்: 5’7"<br>தகைமை/தொழில்:BSc/ பொறியியலாளர்<br>தொ.இ: B/7786 | பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: செவ் 4 இல்<br>உயரம்: 5’5"<br>தகைமை/தொழில்: CIMA, AAT/ கணக்காளர்<br>தொ.இ: G/7099 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


## வலம்புரி-சங்குநாதம் செய்தியாளர் பதவிக்கான விண்ணப்பம்

### வடமாகாணத்தில்

- யாழ்ப்பாணம்
- முல்லைத்தீவு
- கிளிநொச்சி
- மன்னார்
- வவுனியா

ஆகிய மாவட்டங்களில் இருந்து ஒவ்வொரு பிரதேசங்கள் மற்றும் ஊர்களுக்கான செய்தியாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

வடமாகாணத்தின் மூலைமுடுக்குகளில் உள்ள அத்தனை பிரச்சினைகளையும் வெளிக்கொண்டு வந்து தீர்வினைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் முக்கிய தகவல்களை வெளிப்படுத்தல் என்ற நோக்கில் வடபிராந்தியம் முழுமைக்கும் செய்தியாளர்களை இணைக்கும் இத்திட்டத்தில்,

ஆர்வம், எழுத்தாற்றல், சமூக நோக்குள்ள -நேர்மையுடன் பணியாற்றக் கூடிய இருபாலாரும் இச் செய்தியாளர் பதவிக்கு விண் ணப்பிக்க முடியும்.

முழுப்பெயர், தபால் முகவரி, பால், பிறந்த திகதி, தே.அ.அ.இல. தொலை பேசி இல, மின்னஞ்சல், விவாக நிலைமை, கல்வித் தகைமை உள்ளிட்ட விபரங்களுடன் தங்களைக் கேட்டறியக்கூடிய உறவினர் அல்லாத இருவரின் பெயர், விலாசம் உள்ளடங்கலாக சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை

**பிரதம ஆசிரியர்**
**வலம்புரி**
**இல.3,2 ஆம் ஒழுங்கை,**
**பிறவுண்வீதி,**
**யாழ்ப்பாணம்.**

எனும் முகவரிக்கு 30.09.2017 இற்கு முன்னர் தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

**பிரதம ஆசிரியர், வலம்புரி.**

# பாரதம்

## முன்னாள் ஜனாதிபதிக்கு ஆயுள்தண்டனை

### உறுதி செய்தது நீதிமன்றம்

(கெய்ரோ)

எகிப்து நாட்டின் இரகசிய தகவல்களை கட்டார் நாட்டிற்கு விற்ற வழக்கில் அந்நாட்டின் முன்னாள் ஜனாதிபதி முகமது முர்சிக்கு விதிக்கப்பட்ட ஆயுள் தண்டனையை நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.

எகிப்து நாட்டில் கடந்த 2012 நடைபெற்ற முதல் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற முகமது முர்சி அந் நாட்டின் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அவரது ஆட்சிக்கு எதிராக மக்கள் புரட்சி வெடித்தது. இதையடுத்து அவரது ஆட்சி கலைக்கப்பட்டு இராணுவ ஆட்சி நடந்தது.

இவர், பதவியில் இருந்த பொழுது நாட்டின் முக்கிய ஆவணங்களை கட்டார் நாட்டிற்கு திருட்டுத்தனமாக விற்பனை செய்துள்ளதாகவும் ஜனாதிபதித் தேர்தலின் பொழுது மோசடி செய்ததாகவும் அவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டது. இதையடுத்து அவர் மீது பல்வேறு வழக்குகள் பதிவுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

கடந்தாண்டு ஜூன் மாதம், ஆவணங்கள் விற்பனை செய்த வழக்கில் அவருக்கு நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்தது. பின்னர் நவம்பர் மாதம், தேர்தல் மோசடி வழக்கிலும் அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. எகிப்து நாட்டில் ஒரு ஆயுள் தண்டனை என்றால் 25 ஆண்டுகள் சிறைத்தண்டனையாகும்.



இந்த தீர்ப்பை எதிர்த்து அவர் தொடுத்த மேல்முறையீட்டு மனுவை எகிப்து நீதிமன்றம் நேற்று முன்தினம் விசாரித்தது.

விசாரணை முடிவடைந்த நிலையில் அவருக்கு அளித்த ஆயுள் தண்டனையை நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.

இந்த தீர்ப்பு இறுதியானது, இதற்கு பின்னர் மேல் முறையீடு செய்ய முடியாது எனவும் நீதிமன்ற உத்தரவில் குறிப்பிட்டுள்ளது. (8)

## பிரதமர் மோடியின் 67ஆவது பிறந்தநாள்



(ஆமதாபாத்)

பிரதமர் நரேந்திர மோடி தனது 67ஆவது பிறந்த நாளையொட்டி தாயார் காலில் விழுந்து வணங்கி ஆசி பெற்றார்.

பிரதமர் நரேந்திர மோடிக்கு நேற்று 67ஆவது பிறந்த தினமாகும். ஒவ்வொரு ஆண்டும் தான் பிறந்த தினத்தன்று, பூர்வீக கிராமத்துக்கு சென்று தாயை சந்தித்து ஆசி பெறுவதை வழக்கமாக வைத்துள்ளார்.

அதன்படி பிரதமர் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை டில்லியில் இருந்து புறப்பட்டு சொந்த ஊருக்குச் சென்றார்.

அங்கு தனது சகோதரர் வீட்டில் தங்கியிருக்கும் தாயார் ஹிராபாயை மோடி சந்தித்து பிறந்த நாள் வாழ்த்து பெற்றார்.

தாயின் காலில் விழுந்து அவர் வணங்கினார். அவருக்கு தலையில் தொட்டு ஆசி வழங்கிய ஹிராபாய் வாயில் இனிப்பும் ஊட்டி விட்டார். இதையடுத்து சிறிது நேரம் அவர் தாயாருடன் பேசிக்கொண்டிருந்தார். (8)

## வெடிகுண்டு தாக்குதலில் 2பேர் பலி, 10 பேர் காயம்

(பக்தாத்)

ஈராக்கின் கிர்குக் நகரில் தீவிரவாதிகள் நடத்திய கார் வெடிகுண்டு தாக்குதலில் இரண்டு பேர் பலியாகினர். மேலும் 10 பேர் காயமடைந்துள்ளனர்.

கிர்குக் நகரில் இயங்கி வரும் மதுக்கடையை குறி வைத்து நேற்று முன்தினம் வெடிகுண்டு தாக்குதல்நடத்தப்பட்டது. கார் வெடிகுண்டு மூலம் இந்த தாக்குதல் நடத்தப்பட்டது தெரிய வந்துள்ளது.


இந்த தாக்குதலில் இரண்டு பேர் கொல்லப்பட்டதாக முதல் கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. மேலும் சுமார் பத்து பேர் காயம் அடைந்தனர்.

அப்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களும் இந்த தாக்குதலில் சேதமடைந்தன.

குர்திஷ் அமைப்பினரின் வாக்கெடுப்பை சீர்குலைக்கும் வகையில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என கருதப்படுகிறது. இந்த தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. (8)

## குடும்பத் ... ஆட்சியி...

### ராகுல் காந்...



(ராஞ்சி)

நாட்டை 50 ஆண்டுகளாக உங்களின் 4 தலைமுறை ஆட்சி செய்திருக்கிறது. அப்போது நீங்கள் செய்தது என்ன என்பது பற்றி நாட்டு மக்களுக்கு கணக்கு காட்ட வேண்டும் என பாரதீய ஜனதா கட்சி தலைவர் அமித்ஷா தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தி அமெரிக்காவில் சுற்றுப்பயணம் செய்துவருகிறார். அவர் அங்கிருந்தவாறு மத்திய பாரதீய ஜனதா கூட்டணி ஆட்சியை சாடி வருகிறார்.

இதற்கு ஜார்கண்ட் மாநிலத்தில் சுற்றுப்பயணம் செய்து வருகிற பாரதீய ஜனதா கட்சி தலைவர் அமித்ஷா








இந்திய விமானப்படையின் தளபதியாக பணியாற்றி ஓய்வு பெற்றவர் அர்ஜன் சிங். 98 வயதான அவருக்கு நேற்றுக் காலை திடீரென மாரடைப்பு ஏற்பட்டது.

உடனடியாக டில்லியில் உள்ள இராணுவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந் நிலையில் நேற்று இரவு சிகிச்சை பலனின்றி மரணம் அடைந்தார். அவரது மறைவுக்கு ஜனாதிபதி ராம்நாத் கோவிந்தும், பிரதமர் மோடியும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

## டி.ஐ.ஜி. ... ஜனாதி...



(பெங்களூர்)

பெங்களூர் பரப்பன அக்ரஹார சிறையில் அடைக்கப்பட்டுள்ள சசிகலாவுக்கு சலுகைகள் வழங்கப்படுவதாக குற்றம் சாட்டிய ஐ.பி.எஸ் அதிகாரி ரூபாவுக்கு ஜனாதிபதி பதக்கம் வழங்கப்பட்டுள்ளது.

சொத்துக்குவிப்பு வழக்கில் தண்டிக்கப்பட்டு தற்போது பெங்களூர் பரப்பன அக்ரஹார சிறையில் தண்டனை பெற்று வரும் சசிகலாவுக்கு சிறையில்

## இர்மா புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவச உணவு வழங்கும் தமிழர்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் புயல், மழையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அமெரிக்காவில் உணவு விடுதி நடத்தி வரும் தமிழ் இளைஞர் இலவச உணவுகளை வழங்கியுள்ளார்.

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தை புரட்டிப் போட்ட இர்மா புயல்கரைகடந்த போதும் மழையின் பாதிப்பில் இருந்து இன்னும் மக்கள் மீண்டு வரவில்லை.



இந்நிலையில் அமெரிக்காவின் 3 இடங்களில் செயற்பட்டு வரும் தமிழக உணவு விடுதியான அம்மா கிச்சன் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவச உணவு வழங்கி வருகிறது.

தமிழகத்தில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் சிறப்புத்திட்டமான அம்மா உணவகத்தை பின்பற்றி அமெரிக்காவில் வாழும் தமிழர்களுக்காக அம்மாஸ் கிச்சன் என்ற உணவகத்தை நடத்தி வருகிறார் தினேஷ்குமார்.

தமிழகத்தில் உள்ள அம்மா உணவகம் போன்றே, குறைந்த விலையில் உணவு வழங்கப்படுவதால், இந்த அம்மாஸ் கிச்சனுக்கு நல்ல வரவேற்புள்ளது.


இந்நிலையில் தரமான உணவு, குறைந்த விலை, மண்ணின் சுவை உள்ளிட்டவற்றை அளித்து அமெரிக்க வாழ் இந்தியர்கள் மனதில் இடம்பிடித்த தினேஷ்குமார் தற்போது இர்மா புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவச உணவு வழங்கி மண்ணின் பெருமையை பறைசாற்றியுள்ளார். (8)

# வெளிநாடு



# ...த்தின் 4 தலைமுறை ...பில் செய்தது என்ன?

## ...ந்தி மீது அமித்ஷா காட்டம்



நேற்று முன்தினம் பதில் அளித்தார்.

ராஞ்சியில் ஹார்மு மைதானத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் அவர் பங்கேற்று பேசியபோது, அமெரிக்காவில் இருந்து கொண்டு ராகுல் காந்தி நாம் என்ன செய்தோம் என்று கேட்கிறார்.

அதற்கு ஜார்கண்டில் பதில் சொல்ல நாம் வந்திருக்கிறோம். நாட்டை 50 ஆண்டுகளாக உங்களின் 4 தலைமுறை ஆட்சி செய்திருக்கிறது. அப்போது நீங்கள் செய்தது என்ன என்பது பற்றி நாட்டு மக்களுக்கு கணக்கு காட்ட வேண்டும் என்று கூறினார்.

மேலும், ராகுல் காந்தி செய்ததை விட நாங்கள் மூன்று மடங்கு அதிகமாக செய்திருக்கிறோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், வாஜ்பாய் இந்த மாநிலத்தை உருவாக்கினார். பிரதமர் மோடி இப்போது இந்த மாநிலத்தை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்கிறார்.

ஆயிரம் நாட்களில் இந்த மாநிலத்தை முதலமைச்சர் ரகுபர் தாஸ் மாற்றிக்காட்டியுள்ளார் என்றும் அவர் கூறினார். (8)

# அமெரிக்காவுக்கு இணையான சமநிலை பெறும்வரை அணு ஆயுத உற்பத்திகள் தொடரும்

## வட கொரியா திடம்

(பியாங்யாங்)

அணு ஆயுத கையிருப்பில் அமெரிக்காவுக்கு இணையாக சமநிலை பெறும் வரையில் உற்பத்தியை தொடருவோம் என வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு சபையில் உள்ள 15 உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளும் வடகொரியாவின் போக்குக்கு கண்டனம் தெரிவித்திருக்கும் நிலையில், அணு ஆயுத கையிருப்பில் அமெரிக்காவுக்கு இணையாக சமநிலை பெறும் வரையில் உற்பத்தியை



தொடருவோம் என வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் தெரிவித்துள்ளதாக வடகொரியா அரசுக்கு சொந்தமான நாளேடு நேற்று முன்தினம் குறிப்பிட்டுள்ளது.

இதுதொடர்பாக, நேற்று முன்தினம் அந்த நாளேட்டில் வெளியான சிறப்பு கட்டுரையில், 'நம் மீது ஏகப்பட்ட தடைகளை விதித்துள்ள பெரிய வல்லரசு நாடுகளுக்கு நமது அணு ஆயுத வல்லமையை நாம் நிலைநாட்டி காட்ட வேண்டும்.

இதன்மூலம், வடகொரியா மீது இராணுவ ரீதியிலான நடவடிக்கை எடுக்கும் துணிச்சல் அமெரிக்காவுக்கு ஏற்படாத வகையில் அந்நாட்டுக்கு இணையாக நமது அணு ஆயுதங்கள் கையிருப்பில் இருக்க வேண்டும் என கிம் ஜாங் உன் உத்தர விட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (8)

# வியட்நாமை தாக்கிய டோக்சுரி புயல்




(ஹனாய்)

வியட்நாம் நாட்டின் மத்திய பகுதியை மணிக்கு 130 கிலோமீற்றர் வேகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை தாக்கிய டோக்சுரி புயல் அங்கு பெரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

வியட்நாம் நாட்டின் மத்திய பகுதியை வரலாறு காணாத பெரும் புயல் கடந்த வெள்ளிக்கிழமை தாக்கியது. டோக்சுரி என பெயரிடப்பட்டுள்ள இந்த பெரும் புயல் மணிக்கு 130 கிலோமீற்றர் வேகத்தில் கடலோரப் பகுதிகளை துவம்சம் செய்தது.

ஹாடின்ஹ் மற்றும் குவாங் பின்ஹ் மாகாணங்களை உக்கிரத்துடன் பதம்பார்த்த புயலின் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் 250-க்கும் அதிகமான வீடுகளின் கூரைகள் காற்றில் பறந்தன.

புயலுடன் பெய்த பலத்த மழையால் ஹாடின்ஹ் மாகாணத்தின் பெரும்பாலான பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து பாய்கிறது.

முன்னதாக, புயல் தொடர்பான எச்சரிக்கையை தொடர்ந்து கடற்கரை ஓரங்களில் உள்ள தாழ்வான பகுதிகளில் வசித்து வந்த சுமார் 80 ஆயிரம் மக்கள் வெளியேற்றப்பட்டு, பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து புயல் மற்றும் கனமழை அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் வியட்நாம் நாட்டின் வடபகுதியில் கடந்த மாதம் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் 26 பேர் உயிரிழந்தனர். கடந்த ஆண்டு வீசிய புயல்களுக்கு 200 இற்கும் அதிகமானோர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (8)

# 18 ஆயிரம் அடி உயர மலையில் ஏறிய பெண் பொலிஸ்

(நகரி)

ரஷ்யாவில் 18 ஆயிரத்து 510 அடி உயரமுள்ள மவுண்ட் எல்பிரர் மலையில் ஏறி ஆந்திர பெண் பொலிஸ் சாதனை படைத்துள்ளார்.

ஆந்திர மாநிலம் சித்தூரில் கூடுதல் பொலிஸ் அதிகாரியாக பணியாற்றி வருபவர் ராதிகா.

2007ஆம் ஆண்டு பொலிஸ் பணியில் சேர்ந்த ராதிகாவுக்கு மலைகளில் ஏறுவது பிரியம். இதுவரை அவர் 3 மலைகளில் ஏறி சாதனை படைத்துள்ளார்.

இந்த நிலையில் ரஷ்யாவில் உள்ள மவுண்ட் எல்பிரர் பனிமலையில் ஏற ராதிகா முடிவு செய்தார். அதன்படி அவர் 18 ஆயிரத்து 510 அடி உயரமுள்ள மவுண்ட் எல்பிரர் மலையை ஏறினார்.

மிகவும் சிரமப்பட்டு மலை உச்சியை அடைந்த அவர் அங்கு இந்திய தேசிய கொடியை ஏற்றி சாதனையை படைத்தார். உயரமான மலையை ஏறிய முதல் பெண் பொலிஸ் அதிகாரி என்ற பெருமையை அவர் பெற்றார். (8)

# ...ி. ரூபாவுக்கு ...திபதி பதக்கம்



சிறப்பு சலுகைகள் வழங்குவதாக அம்மாநில சிறைத்துறை டி.ஐ.ஜி புகாரளித்து பரபரப்பை கிளப்பினார்.

இதற்கு ஆதாரமாக சில வீடியோ காட்சிகளையும் அவர் வெளியிட்டிருந்தார்.

இதனையடுத்து, ரூபா போக்குவரத்துத்துறைக்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டார். இந்நிலையில், மெச்சத்தக்க வகையில் பணியாற்றியதற்காக இந்தாண்டுக்கான ஜனாதிபதி பதக்கம் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

பெங்களூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற விழாவில் அம்மாநில ஆளுநர் வாஜுபாய், ரூபாவுக்கு பதக்கம் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் அம்மாநில முதல்வர் சித்தராமையா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (8)

# மியன்மார் மீது போர் தொடுக்க வேண்டும்

## பங்களாதேஷில் வெடித்தது மக்கள் போராட்டம்

(டாக்கா)

ரோகிஞ்யா முஸ்லிம்கள் படுகொலையை தடுத்து நிறுத்த வேண்டும். இப்பிரச்சினையை தீர்க்க மியன்மார் மீது போர் தொடுக்க வேண்டும் என்று பங்களாதேச மக்கள் போராட்டம் நடத்தினர்.

மியன்மாரில் ரோகிஞ்யா மக்கள் படுகொலை செய்யப்படுவதற்கு பங்களாதேசத்தில் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

வெள்ளிக்கிழமையான நேற்று முன்தினம் டாக்காவில் உள்ள மிகப் பெரிய பள்ளிவாசலில் தொழுகை நடைபெற்றது.

அதன் பின்னர் 5 முஸ்லிம் அமைப்பினர் சேர்ந்து மியன்மாருக்கு எதிராக போராட்டம் நடத்தினார்கள். அப்போது மியன்மாரின் தேசிய கொடி தீயிட்டு எரிக்கப்பட்டது.

அந்நாட்டின் அரசு ஆலோசகர் ஆன் சாங் சூகிக்கு எதிராக கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இப்போராட்டத்துக்கு ஹபாசாத் பிரிவின் மதரசா ஆசிரியர் நூர் உசேன் கெசுமி தலைமை தாங்கினார்.

அவர் பேசும்போது, மியன்மாரில் ரக்கினே மாகாணத்தில் சிறுபான்மையினராக வாழும் ரோகிஞ்யா முஸ்லிம்களை பாதுகாக்க சர்வதேச சமுதாயம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மியன்மார் அரசு நடத்தும் இனப் படுகொலையை தடுத்து நிறுத்த வேண்டும். இப்பிரச்சினையை தீர்க்க மியன்மார் மீது பங்களாதேசம் போர் தொடுக்க வேண்டும்.

அதுவே இப்பிரச்சினைக்கு ஒரே தீர்வாக அமையும். மேலும் மியன்மார் மீது போர் தொடுக்க இதுவே சரியான தருணம்' என்றார். அதை போராட்டக்காரர்கள் வரவேற்று கைதட்டினர்.

இதே கோரிக்கையை வலியுறுத்தி முஸ்லிம் நாடுகளில் உள்ள பல்வேறு நகரங்களிலும் நேற்று முன்தினம் போராட்டம் நடத்தப்பட்டது. (8)



# சர்வதேச அழுத்தங்களால் அரசின் பாதை மாறாது!

## சம்பிக்க ரணவக்க கூறுகிறார்



(கொழும்பு)

**சர்வதேச அழுத்தங்களின் காரணமாக பாதையை திசை திருப்ப அரசாங்கம் ஒரு போதும் முயற்சிக்காது என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.**

" இறுதிக் கட்ட யுத்தத்தில் யுத்த குற்றங்களை இராணுவத்தினர் மேற்கொள்ளவில்லை என்பதை நாம் உறுதியாக கூறுகின்றோம். இந்த நாட்டின் முப்பது ஆண்டுகால யுத்தத்தை நிறைவிற்கு கொண்டுவந்த எமது இராணுவத்தை பொய்யான காரணிகளினால் தண்டிக்க நாம் ஒருபோதும் இடமளிக்க போவதில்லை.

அதேபோல் தனிப்பட்ட காரணிகளை நாம் எமது சட்டத்திற்கு அமைவாக விசாரித்து வருகின்றோம். இலங்கையின் உள்ளக விவகாரங்களை எமது நீதிமன்றங்களில், இலங்கையின் சட்டத்திற்கு அமைவாக நாம் கையாள வேண்டும். இதில் எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இதை மாற்றியமைக்க யார் முயற்சித்து வந்தாலும் அதற்கு நாம் இடமளிக்க போவதில்லை.

மேலும் புலிகளை நாம் அழித்த போதிலும் சர்வதேச ரீதியில் அவர்களின் செயற்பாடுகள் இன்னும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இன்றும் சர்வதேச நாடுகளில் புலிகளின் மீள் இயக்கம் உள்ளது. புலம்பெயர் அமைப்புகளின் உதவியுடன் சர்வதேச அமைப்புகளின் மூலமாக இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கப்படுகின்றது. இன்றும் ஐக்கிய நாடுகள் சபையிலும், சிவில் அமைப்புகளின் மூலமாகவும் அவர்களின் குரலே ஒலித்து வருகின்றது. ஆகவே இவற்றை நாம் கவனத்தில் கொள்ளத் தேவையில்லை.

கடந்த காலத்தில் இலங்கை மீது இருந்த நேரடி அழுத்தங்கள் இன்று நல்லாட்சி அரசாங்கத்தில் குறைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி, பிரதமரின் சர்வதேச நட்புறவுகள் இன்று எமது நாட்டை அழுத்தங்களில் இருந்து மீட்டுள்ளது. எனினும் இப்போது எழும் சில அழுத்தங்களுக்கு அஞ்சியோ அல்லது மாற்றுக் கொள்கையை உருவாக்கும் நோக்கத்திலோ எமது இராணுவத்தை தண்டிக்கும் எந்தவொரு வாய்ப்பையும் எம்மால் ஏற்படுத்திக்கொடுக்க முடியாது. எமது பாதையை சர்வதேச தேவைக்கு ஏற்ற வகையில் மாற்றியமைக்க முடியாது. அவ்வாறு மாற்றியமைக்கப்பட்டால் அது நாட்டின் இறைமையில் பாதகத்தை ஏற்படுத்தும் வகையில் அமையும். ஆகவே அரசாங்கமாக நாம் ஒருபோதும் இதற்கு இடமளிக்க போவதில்லை எனவும் அவர் தெரிவித்தார். கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-3)

## மகிந்த அரசின் வர்த்தமானி அறிவித்தல் இரத்து!

# கோத்தபாய சுவீகரித்த தொடர்மாடிக் கட்டடத்தை ஒப்படைக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு கடிதம்



(கொழும்பு)

கொழும்பு - வெள்ளவத்தை, சப்பல் ஒழுங்கையில் அமைந்துள்ள தொடர்மாடி வீட்டை அரசுடைமையாக்கியமை சட்ட ரீதியற்றதென கூறி தொடர்மாடி கட்டடத்தை மீண்டும் ஒப்படைக்குமாறு உயர் நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த நிலையில், தீர்ப்பின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியையும் இணைத்து பொலிஸ்மா அதிபருக்கு மனுதாரர்களின் சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசாவினால் கோரிக்கைக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சுவிட்சர்லாந்தை வசிப்பிடமாகக் கொண்ட சண்முகம் சிவராஜா, சிவராஜா சரோஜினி ஆகியோருக்கு கொழும்பு - வெள்ளவத்தை, சப்பல் ஒழுங்கையில் சொந்தமாக தொடர்மாடி வீடொன்று அமைந்துள்ளது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் 2009ஆம் ஆண்டு தை மாதம் 7ஆம் திகதி நடைமுறைக்கு கொண்டுவரப்பட்ட அவசரகால ஒழுங்கின் 7 (1ம்) விதியின் கீழ் குறித்த தொடர்மாடி வீடு வர்த்தமானி அறிவித்தல் மூலம் அரசுடைமையாக்கப்பட்டுள்ளது.

இந்த தொடர்மாடி வீடு பயங்கரவாதத் தடைப்பிரிவுப் பொலிஸாரின் வேண்டுகோளுக்கு அமைய, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தொடர்மாடிக் கட்டடத்தில் மருத்துவ நிலையம் ஒன்றை நடத்துவதற்கு உரிமையாளர்களால் வாடகைக்கு கொடுக்கப்பட்டது என்ற குற்றச்சாட்டில் அரசுடைமையாக்கப்பட்டுள்ளது. அரசுடைமையாக்கப்பட்ட சப்பல் ஒழுங்கையில் அமைந்துள்ள தொடர்மாடி வீட்டை உரிமையாளர்களிடமிருந்து சட்ட ரீதியற்ற முறையில் அரசுடைமையாக்கியமைக்கு எதிரா 2010ஆம் ஆண்டு சித்திரை மாதம் 20ஆம் திகதி உயர் நீதிமன்றில் சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா அடிப்படை மனித உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கில் பொலிஸ்மா அதிபர், ஜனாதிபதியின் செயலாளர், பயங்கரவாதத் தடைப்பிரிவின் பொறுப்பதிகாரி, சட்டமா அதிபர் உட்பட நால்வர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இந்த மனு உயர் நீதிமன்றில் பிரதம நீதியரசர் தலைமையில், நீதியரசர்களான பீ.பி. அலுவிகார, அனில் குணரத்ன ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இந்த முக்கியத்துவமான தீர்ப்பு வழங்கப்பட்டது.

மகிந்த ராஜபக்ஷவினால் அரசுடைமையாக்கப்பட்டமை தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை சட்ட ரீதியற்றதென உயர்நீதிமன்றம் இரத்துச் செய் தது.

மேலும் அச் செயற்பாடு மனுதாரர்களின் அடிப்படை மனிதவுரிமை மீறல் எனவும் தீர்ப்பு வழங்கியதுடன், தொடர்மாடிக் கட்டடத்தை செப்டெம்பர் மாதம் 27ஆம் திகதி அல்லது அதற்கு முன்னைய திகதியில் பிரதிவாதிகள் மனுதாரர்களிடம் ஒப்படைப்பதுடன் ஐந்து இலட்சம் ரூபாவை நட்டஈடாக மனுதாரர்களுக்கு வழங்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்ற தீர்ப்பினை நடைமுறைப்படுத்தி செப்டெம்பர் மாதம் 27ஆம் திகதி அல்லது அதற்கு முன்னைய திகதியில் தொடர்மாடிக் கட்டடத்தை மனுதாரர்களான குடியிருப்பின் உரிமையாளர்களுக்கு கையளிக்கும்படி தீர்ப்பின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியையும் இணைத்து, பொலிஸ்மா அதிபருக்கு மனுதாரர்களின் சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசாவினால் கோரிக்கைக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. (இ-3)

## இன்று ஒரு தகவல்

### காரணம் சொல்லத் தெரியுமா?

உணவில், உடையில் பயணம் செய்யும் வாகனங்களில் ஊர்வலங்களில், சீதோஷ்ண நிலைகளில்–ஏன்– மனிதர்களில் கூட நமக்குப் பலரைப் பிடிப்பதில்லை.

ஒருவருக்கு பறங்கிக்காய் என்றால் கட்டோடு பிடிக்காது. ஒருவர் வெங்காயம் என்றாலோ வெறுப்பார். சிலருக்கு கதர் என்றால் கொஞ்சம் கூடப் பிடிக்காது. ஒருவர் நான் பஸ்ஸில் பயணம் செய்யவேமாட்டேன் என்பார். இன்னும் சிலர் அந்த ஆள் மூஞ்சியைக் கண்டாலே பத்திக்கிட்டு வருது என்பார்.

மனிதர்களுக்கு இப்படி எத்தனையோ தள்ளுபடிகள்! ஆனால் காரணம் கேளுங்கள்! சொல்லத் தெரியாது! பிடிக்கலைனா பிடிக்கலைதான். காரணமெல்லாம் கேட்டா எப்படி? என்பார்கள். அல்லது ஏன்னே தெரியலை. எனக்குப் பிடிக்கவே இல்லை. காரணமும் சொல்லத் தெரியலை என்பார்கள்.

ஒன்றை அல்லது ஒருவரை நமக்குப் பிடிக்கவில்லை என்றால் அதற்குக் காரணம் சொல்லத் தெரிய வேண்டும். கொஞ்ச நேரம் சிந்தித்தால் நாம் வெறுப்பதன் பின்னணியும் புரியும். காரணங்கள் நமக்கே பிடிபடும்.

பறங்கிக்காய் இனிக்கிறது. சாம்பாரில் இனிப்பு இருக்கக்கூடாது. ஒரு காய் இனிக்கும் போது அது இயல்புக்கு மாறான ருசியுடன் இருக்கிறது. எனவே எனக்கு பிடிக்கவில்லை. பஸ்ஸில் பயணம் செய்தால் சௌகரியமாகத் தூங்க முடியவில்லை. மறுநாள் காலையில் ஒரு வேலையும் பார்க்க முடிவதில்லை. கட்டணமும் அதிகம் என்றெல்லாம் ஒருவர் காரணங்களை அடுக்கினால் அவர் சொல்வதும் அவர் வெறுப்பதும் நியாயம் என ஏற்றுக் கொள்ளலாம்.

எனவே அந்த ஆளைக்கண்டாலே எனக்குப் பத்திக்கிட்டு வருது. ஏன்னே தெரியலை என்று காரணம் பிடிபடாமல் மனிதர்களை வெறுக்கக் கற்றுக் கொண்டால் நாம் பலரிடமிருந்து மிகவும் விலகிப் போய்விடக் காரணமாகிவிடும். இதுவும் வளர்ச்சிக்குத் தடைக் கல்லாகவும் அமைந்துவிடுவது உண்டு.

மேலோட்டமாகப் பார்த்தால் ஒன்றை அல்லது ஒருவரைப் பிடிக்கவில்லை என்றால் காரணம் பிடிபடாது தான். சிக்கலைப் பிரிக்க பிரிக்க நூல் முனைகள் பிடிபடுவது போல் காரணமும் பிடிபட்டு விடும். சரியான வலுவான காரணம் பிடிபடாவிட்டால் நமக்கே நம் தவறு தெரியவரும். தப்பிக்கும் மனப்போக்கு மாறும். பிடிபடும் காரணங்கள் பலவீனமாக இருந்தால் நமக்கே மன மாற்றம் வரும். அல்லது நாம் வெறுப்பது சரியில்லை என்பதை மற்றவர்கள் சுட்டிக் காட்டி நமக்குள் மனமாற்றம் ஏற்படும்படி செய்வார்கள்.

இந்தக் கண்ணோட்டத்துடன் ஒன்றை வெறுக்கவோ விரும்பவோ செய்வதில் இரண்டு நன்மைகள் உண்டு.

முதலாவது எதிலும் நாம் தெளிவுடன் இருப்போம்.

இரண்டாவது நாம் வெறுப்பவர்களின் வெறுப்பவற்றின் பட்டியல் வெகுவாகக் குறையும்.

**லேனா தமிழ்வாணன்**

# பதவி பறிக்கப்பட்ட அருந்திகவை அன்போடு வரவேற்ற மகிந்த



(கொழும்பு)

பிரதியமைச்சுப் பதவியை பறிகொடுத்த நிலையில் தன்னைச் சந்திக்க வந்த அருந்திகவை அன்போடு வரவேற்பதாக மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கிறிஸ்தவ மத விவகாரங்கள் மற்றும் சுற்றுலா அபிவிருத்தி பிரதியமைச்சராக இருந்த அருந்திக பெர்னாண்டோ கடந்த வாரம் அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

இதனையடுத்து அவர் உடனடியாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்திப்பதற்காக. அவரின் விஜேராம இல்லத்துக்குச் சென்றுள்ளார்.

இதன்போது அருந்திகவைக்கண்டதும் அன்போடு வரவேற்கின்றேன் என்று அவரை நட்பாக வரவேற்ற மகிந்த ராஜபக்ஷ. மகிழ்ச்சியாக உரையாடியுள்ளார்.

அந்த நேரத்தில் அங்கிருந்த கூட்டு எதிர்க்கட்சியின் முக்கிய தலைவர்கள் பலரும் பலத்த கரகோஷத்துடன் அருந்திகவை வரவேற்றுள்ளனர்.

அதனையடுத்து கருத்து வெளியிட்ட மகிந்த ராஜபக்ஷ. இனியும் காலம் தாழ்த்தாமல் அரசாங்கத்தினுள் இருக்கும் முக்கியஸ்தர்கள் பலரையும் கூட்டு எதிர்க்கட்சிக்கு அழைத்து வருமாறும் அருந்திக பெர்னாண்டோவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-3)

# மின்னல் தாக்கி ஒருவர் பலி!

அம்பாறை, இறக்காமம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட வரிப்பத்தான் சேனை பள்ளச்சேனைப் பிரதேசத்தில், நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 7 மணியளவில் மின்னல் தாக்கி சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் மரணமடைந்துள்ளாரென தமன பொலிஸார் தெரிவித்தனர்.

இறக்காமம் வரிப்புத்தான் சேனையைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஏ.பைறூஸ் (வயது-33) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர், கரும்புக் காணியில் வேலை செய்து கொண்டிருக்கும் வேளையிலேயே. மின்னல் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளாரென. பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-3)

# ஐ.நாவின் தடையை மீறி வடகொரியாவிலிருந்து பொருட்கள் இறக்குமதி; இலங்கையும் விசாரணை

(கொழும்பு)

ஐ.நாவின் தடைகளை மீறி வடகொரியாவிடம் இருந்து பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டமை தொடர்பாக, வெளிவிவகார அமைச்சு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

ஐ.நாவின் தடைகளை மீறி. வடகொரியாவிடம் இருந்து கடந்த ஆறு மாதங்களில் இலங்கை உள்ளிட்ட 11 நாடுகள் இரும்பு, செம்பு. நிலக்கரி உள்ளிட்ட பொருட்களை இறக்குமதி செய்திருப்பதாக. ஐ.நாவின் ஏற்றுமதி கண்காணிப்புக் குழு அறிக்கை ஒன்றை சமர்ப்பித்திருந்தது.

ஐ.நாவின் தடைகளை மீறியதாக இலங்கை மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள நிலையில், கொழும்பு நெருக்கடியில் சிக்கியுள்ளது.

இந்த நிலையிலேயே. வடகொரியாவிடம் இருந்து. இரும்பு. செம்பு போன்ற பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டமை தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் வசந்த சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், வடகொரியா மீது ஐ.நாவினால் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன என்பது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு ஒன்றையும் வெளிவிவகார அமைச்சு வெளியிடவுள்ளது.

தடைகள் தொடர்பாக உள்ளூர் வர்த்தகர்கள் அறிந்து கொள்வதற்கு இந்த வர்த்தமானி அறிவிப்பு உதவியாக இருக்கும் என்று வெளிவிவகார அமைச்சின் சட்டப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது. (இ-3)

# சமல் தலைமையில் களமிறங்கும் பொதுஜன பெரமுன

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பொதுஜன பெரமுன எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலின் போது சமல் ராஜபக்ஷவின் தலைமையில் களமிறங்கவுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொள்வது தொடர்பில் பொதுஜன பெரமுனவின் முக்கிஸ்தர்கள் கடந்த வியாழக்கிழமை கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

இதன் போது கருத்துத் தெரிவித்த பலரும் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் மகிந்தவின் புதிய கட்சியான பொதுஜன பெரமுனவிற்கு பெரும் வெற்றியைப் பெற முடியும் என்று உறுதிபடத் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் உள்ளூராட்சித் தேர்தலின் போது மகிந்த ஆதரவு கூட்டு எதிர்க்கட்சி வேட்பாளர்களுக்கு முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவின் தலைமையில் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# நிதி மோசடி

அரச துறையில் தொழில் தருவதாகக் கூறி நிதி மோசடியில் ஈடுபட்ட ஒருவர் கலேன் பிந்துனுவெவ பிரதேசத்தில் வைத்து நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது சந்தேக நபரிடமிருந்து 16 போலி நியமனக் கடிதங்கள், 20 தேசிய அடையாள அட்டைப் பிரதிகள், 12 இறப்பர் முத்திரைகள் உள்ளிட்ட பொருட்களும் ஆவணங்களும் 50 ஆயிரம் ரூபா பணமும் கைப்பற்றப்பட்டுள்ளன. (இ-3)

## வீதி விபத்துக்களில் சிக்கி

# மூன்று வாரங்களில் 56 பேர் பலி!

(கொழும்பு)

கடந்த மூன்று வார காலப் பகுதியில் மாத்திரம் நாட்டில் ஏற்பட்ட வாகன விபத்துக்களினால் .56 பேர் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸ் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை வரலாற்றில் விபத்துக்களினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக காணப்பட்ட வருடமாக கடந்த வருடம் பதிவாகியுள்ளது. இவ்வருடத்தில் இடம்பெற்ற மரணங்கள் 3117 ஆகும்.

இவ்வருடத்தின் ஆரம்பம் முதல் ஜூலை வரை 1789 பாரிய விபத்துக்கள் இடம் பெற்றுள்ளதாகவும் தகவல்கள் தெரிவித்துள்ளன. இதில் அதிகமான விபத்துக்கள் மோட்டார் சைக்கிள் விபத்துக்களே எனவும் கூறப்படுகின்றது. ஜூலை மாதம் இறுதிவரையில் மோட்டார் சைக்கிள் விபத்தில் உயிரிழந்தவர்கள் 692 பேர் என பதிவாகியுள்ளது. கடந்த வருடத்தில் இக்காலப் பகுதிக்குள் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்துக்களினால் ஏற்பட்ட மரணங்கள் 586 எனவும் ஒப்பிடும் போது அறிய வந்துள்ளது.

இந்த விபத்துக்கள் இடம் பெறுவதற்கு பிரதான காரணகர்த்தாக்கள் மோட்டார் சைக்கிள் சாரதிகளும். ஆட்டோச் சாரதிகளும் எனவும் தெரிய வந்துள்ளன.

இவ்வருடத்தில் ஆரம்பம் முதல் இதுவரையில் இடம் பெற்ற வாகன விபத்துக்களில், பாதசாரிகள் 533 பேர் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸ் தகவல்கள் குறிப்பிட்டுள்ளன. (இ-3)

# சீன எக்சிம் வங்கி அதிகாரிகள் குழு இலங்கை வருகிறது

(கொழும்பு)

இலங்கைக்குப் பெருமளவு கடன்களை வழங்கியுள்ள சீனாவின் ஏற்றுமதி-இறக்குமதி வங்கி (எக்சிம் வங்கி)யின் உயர்மட்டக் குழுவொன்று அடுத்தவாரம் இலங்கை வரவுள்ளது.

சீன எக்சிம் வங்கியின் சலுகைக்கடன் திணைக்களத்தின் பிரதி பொது முகாமையாளர் லிடான் உள்ளிட்ட அதிகாரிகள் இந்தக் குழுவில் இடம் பெறவுள்ளனர்.

அடுத்த ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட நிதி தொடர்பான மதிப்பீடுகளைச் செய்யவே இந்தக் குழு இலங்கை வரவுள்ளது.

சீனாவின் எக்சிம் வங்கி ஏற்கனவே இலங்கையில் பல்வேறு திட்டங்களுக்கு கடன்களை வழங்கியுள்ளது.

குறிப்பாக, அம்பாந்தோட்டை துறைமுகம், நுரைச்சோலை அனல்மின் நிலையம், மத்தள விமான நிலையம் ஆகிய திட்டங்ளுக்கு, சீன எக்சிம் வங்கியே கடன்களை வழங்கியது.

நெடுஞ்சாலைகள், நீர்ப்பாசனம், வடிகாலமைப்பு உள்ளிட்ட உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு மேலும் நிதி உதவிகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக, இலங்கை வரவுள்ள சீன எக்சிம் வங்கிக் குழுவுடன், அரசாங்கம் பேச்சு நடத்தவுள்ளது. (இ-3)

# ரயில்வே ஊழியர்கள் இரு நாள் பகிஷ்கரிப்பு

ரயில்வே ஊழியர்கள் நாளை மறுதினம் புதன்கிழமை நள்ளிரவு முதல் 48 மணிநேர பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாக "ரயில்வே கட்டுப்பாட்டு அதிகாரிகள் தொழிற்சங்க முன்னணி" தெரிவித்துள்ளது.

சம்பளப் பிரச்சினை உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து குறித்த பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாக ரயில்வே கட்டுப்பாட்டு அதிகாரிகள் தொழிற்சங்க முன்னணியின் ஏற்பாட்டாளர் லால் ஆரியரத்ன தெரிவித்தார்.

ரயில் சேவை ஊழியர்கள் நீண்ட காலமாக சம்பளப் பிரச்சினையை எதிர்கொள்கின்றனர். எனினும் அது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுத்த போதிலும் அதற்கு உரிய தீர்வு முன் வைக்கப்படவில்லை. ஆகவே எமது கோரிக்கைகளில் அவதானம் செலுத்துவதற்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலேயே குறித்த பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொள்ளவுள்ளோம்.

எனவே நாளை மறுதினம் புதன்கிழமை நள்ளிரவு முதல் ரயில்வே சாரதிகள், பாதுகாவலர்கள், நிலையப் பொறுப்பதிகாரிகள் மற்றும் கட்டுப்பாட்டாளர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளனர். எமது தொழிற்சங்கப் போராட்டத்தை 48 மணி நேரத்திற்கு மட்டுப்படுத்தியுள்ளோம்.

ஆகவே எமது கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு முன் வைக்கப்பட வேண்டும். அல்லதுபோனால் பரந்துபட்ட தொழிற்சங்கப் போராட்டம் தொடர்பில் கவனம் செலுத்தவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# அம்பாறையில் அமெரிக்க விமானப்படை ஒத்திகைப் பயிற்சி








13 பசுபிக் நாடுகளின் விமானப்படைகள் பங்கேற்ற Pacific Airlift Rally 2017 ஒன்றுகூடல் மற்றும் ஒத்திகைப் பயிற்சி நேற்று முன்தினத்துடன் நிறைவுபெற்றது.

அமெரிக்காவின் பசுபிக் கட்டளை பீடத்தின், பசுபிக் விமானப்படையினால், இலங்கை கடற்படையுடன் இணைந்து ஒழுங்கு செய்யப்பட்ட இந்த ஒன்றுகூடல் மற்றும் ஒத்திகைப் பயிற்சி நீர்கொழும்பு விடுதி, கட்டுநாயக்க விமானப்படைத் தளம் ஆகியவற்றில் இடம் பெற்றது.

இதன் இறுதி நாள் நிகழ்வாக, அம்பாறை விமானப்படைத் தளம் அருகே வானில் இருந்து பொதிகளை தரையிறக்கும் ஒத்திகை நேற்று முன்தினம் காலை நிகழ்த்தப்பட்டது.

அமெரிக்க விமானப் படையின் C-130J விமானத்தில் இருந்து பொதிகள் தரையிறக்கப்பட்டதையடுத்து. கட்டுநாயக்க விமானப் படைத் தளத்தில் பயிற்சி பெற்ற படையினருக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இதையடுத்து, கடந்த 11 ஆம் திகதி தொடக்கம் நடந்து வந்த, பசுபிக் விமான ஒன்று கூடல் மற்றும் ஒத்திகைப் பயிற்சி முடிவுக்கு வந்தது. (இ-3)


# புதிய உள்ளூராட்சித் தேர்தல் முறையும் சிறிய கட்சிகளது சிறுபான்மை அரசியல் கட்சிகளது நிலைப்பாடுகளும்



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

கலப்புத் தேர்தல் முறைகளைக் கொண்ட புதிய உள்ளூராட்சித் தேர்தல் முறையை முதலில் சிறு அரசியல் கட்சிகள் எதிர்த்தற்கு முக்கிய காரணங்களாக வட்டார அடிப்படையில் வெற்றி பெறுவது கடினம் என்றும் 70:30 விகிதாசார முறையில் சிறு கட்சிகளுக்கு உரிய பங்கு கிடைக்காது என்பதலாகும். மேலும் வட்டார ரீதியில் தோல்வியுற்றவர்களுக்கு சரியான பரிகாரம் ஆரம்பத்தில் தெளிவாகக் குறிப்பிடப் படவில்லை. சிறிய கட்சிகளுள் குறிப்பாக மக்கள் ஐக்கிய விடுதலை முன்னணி ஜே.வி.பி. தேர்தல் முறையை கடுமையாக எதிர்த்தது. இது பெரிய கட்சிகளின் கூட்டுச் சதியோ எனவும் சாடினர். எனினும் இவர்களது நிலைப்பாடு மாறியதற்குக் காரணங்கள் கலப்பு தேர்தல் ( வட்டாரம்/ விகிதாசாரம்) 60:40 என மாற்றம் பெற்றது.

ஒவ்வொருகட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் தாம் தாம் பெற்ற வாக்குகளுக்கு ஏற்க அங்கத்தவர்களை பெறும் நிலை ஏற்பட்டதும் மேலும் வெட்டுப்புள்ளி கட்டமைப்பு, நிபந்தனை இல்லாதிருப்பதுடன் வெற்றி பெற்றவ ருக்கு எல்லாம், தோல்வியடைந்தவர்களுக்கு ஒன்றுமில்லை என்ற நிலை தவிர்க்கப்பட்டது. உள்ளூராட்சிச் சபையில் அங்கத்தவர்களை கூட்டு, ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு சுயேட்சைக் குழுவும் தாங்கள் தாங்கள் பெற்ற முழு வாக்கிற்குரிய பங்கை பெறுவது உறுதி செய்யப்பட்டது. ஒரு உள்ளூராட்சிப் பகுதியில் இருக்கும் வாக்காளர்கள் எவ்வளவு தூரம் தேர்தலில் பங்கு கொள்கிறார்கள் என்பதுடன் ஒவ்வொரு வாக்கும் செல்லுபடியான வாக்கை பெற்றிருப்பதிலும் தங்கியுள்ளது. இத்தேர்தல் முறையில் ஒவ்வொரு வாக்கும் முக்கியமாக இருப்பதுடன் அதற்குரிய பலனுமுண்டு. எல்லாத் தேர்தல் வட்டாரங்களும் ஒரேயளவான வாக்காளர் எண்ணிக்கையை கொண்டவை அல்ல. மற்றும் ஒரேயளவு வாக்க்ளிப்பு வீதம் எல்லா வட்டாரங்களிலும் இடம் பெறாது. இதனால் கூடியளவு வாக்களிப்பு இடம்பெறும் இடத்து சிறிய கட்சிகள் கூடுதல் பலனைப் பெறுவர். சிறிய கட்சிகளின் ஆதரவாளர்கள் பொதுவில் கட்சிச் செயற்பாடுகளில் கூடிய கரிசனை கொண்டவர்கள். இதனால் ஒப்பீட்டு ரீதியில் பெரிய கட்சி ஆதரவு வாக்காளர்களிலும் பார்க்க சிறிய கட்சி ஆதரவு வாக்காளர்களின் வாக்களிப்பு விகிதம் பொதுவில் உயர்வாக இருக்க வேண்டும். இன்றைய தேர்தல் முறையில் சிறிய கட்சிகள் தனித்தோ அல்லது பெரிய கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து தமக்குரிய அங்கத்தவர்களையும் உரிய இடத்தைப் பெறமுடியும். இந்நிலையில் இத்தேர்தல் முறைக்கு ஆரம்பத்தில் சிறிய கட்சிகள் காட்டிய எதிர்ப்பு இல்லாது போயிற்று.




சிறுபான்மையினக் கட்சிகளான முஸ்லிம் காங்கிரஸ்- (தலைவர், ரவூப் ஹக்கீம்), மக்கள் காங்கிரஸ் (தலைவர், நிசாத் பதியுதீன்), தேசிய காங்கிரஸ் (தலைவர், அதாவுல்லா) போன்றனவும் மலையகக் கட்சிகள் மனோகணேசன், திகாம்பரம், தொண்டமான் ஆகியோரும் வட்டார நிர்ணயத்தை விமர்சித்தனர். ஆரம்பத்தில் இவர்கள் வட்டார நிர்ணயம், வட்டார மீள் நிர்ணயம் பற்றியே குறிப்பிடுகிறார்களா? என நோக்கிய பொழுது இவர்களது பிரச்சினைகள் வேறாக இருந் தன.

தங்கள் சமூகத்திற்கு போதியளவு உள்ளூராட்சி சபைகள் அமைத்துக் கொடுக்கப் படவில்லை.

ஒரேயளவு மக்கள் தொகை கொண்ட சபைகளில் அங்கத்தவர் எண்ணிக்கையில் பெரிய வேறுபாடுகள் இருத்தல்.

நீண்டகாலமாக மக்கள் கோரி வந்த புதிய உள்ளூராட்சி சபைகளை அமைக்கவில்லை.

பல பிரதேச சபைகள் இன்று நகரங்களாக வளர்ச்சி பெற்றதால் இவைகளை நகர சபைகளாக மாற்றவேண்டும்.

இலங்கை பூராகவும் புதிய உள்ளூராட்சி சபைகள் அமைப்பதில் காட்டும் அரசின் மெத்தனப் போக்கு குறித்து கூறப்பட்ட கருத்துக்கள், விடயங்கள் ஊடகங்கள் சரியாக பிரித்துக்காட்டாது வட்டார நிர்ணயத்துடன் தொடர்புபடுத்தின. உள்ளூராட்சித் தேர்தல் சட்டம் பாராளுமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட பொழுது, சிறுபான்மைக் கட்சிகள் இப்பிரச்சினைகளை முன்னெடுத்த பொழுது பிரதமர் கொடுத்த உத்தரவாதத்தை ஏற்று வாக்களித்தனர்.

மலையக கட்சிகள் குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தை எடுத்து நோக்கும் பொழுது இம்மாவட்டம் 7 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்களைக் கொண்டிருந்தும் ஐந்து பிரதேச சபைகளே இருக்கின்றன என்றும் இதில் அம்பேகம கோறளைப் பிரதேச சபை 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களையும் நுவரெலியா பிரதேச சபை 2 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்களைக் கொண்டுள்ளது என்றும் இப்பகுதிகள் கூடுதலாக சமூகப் பொருளாதார ரீதியில் பின்தங்கிய இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் வாழ்வதுடன் இது மலைப்பகுதி என்றும் போக்குவரத்து வசதி குறைந்த தென்றும் சுட்டிக்காட்டி இலங்கையின் பல பகுதிகளில் 5 ஆயிரம், 10 ஆயிரம், 20 ஆயிரம் மக்களுக்குப் பிரதேச சபைகளும் நகர சபைகளும் இருக்க ஏனிந்த பிரதேச மக்களில் பாரபட்சம் காட்டுகின்றீர்கள். இதற்குத் தீர்வாக நுவரெலியா மாவட்டம் 12 பிரதேச செயலகங்களாகவும் 12 பிரதேச சபைகளாகவும் மாற்றப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்தபொழுது, பிரதமர் இதற்கு உடன்பட்டு குறிப்பிட்ட காலத்துக்குள் செய்து தருவதாக உறுதியளித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற அங்கத்தவர்கள் செயலகமும் துரிதமாக செயற்பட்டு 12 பிரதேச சபைகளை இனங்கண்டுள்ளதாக அறியக்கிடக்கிறது.

பிரதேச சபைகள் பின்வருமாறு, நோர்வூட், மஸ்கெலியா, அம்பேகமுவ, தலாவாக்கலை, அக்கரைப்பத்தனை, வலப்பனை, நில்தாகின்ன, கொத்மலை மேற்கு, கொத்மலை கிழக்கு, மதுரட்ட, ஹங்குராங்கெத்த பிரிவுகள் இனங்காணப்பட்டுள்ளன. நல்லது நடக்கும் என எதிர்பார்க்கலாம்.

நுவரெலியா மாவட்டத்தில் புதிய பிரதேசங்கள் உருவாக்க உடன்பட்ட நிலையில் மலையகப் பகுதிகள் இந்திய வம்சாவளித் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பெருந் தோட்டத் துறை பிரதேசங்களில் புதிய பிரதேச செயலகப் பிரிவுகள் உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கை இந்திய வம்சாவளி தமிழ்த் தலைவர்களால் முன்னெடுக்கப்படுகின்றன. இதனால் பதுளை, மாத்தளை, இரத்தினபுரி, கேகாலையில் தும்கோரளைப் பகுதி போன்ற பகுதிகளில் சில பிரதேச செயலகங்களும் சபைகளும் உருவாகும் வாய்ப்புக்களுண்டு. எனினும் இக்கோரிக்கைகளுள் சில, சில காலங்களின் பின் நிஜமாக வரலாம். (தொடரும்)

# நவராத்திரி விரதத்தை எப்போது ஆரம்பிக்கலாம்

## இந்து சமய அலுவல்கள் திணைக்களம் விசேட அறிக்கை

(கொழும்பு)

இவ்வருடநவராத்திரி விரதம் ஆரம்பிக்கும் தினம் தொடர்பாக வாக்கிய பஞ்சாங்கம் மற்றும் திருக்கணித பஞ்சாங்கம்என்பவைமுறையே 20.09.2017 புதன்கிழமை மற்றும் 21.09.2017 வியாழக்கிழமை என இரு வேறு தினங்களை குறிப்பிட்டுள்ளதனால் இந்து மக்கள் மத்தியில் நவராத்திரி ஆரம்பிக்கும் தினம் தொடர்பாக குழப்ப நிலை உருவாகியுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக திணைக்களம் உரிய தரப்பினர்களது ஆலோசனைகளை பெற்றுக்கொண்டு பின்வரும் விபரங்களை மக்களுக்கு அறிவிக்கின்றது.

நவராத்திரி விரதம் ஆரம்பிப்பதை நிர்ணயிக்கும் பிரமாணங்களை ஆராயும் போது சாந்திர மாத ஆஸ் விஜசுத்தபிரதமையன்று நவராத்திரி விரதம் ஆரம்பிக்க வேண்டும். இதன்பிரகாரம் அமாவாசை சேராத பிரதமையில் நவராத்திரி விரதம் ஆரம்பிக்கப்பட வேண்டும். அமாவாசை சேர்ந்த பிரதமையில் கும்பஸ்தாபனம் செய்தல் விலக்கழிக்கப்பட வேண்டும் என்பதுடன் கும்பஸ்தாபனம் காலையில் செய்தல் வேண்டும் என நவராத்திரி பூஜா பத்ததையில் (சுப்பிரமணிய சாஸ்திரிகள்) குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்பிரகாரம் 20.09.2017 புதன்கிழமையன்று அமாவாசையானது திருக்கணித பஞ்சாங்கப்படி மு.ப. 10.59 வரையும் வாக்கிய பஞ்சாங்கப்படி மு.ப. 11.23 வரையும் உள்ளதால் அன்றைய தினம் அமாவாசை சேர்ந்த பிரதமையில் நவராத்திரி விரதத்தை ஆரம்பிக்க முடியாது. மேலும் 21.09.2017 வியாழக்கிழமைதிருக் கணித பஞ்சாங்கப்படி மு.ப.10.35 வரையும் வாக்கிய பஞ்சாங்கப்படி மு.ப 11.02 வரையும் பிரதமை திதியில் அதாவது ஆஸ் விஜசுத்தப் பிரதமை உள்ளதால் 21.09.2017 வியாழக்கிழமையே கும்பஸ் தாபனம் செய்து நவராத்திரி விரதத்தை ஆரம்பிக்க முடியும்என இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் விடுத்துள்ள செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)


# இன்றும் பிரிவினைவாதம் நாட்டில் நிலவுகின்றது

## பிரதியமைச்சர் அமீர் அலி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கடந்த காலத்தில் சமூக தலைவர்கள் தமிழர், முஸ்லிம் மற்றும் வடக்கு தமிழர் என பிரித்து வைத்தது மட்டுமல்லாது சிங்கள பெருந்தலைவர்களிடத்திலும் மதத் தலைவர்களிடத்திலும் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளை சரியான முறையில் கொண்டு செல்லவில்லை.

அதன் காரணமாக இன்று பிரிவினைவாதம் நாட்டில் நிலவுகின்றது என கிராமிய பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் அமீர் அலி தெரிவித்தார்.



கொட்டக்கலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மலையக மக்கள் முன்னணியின் இளைஞர் மாநாடு நிகழ்வில் விசேட விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் கல்வி இராஜாங்க அமைச்சருமாகிய வே.இராதாகிருஸ்னன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றுகையில் அமைச்சர் இராதாகிருஸ்ணன் தான் சார்ந்த சமூக அக்கறையுடைய சிறந்த தலைவர்.

கடந்த கால மலையக அரசியல் தலைவர்கள் தங்களின் சமூகம் சார்ந்து சரியான போராட்டத்தை முன்னெடுத்து இருந்தால் இன்று நுவரெலிய மாவட்டத்திற்கு பிரதேச செயலகங்களை அதிகரிக்க வேண்டிய அவசியம் இல்லை.

கடந்தகால தவறுகளை மாற்றியமைக்கு சிறந்த தலைமைத்துவம் இன்று கிடைத்துள்ளது.

கடந்த கால அரசியல் தலைவர்களை போல் அல்லாது அமைச்சர் இராதாகிருஸ்ணன் அனைவரையும் இணைத்துக்கொண்டு வெற்றிப்பயணத்தை முன்னெடுக்கும் ஒரு நல்லலெண்ண நிகழ்வாக இளைஞர் நாட்டிடை உணர்கின்றேன் என்று அமீர் அலி மேலும் தெரிவித்தார். (இ-3)

# வல்லிபுர ஆழ்வார் கோவில் வருடாந்த மஹோற்சவம்

துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 17 தினங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 30 ஆம் திகதி பாம்புத்திருவிழாவும், முதலாம் திகதி ஞாயிற்றுக் கிழமை கம்சன் போரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை வேட்டைத்திருவிழாவும் 3 செவ்வாய்க்கிழமை சப்பறத் திருவிழாவும், 4 ஆம் திகதி புதன் கிழமை தேர்த்திருவிழாவும் 5 ஆம் திகதி வியாழக்கிழமை சமுத் திரத் தீர்த்தமும் 6 ஆம் திகதி வெள்ளிக் கிழமை கேணித்தீர்த்தமும் இடம்பெற்று அன்று மாலை 6 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறும். (இ-60)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1193

Search for people, places and things Nagendram Home

### வர்ஷினி

நமக்குப் பிடித்தவர் சூழ்ச்சி செய்து வென்றால் கிருஷ்னர்...



நமக்கு பிடிக்காதவர் சூழ்ச்சி செய்து வென்றால் சகுனி...!

### தனுஜன்

டாக்டர்: எம்மா அந்த பேஷன்ட் பேர் என்ன?

நர்ஸ்: வாழுவந்தான் சேர்...



டாக்டர்: அப்புறம் ஏன்மா அவன் இங்க வந்தான்...?

### தேனுகா

ஐ லவ் யூ, நீ இல்லாத ஒரு வாழ்க்கையை நினைச்சு கூட பார்க்க முடியாது.

நீ இல்லனா என்னால உயிர் வாழ முடியாது...



சாப்பாடு.

### சங்கீதன்




### ஜதுசன

உங்க மனைவி காணாமல்போனதுக்கு ஏன் குடுகுடுப்பைக் காரனுக்கு நூறு ரூபாய் கொடுக்கறீங்க?



அவன்தான் ரெண்டு நாலைக்கு முன்னாடி ஐயாவுக்கு நல்ல காலம் பொறக்குதுன்னு சொன்னான்...

### சகானா

உடல் இளைக்கனும்னா யோகா, கிரீன் டீ, தேனுல பால் அப்படினு ஆளாளுக்கு ஒவ்வொன்னா சொல்றாங்க...




ஆனா ஒருத்தன் கூட உழைக்கனும்னு சொல்ல மாட்டேங்கிறாங்க...!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தொலைக்காட்சி உலகில் மக்களை ஈர்த்த பிக்போஸ்




## பிக்போஸ் வீட்டில் பிந்துவுக்கு மிகவும் பிடித்த நபர்




பிக்போஸ் நிகழ்ச்சி நேற்று முன்தினம் சனிக்கிழமை மிகவும் பரபரப்பாக இருந்தது. அதோடு நிகழ்ச்சியில் இருந்து யார் வெளியேறுவார்கள் என்ற பெரிய கேள்வி ரசிகர்களிடம் இருக்கிறது.

இந்த நிலையில் புதிதாக வந்த புரமோவில் கமல் ஹாசன் பிந்து மாதவியிடம் வீட்டில் உங்களுக்கு பிடித்த நபர் யார் என்று கேட்கிறார். அதற்கு பிந்து மாதவி அழுதுகொண்டே வையாபுரி மற்றும் ஆரவ் மிகவும் பிடித்தவர்கள் என்று கூறுகிறார்.

வீட்டில் இருக்கும் பொழுது, விந்துமாதவி பெரிதும் வையாபுரியுடன் அண்ணா அண்ணா என்று அன்புடன் பழகுவது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## பிக்போஸ் நிகழ்ச்சியில் எண்ட்ரியாகும் ஓவியா ரசிகர்கள் கொண்டாட்டம்



பிக்போஸ் நிகழ்ச்சியில் அனைவரையும் கவர்ந்தவர் ஓவியா. மற்ற போட்டியாளர்களின் நெருக்கடியால் மனம் வெறுத்து தற்கொலை வரை முயன்று வெளியேறினார்.

மீண்டும் மற்ற போட்டியாளர் திரும்ப வந்த போது கூட பிக்போஸ் வீட்டிற்கு செல்ல விரும்பவில்லை என்றார். ஆனால் விரைவில் இந்த நிகழ்ச்சி முடிவடையவிருக்கிறது.

இந்த நிகழ்ச்சியின் கடைசிநாள் நிகழ்ச்சியில் ஓவியா கலந்து கொள்ளவிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

## பிக்போஸ் வீட்டுக்குள் நுழைந்த கமல் போட்டியாளர்களை என்ன செய்தார் தெரியுமா?



பிக்போஸ் என்ற நிகழ்ச்சி முதலில் பிரபலமானதற்கு காரணம் கமல்ஹாசன். வாரம் பார்ப்பவர்களை விட சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் கமல்ஹாசனை பார்ப்பதற்காகவே நிறைய பேர் நிகழ்ச்சியை பார்க்கின்றனர்.

இந்த நிலையில் புதிய புரமோவில் கமல்ஹாசன் பிக்போஸ் வீட்டிற்குள் சென்று போட்டியாளர்களிடம் ஜாலியாக கலந்துரையாடுகிறார்.

வீட்டில் உள்ளவர்களை மிகவும் அன்புடன் கட்டியணைத்து பாசத்தை பொழிந்தார் கமல்.

## பிக்போஸில் வெளியேறினவங்க எங்க போறாங்க தெரியுமா? ஸ்ரீபிரியாவின் பதில்




பிக்போஸ் நிகழ்ச்சி 100 நாட்களை எட்டும் நிலையை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறது.

இந்நிகழ்ச்சி குறித்து அடிக்கடி தன் தெரிவித்து வருகிறார் நடிகை ஸ்ரீபிரியா. ஒவ்வொரு போட்டியாளராக வெளியேறி வருகின்றனர்.

எவிக்‌ஷன் முடிந்து அவர்கள் வெளியே செல்லும் போது பிரிவால் மற்றவர்கள் அழுவது சகஜமாகிவிட்டது. இந்நிலையில் ஸ்ரீபிரியா ஏன் எவிக்ட் ஆனா அழுறாங்கு புரியல.

அவங்க நிலாவுக்கு ஸ்டேயிட்டா போறாங்க. எல்லாருமே இறுதியை நோக்கி போகிறோம். மீண்டும் சந்திக்க போகிறோம். நண்பர்களாக இருக்கப்போகிறோம் என கூறியுள்ளார்.

## என்னை அனுப்பிவிடுங்கள் என்றுசொன்ன போட்டியாளர் காப்பாற்றப்பட்டுள்ளார்



பிக்போஸ் நிகழ்ச்சியில் ஒவ்வொரு வார இறுதியிலும் உலகநாயகனின் வருகை அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

அந்தவகையில் இந்த வாரம் ஒவ்வொருவரின் நிறை குறைகளை பற்றி பேசியவர் எலிமினேஷன் லிஸ்டில் உள்ள நான்கு பேரில் ஹரிஷ் காப்பாற்றப்பட்டதாக அறிவித்தார்.

ஆனால் ஹரிஷ் தன்னை வெளியேற்றிவிடுங்கள் என்று பிக்போஸிடம் தெரிவித்திருந்தார் என்பது குறிப் பிடத்தக்கது.

சிநேகன், ஆரவ், வையாபுரி மூவரில் யார் வெளியேறுவார்கள் என்பதை பின்னர் உலகநாயகன் தெரிவிப்பார்.

## கோல்டன் ரிக்கெட் மூலம் இறுதிச் சுற்றுக்கு சென்ற முதல் நபர் இவர்தான்

கமல் தொகுத்து வழங்கும் பிக்போஸ் நிகழ்ச்சியானது இறுதி கட்டத்தை எட்டி உள்ளது. இந்த வாரம் முழுக்க போட்டியாளர்களுக்கு கடுமையான டாஸ்க் கொடுக்கப்பட்டது. குறிப்பாக கார் டாஸ்க் போட்டியாளர்களுக்கு பெரும் சவாலாக இருந்தது.

இந்த வார டாஸ்க் மூலம் அதிக புள்ளிகள் பெற்ற ஒருவருக்கு கோல்டன் டிக்கெட் கொடுக்கப்பட உள்ளது. இதனை கொடுக்க தானே நேரடியாக பிக்போஸ் வீட்டிற்கு வருவேன் என்று கடந்த வாரம் கமல் கூறி இருந்தார்.

இந்த கோல்டன் டிக்கெட் சிநேகனுக்கு கிடைத்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனால் அவர் நேரடியாக இறுதிப்போட்டிக்கு சென்ற முதல் நபர் என்றும் கூறப்படுகிறது.

ஒருசிலர் ஆரவ், கணேஷ் இவர்களில் ஒருவருக்கு கிடைக்கும் என்றும் கூறிவருகின்றனர். அதே நேரம் கமல் வீட்டிற்கு செல்லும் நேரம் எவிக்‌ஷனில் உள்ள வையாபுரி வெளியேறியுள்ளதாக புகைப்படம் ஒன்று வெளியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# புரட்டாதி மாத இராசி பலன்கள்

## 17.09.2017-17.10.2017



மற்றவர்கள் மனதைப் புரிந்து கொண்டு செயற்படும் சிம்ம இராசி வாசகர்களே!

புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சூரியன் தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். தனாதிபதி புதன் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கின்றார். சூரியனும் புதனும் ஒரே நேரத்தில் தங்களது வீடுகளை மாற்றி, சூரியன் வீட்டில் புதனும், புதன் வீட்டில் சூரியனும் சஞ்சரித்து பரிவர்த்தனை யோகத்தைக் கொடுக்கின்றார். யோகங்களில் சிறப்பான யோகம் பரிவர்த்தனை யோகமாகும்.

இதன் விளைவாக பொருளாதாரத்தில் மிகுந்த முன்னேற்றம் காணப்போகிறீர்கள். உங்கள் கனவுகள் எல்லாம் நனவாகும். குருவும் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் இதுவரை இருந்த தடைக் கற்கள் எல்லாம் அகலும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். இடையிடையே ஸ்தம்பித்திருந்த தொழில் இனி சீராக நடைபெறும். குடும்பத்தில் நடைபெற இருந்த சுபகாரிய நிகழ்வுகளில் ஏற்பட்ட தாமதங்கள் அகலும்.

கல்யாணமாக இருந்தாலும், காதணி விழாவாக இருந்தாலும், கடடடத் திறப்பு விழாவாக இருந்தாலும் இனி துரிதமாக நடைபெறும். வள்ளங்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும்.

சனி அர்த்தாஷ்டமச்சனியாக சஞ்சரிப்பதால ஆரோக்கியத் தொல்லைகள் ஏற்படுமே என்று நீங்கள் நினைக்க வேண்டாம். சனி விலகும் நேரம் வந்து விட்டது. விலகுவதற்குச் சில மாதங்கள் முன்னதாகவே நன்மைகளையே செய்யத்தொடங்கும் என்பதால் இனி மன நிம்மதி கிடைக்கும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். கூட்டு முயற்சிகளில் இருந்து விடுபட்டுத் தனித்து இயங்க முற்படுவீர்கள்.

உங்கள் இராசியில் சஞ்சரித்து வந்த இராகு பகவான் சில நாட்களுக்கு முன்பு 12 ஆம் இடத் திற்குச் சென்று கடக இராசியில் சஞ்சரிக்கின்றார். சப்தம ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த கேது பகவான் 6ஆம் இடத்திற்கு வந்துள்ளார். எனவே உத்தியோகத்தில் உள்ளவர்கள் திடீர் மாற்றம் ஏற்பட்டு இடமாறுதல் காணப் போகின்றார்கள். இது போன்ற காலங்களில் வழிபாடுகள் உங்களுக்குத் தேவை. சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டையும், பெருமாள், லட்சுமி வழிபாட்டையும் மேற்கொள்வது நல்லது.

## தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும்

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

24.9.2017 அன்று கன்னி இராசிக்குப் புதன செல்கின்றார். புதனுக்கு அந்த வீடு உச்ச வீடு என்றாலும் புதன் பகவான் வலிமை இழந்து சஞ்சரிக்கின்றார். அத்துடன் ஒக்டோபர் 9ஆம் திகதி துலாம் இராசிக்குப் புதன் செல்கின்றார். அங்கும் வலிமை இழந்து தான் சஞ்சரிக்கின்றார். எனவே இக்காலம் ஒரு பொற்காலமாகும். தன லாபாதிபதி உச்சம் பெறும் பொழுது தொழில வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.

வருமானம் திருப்தி தரும். வருங்கால நலன்கருதி நீங்கள் செய்யும் செயல்களுக்கு வெற்றி கிடைக்கும். உறவினர்கள் உங்கள் முயற்சிக்கு உறுதுணையாகச் செயற்படுவர். துலாததில் புதன் சஞ்சரிக்கும் பொழுது மாமன், மைத்துனர் வழியில் உதவிகளும், ஒத்துழைப்பும் கிடைக்கும். வழக்குகள் சாதகமாகும. தொழில் முன்னேற்றம் உண்டு.




**நீச்ச சுக்ரனின் சஞ்சாரம்!**

ஒக்டோபர் 10ஆம் திகதி கன்னி இராசிக்குச் சுக்ரன் செல்கின்றார். அது சுக்ரனுக்குரிய நீச்ச வீடாகும். வலிமை இழந்து வீட்டில் சுக்ரன் சஞ்சரித்தாலும் நறபலன்களையே அவர் வழங்குவார். காரணம் சூரியனோடு சுக்ரன் சேர்க்கை பெற்றிருக்கின்றார். 3, 10-க்கு அதிபதி நீச்சம் பெறுவதால் தொழில் பங்குதாரர்களால் தொல்லைகள் ஏற்படலாம். பங்குதாரர்களை மாற்றிக் கொள்ள முன்வருவீர்கள் பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**செவ்வாய் பெயர்ச்சிக் காலம்!**

ஒக்டோபர் 14ஆம் திகதி கன்னி இராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். உங்கள் இராசிகு யோக கிரகமான செவ்வாய், கன்னி இராசிக்குச் செல்லும் பொழுது சொத்துகளால் ஆதாயம் கிடைக்கும். சொந்தங்களால் நன்மை உண்டாகும். தந்தை வழி உறவிலிருந்த விரிசல் மறையும். பூர்வீக சொத்துகளில் இருந்த பஞ்சாயத்துகள் நல்ல முடிவிற்கு வரும்.

இம்மாதம் சனிக்கிழமைதோறும் விநாயகப் பெருமானை வழிபாடு செய்வது நல்லது. சங்கடஹர சதுர்த்தி விரதத்தின் மூலம் சங்கடங்களை அகற்றிக் கொள்ள இயலும். மகாளய அமாவாசை அன்று முன்னோர் வழிபாட்டை முறையாக மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

இம்மாதம் பரிவர்த்தனை யோகமும், புத ஆதித்ய யோகமும் செயற்படும் மாதம் என்பதால் பணக்கவலை தீரும். பாராட்டும், புகழும் கூடும். மனதளவில் செய்ய நினைத்ததை மறுகணமே செய்து முடிப்பீர்கள். கணவன்-மனைவிக்குள் பாசமும், நேசமும் அதிகரிக்கும். குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். உடன்பிறப்புகள் உங்கள் பணிக்கு உறுதுணையாக இருப்பர். கடன் சுமை குறையும். அலுவலகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். பராசக்தி வழிபாடு அனைத்து நலன்களையும் வழங்கும்.

**ஜோதிடக் கலாமணி**
**சிவல்புரி சிங்காரம்**



உறவிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் உன்னத குணம் பெற்ற கன்னி இராசி வாசகர்களே!

புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் விரயஸ்தானத்தில் இருக்கின்றார். விரயாதிபதி சூரியன் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கின்றார். எனவே குடும்பச்சுமை கூடுதலாக இருக்கும். கொடுக்கல்-வாங்கல்களில் திருப்தி ஏற்படாது. கடுமையாக முயற்சி செய்தே ஒருசில காரியங்களை நிறைவேற்றிக் கொள்ள இயலும்.

குருப்பெயர்ச்சியாகிவிட்டதே இனி நமக்கு நன்மைகள் நடைபெறும் என்று எதிர்பார்த்துக் காத்திருக்கும் போது, இப்படி விரயத்திற்கான அறிகுறி தென்படுகின்றதே என்று நீங்கள் நினைக்க வேண்டாம். ஜென்ம குரு மாறியதால் சிரமங்கள் பாதிக்கு மேல் குறையும். இருந்தாலும் இதுபோன்ற விரயாதிபதி பலம் பெற்றிருக்கும் காலங்களில் விரயங்கள் ஏற்படத் தான் செய்யும். 'இவ்வாறு ஏற்படும் விரயங்களைச் சுபவிரயங்களாக மாற்றிக் கொள்வது நல்லது. வீடு கட்டுவது, வாகனம் வாங்குவது, மின்சாதனப் பொருட்கள் வாங்குவதற்கும் செலவிடலாம்.


வருமானம் திருப்திகரமாக இருக்கும் என்பதால் செலவைப் பற்றி யோசிக்க வேண்டியதில்லை. எனவே தனாதிபதி சுக்ரன் 12இல் சூரியன் வீட்டில் இருந்து நற்பலன்களை அதிகம் வழங்கப் போகின்றது. 2இல் வந்த குரு திரண்ட செல்வத்தைக் கொடுப்பார். திட்டமிட்ட காரியங்களைத் திட்டமிட்ட படியே நடத்துவதில் தாமதங்கள் ஏற்பட்டாலும் காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடி வரும்.

உங்கள் இராசிக்கு 5, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். அவர் 3இல் இருப்பது ஒருவகையில் நன்மைதான். 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம்' என்பதற்கு ஏற்ப சில எதிர்பாராத திருப்பங்களும் ஏற்படும். உத்தியோகத்தில் உயர்வு, ஊதியத்தில் வராமலிருந்த சம்பளப் பாக்கிகள் கைக்கு வரும். சகோதர விரோதம் விலகும். நிரந்தர வேலைக்காக விண்ணப்பித்திருந்த வர்களுக்கு நல்ல செய்தி வீடு தேடிவரும். குணம் மாறி நடந்த பிள்ளைகள் மனம் மாறுவர்.

இம்மாதம் புதன்கிழமைதோறும் பெருமாளையும், லட்சுமியையும் வழிபாடு செய்வதோடு, அனுமனுக்கு வெற்றிலை மாலை அணிவித்து வழிபட்டு வருவது நல்லது. நவராத்திரி நாட்களில் தொடர்ந்து அன்னை பராசக்தியை வழிபட்டால் எண்ணங்கள் எளிதில் நிறைவேறும்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

செப்டெம்பர் 24ஆம் திகதி கன்னி இராசிக்குப் புதன் செல்கின்றார். இதன் விளைவாக மிகுந் நற்பலன்கள் உங்களுக்கு வந்துசேரப் போகின்றது. குறிப்பாக கன்னி இராசியில் புதன் உச்சம் பெறும் பொழுது உடல் ஆரோக்கியம் சீராகும். மதிப்பும்,




மரியாதையும் உயரும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். ஒக்டோபர் 9ஆம் திகதி துலாம் இராசிக்கு, புதன் செல்கின்றார். புதனுடைய சஞ்சாரம் கொஞ்சம் வலிமை இழந்திருந்தாலும்கூட உங்கள் இராசிநாதனாக இருப்பதால் ஓரளவு நன்மைகளையே வழங்குவார். தொழில்ஸ்தானாதிபதியாகவும் புதன் இருப்பதால் இக்காலத்தில் தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.

## எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்

**நீச்ச சுக்ரனின் சஞ்சாரம்!**

சுக்ரன் உங்கள் இராசிக்கு ஒக்டோபர் 10ஆம் திகதி வருகின்றார். கன்னி இராசி சுக்ரனுக்கு நீச்ச வீடாகும். எனவே இக்காலத்தில் பணப்புழக்கம் கொஞ்சம் குறைவாகவே இருக்கும். ஒருசிலருக்கு நெருக்கடியைச் சமாளிக்க பிறரிடம் கைமாற்று வாங்கும் சூழ்நிலை கூட உருவாகலாம். தந்தை வழியில் விரோதங்கள் வளரும். வியாபாரத்தில் பங்குதாரர்களால் ஏமாற்றம் உருவாகலாம். எதிலும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய நேரமிது.

**செவ்வாய் பெயர்ச்சிக் காலம்!**

ஒக்டோபர் 14ஆம் திகதி கன்னி இராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். இக்காலத்தில் நீங்கள் எதிலும் முன்னெச்சரிக்கையுடன் செயற்படுவது நல்லது. குறிப்பாக சகோதர விரோதம் வளரும். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் மீண்டும் உங்களிடமே வந்து சேரும். புதியவர்களை நம்பி எந்த முயற்சியிலும் ஈடுபடக்கூடாது. சொத்துப் பிரச்சினைகள் தலைதூக்கும். பணியில் நெருக்கடிகள் அதிகரிக்கும்.

இம்மாதம் பிரதோஷ வழிபாட்டை மேற்கொள்வதோடு மகாளய அமாவாசையன்று முன்னோர் வழிபாட்டிலும் கவனம் செலுத்துங்கள். நவராத்திரி விழாவில் கலந்து கொண்டு அம்பிகையை தரிசனம் செய்வது அதிக பலன்களைக் கொடுக்கும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**


இம்மாதம் விரயங்கள் கொஞ்சம் கூடுதலாகவே இருக்கும். வீட்டுச் செலவுகள் அதிகரிக்கும். சென்ற மாதத்தில் சேமித்த சேமிப்புகள் கரையலாம். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். குழந்தைகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். உறவுகள் பகையாகலாம். மறைமுக எதிர்ப்புகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது. தாயின் உடல் நலம் சீராகும். வீடு வாங்கும் யோகம் ஒருசிலருக்கு உண்டு. புதன் தோறும் விஷ்ணு, லட்சுமி, வழிபாட்டை மேற்கொள்வதோடு நவராத்திரி நாட்களில் அன்னை புவனேஸ்வரியை வழிபடுவதன் மூலம் அனைத்து நலன்களும் வந்து சேரும்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## நோயாளியின் பெருந்தன்மை



அது பல படுக்கைகள் கொண்ட பெரிய மருத்துவ மனை. அவற்றில் ஒரு அறையில் இரு தீவிர நோயாளிகள். ஒருவரை இன்னொருவர் பார்த்தது இல்லை. இருவருக்குமிடையே ஒரு தடுப்புச் சுவர். ஒருவர் படுக்கை ஜன்னல் அருகில். இன்னொருவருக்கு ஜன்னல் கிடையாது. எப்போதாவது வந்து செல்லும் மருத்துவச் செவிலியைத் தவிர தனிமை.. தனிமை.. தனிமை..!

ஜன்னல் படுக்கை நோயாளிக்கு புற்றுநோய். இன்னொருவர் கடும் எலும்பு முறிவு நோயாளி. நாளடைவில் நட்பாகிவிட்டனர். ஒருமுறை எலும்பு நோயாளி ஜன்னல் நோயாளியிடம் சொன்னார்.

"உனக்காவது பொழுது போக்க, ஒரு ஜன்னல் இருக்கிறது.. எனக்கு அதுகூட இல்லை..!" கவலைப்படாதே நண்பா.. நான் ஜன்னலூடே என்னென்ன காண்கிறேனோ, அவ்வளவையும் உன்னிடம் விவரிக்கிறேன். இதை ஒரு ஒப்பந்தமாகவே கடைப்பிடிப்பேன்..!

அன்று முதல் ஜன்னல் நோயாளி, தான் கண்ட காட்சிகளை சுவைபட தன் நண்பனுக்குக் கூறலானார்.. நண்பா.. ஜன்னலுக்கு வெளியே ஒரு பெரிய ஏரி.. நடுவில் சிறு தீவு.. ஏரியில் படகுகள் மிதக் கின்றன.. ஏரிக்கரையில் அழ கான பூங்கா..! சிறுவர்கள் தங்களை மறந்து விளையாடு கிறார்கள்.

எலும்பு நோயாளிக்கு அப்படியே காட்சிகள் மனக்கண்ணில் விரியும்.. ஜன்னல் நோயாளி இன்னொரு நாள் சொல்வார்..

"ஏரிக்கரை ஓரமாக ஒரு சாலை.. அதில் மணப்பெண் அழைப்பு ஊர்வலம் போய்க் கொண்டிருக்கிறது.. குழந்தைகள் மகிழ்ச்சியுடன் ஓடித் திரிகின்றன. மணப்பெண்ணிடம் தோழி ஏதோ சொல்கிறாள்.. மணப்பெண் முகத்தில் அப்படி ஒரு வெட்கம்..!"

ஊர்வல அரவங்கள் எதுவும் எலும்பு நோயாளிக்கு கேட்கவில்லையாயினும் நாதஸ்வரமும், தவிலும் ஒலிக்க ஊர்வலம் போகும் காட்சியை நன்கு அனுபவிப்பார்..

ஒருநாள் ஜன்னல் நோயாளி இறந்து போனார்..

மீண்டும் எலும்பு நோயாளிக்கு வெறுமை ஒருநாள் செவிலி வந்தபோது, தன் படுக்கையை ஜன்னல் ஓரமாக மாற்றித்தரும்படி கேட்டுக் கொள்ள, அவ்வாறே செய்யப்பட்டது.

இனி எனக்கு நன்கு பொழுது போகும் என்று எண்ணியவாறே.. தன் எலும்பு முறிவு வலியையும் பொருட் படுத்தாமல் மெல்ல தன் உடலை உயர்த்தி ஜன்னல் வழியே நோக்க. அங்கே பெரிய சுவர்..! வேறு எதுவுமே இல்லை..! அப்படியானால் ஜன்னல் நோயாளி சொன்ன கதைகள்?

மறுநாள் செவிலி வந்தவுடன், நடந்தவற்றை எலும்பு நோயாளி கூறினார். செவிலி, எலும்பு நோயாளிக்கு ஊசி மூலம் மருந்தை ஏற்றியபடியே சொன்னாள்..

நீங்கள் பார்க்கும் சுவர் கூட அவருக்கு தெரிந்திருக்காது.. புற்றுநோயின் தாக்கத்தால் அவர் பார்வையை எப்போதோ இழந்து விட்டிருந்தார்..!"

நீதி : தன் துன்பங்களை மறைத்துக்கொண்டு மற்றவர்களை உற்சாகப்படுத்தும் மிகச்சில மனிதர்கள் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள்.. அவர்களைப் போற்றாவிட்டாலும் பரவாயில்லை.. குறை கூறாதீர்கள்..!




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1502 - கிறிஸ்தோபர் கொலம்பஸ் தனது நான்காவதும் கடைசியுமான கடற்பயணத்தின் போது கொஸ்டா ரிக்காவில் தரையிறங்கினார்.
- 1635 - புனித ரோமப் பேரரசன் இரண்டாம் பேர்டினணட் பிரான்ஸ் மீது போர் தொடுத்தான்.
- 1739 - பெல்கிரேட் நகரம் ஒட்டோமான் பேரரசிடம் கையளிக்கப்பட்டது.
- 1759 - கியூபெக் நகரை பிரித்தானியர் கைப்பற்றினர்.
- 1809 - லண்டனில் ரோயல் ஒப்பரா மாளிகை திறக்கப்பட்டது.
- 1851 - நியூயோர்க் டைம்ஸ் இதழ் முதன் முதலில் வெளியிடப்பட்டது.
- 1895 - புக்கர் டி. வாஷிங்டன் தனது புகழ்பெற்ற "அட்லாண்டா மத்தியஸ்தம்' என்ற சொற்பொழிவை ஆற்றினார்.
- 1906 - ஹொங்கொங்கில் ஏற்பட்ட புயல் மற்றும் ஆழிப்பேரலையினால் 10,000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1911 - ரஷ்யப் பிரதமர் பீட்டர் ஸ்டோலிப்பின் கீவ் ஒப்பரா மாளிகையில் சுடப்பட்டார்.
- 1914 - முதலாம் உலகப் போர்: தென்னாபிரிக்கப் படைகள் ஜேர்மனியின் தென் மேற்கு ஆபிரிக்காவில் தரையிறங்கினர்.
- 1919 - நெதர்லாந்தில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.
- 1922 - உலக நாடுகள் அணியில் ஹங்கேரி இணைந்தது.
- 1924 - மகாத்மா காந்தி இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காக 21-நாள் உண்ணாநோன்பைத் தொடங்கினார்.
- 1934 - சோவியத் ஒன்றியம் உலக நாடுகள் அணியில் இணைந்தது.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: டென்மார்க் யூதர்களை வெளியேற்ற ஹிட்லர் உத்தரவிட்டார்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: பிரித்தானிய நீர்மூழ்கிக் கப்பல் ஜப்பானின் ஜுனியோ மாரு என்ற கப்பலைத் தாக்கியதில் டச்சு, ஆஸ்திரேலிய, பிரித்தானியப் போர்க்கைதிகள் உட்பட 5,600 பேர் கொல்லப்பட்டனர்.
- 1959 - வன்கார்ட் 3 பூமியைச் சுற்றிவர அனுப்பப்பட்டது.
- 1960 - பிடெல் காஸ்ட்ரோ ஐ.நா. கூட்டத்தொடரில் பங்குபற்ற நியூயோர்க் நகரை அடைந்தார்.
- 1964 - வியட்நாம். மக்கள் இராணுவம் தென் வியட்நாமினுள் நுழைந்தது.
- 1968 - இந்திய உளவுத்துறை நிறுவனம் றா அமைப்பு உருவாக்கப்பட்டது.
- 1972 - இடி அமீனினால் விரட்டப்பட்ட முதல் தொகுதி உகாண்டா மக்கள் ஐக்கிய இராச்சியத்தை வந்தடைந்தனர்.
- 1974 - சூறாவளி ஹொண்டூராஸைத் தாக்கியதில் 5,000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1982 - லெபனானில் கிறிஸ்தவ துணை இராணுவத்தினர் 600 பாலஸ்தீனரைக் கொன்றனர்.
- 1988 - பர்மாவில் அரசியலமைப்பு நிறுத்தி வைக்கப்பட்டது. மக்களாட்சிக்கு ஆதரவானோர் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர். 8888 எழுச்சி முடிவுக்கு வந்தது.
- 1990 - லிக்டன்ஸ்டைன் நாடு ஐ.நா.வில் இணைந்தது.
- 1997 - 50.3 விழுக்காடு வேல்ஸ் மக்கள் சுயாட்சிக்கு ஆதரவாக வாக்களித்தனர்.
- 2006 - கிழக்கிலங்கை, அம்பாறையில் 11 முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 2007 - மியான்மாரில் பௌத்த பிக்குகள் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டனர்.

பிறப்புகள்

- 1709 - சாமுவேல் ஜோன்சன், ஆங்கிலேயக் கவிஞர் (இ. 1784)
- 1925 - இரா. சாரங்கபாணி, தமிழ்ப் பேராசிரியர், தமிழறிஞர் (இ. 2010)
- 1928 - பண்டரிபாய், தென்னிந்தியத் திரைப்பட நடிகை (இ. 2003)
- 1949 - விஷ்ணுவர்தன், இந்தியத் திரைப்பட நடிகர், பாடகர் (இ. 2009)
- 1961 - ஜேம்ஸ் கண்டோல்பினி, அமெரிக்க நடிகர், தயாரிப்பாளர் (இ. 2013)
- 1968- உபேந்திரா, இந்திய நடிகர், பாடகர்
- 1971 - லான்சு ஆம்ஸ்டிராங், அமெரிக்க மிதிவண்டி வீரர்
- 1973 - ஜேம்ஸ் மார்ஸ்டன், அமெரிக்க நடிகர்
- 1976 - ரொனால்டோ, பிரேசில் கால்பந்தாட்ட வீரர்
- 1979 - வினய், தென்னிந்தியத் திரைப்பட நடிகர்

இறப்புகள்

- 1966 - வித்துவான் க. வேந்தனார், ஈழத் தமிழறிஞர் (பி. 1918)
- 1992 - முகம்மது இதயத்துல்லா, இந்தியாவின் 6வது குடியரசுத் துணைத் தலைவர் (பி. 1905)
- 2011 - டி. கே. கோவிந்த ராவ் கருநாடக இசைக் கலைஞர் (பி. 1929)

சிறப்பு நாள்

- சிலி - விடுதலை நாள் (1810)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 100 | 50 | 120 | 100 | 180 |
| உருளைக்கிழங்கு | 100 | 140 | 90 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 160 | 200 | 150 | 180 | 300 | 300 |
| தக்காளி | 200 | 250 | 150 | 180 | 240 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 80 | 40 | 80 | 60 | 80 |
| கோவா | 80 | 120 | 50 | 100 | 80 | 80 |
| கரட் | 100 | 250 | 90 | 160 | 160 | 70 |
| பூசணி | 40 | 40 | 20 | 40 | 50 | 30 |
| புடோல் | 120 | 100 | 60 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 100 | 100 | 70 | 100 | 120 | 100 |
| சின்ன வெங்காயம் | 220 | 300 | 200 | 240 | 180 | 300 |
| பெரிய வெங்காயம் | 130 | 160 | 100 | 120 | 120 | 140 |
| பாகற்காய் | 200 | 300 | 150 | 180 | 400 | 200 |
| வெண்டிக்காய் | 50 | 100 | 50 | 60 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 150 | 80 | 100 | 120 | 100 |
| பயற்றங்காய் | 100 | 120 | 140 | 120 | 120 | 160 |
| லீக்ஸ் | 140 | 140 | 80 | 140 | 120 | 120 |
| பீற்றூட் | 40 | 40 | 20 | 50 | 60 | 60 |
| கறிமிளகாய் | 80 | 120 | 90 | 120 | 120 | 150 |
| முருங்கைக்காய் | 80 | 40 | 70 | 100 | 80 | 80 |
| போஞ்சி | 200 | 200 | 110 | 180 | 200 | 150 |
| கத்தரிதம்புள்ள | 120 | 50 | 80 | 80 | 100 | 140 |
| கீரை - 1பிடி | 50 | 50 | 20 | 30 | 40 | 30 |
| தேசிக்காய் | 300 | 250 | 220 | 180 | 400 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 70 | 80 | 60-80 | 70 |
| இராசவள்ளி | 320 | 450 | 200 | 300 | 500 | 300 |
| வெங்காயப்பூ | 240 | 200 | 150 | 180 | 200 | - |
| முள்ளங்கி | 80 | 100 | 30 | 50 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 | 40 | 40 | 30 |
| வல்லாரை | 15 | 40 | 15 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 60 | 40 | 25 | 50 | 50 | 60 |

கையில் கிடைத்ததை நன்கு பயன்படுத்திக் கொள். இல்லையெனில் அதனால் உனக்கு யாதொரு பலனும் ஏற்படாமல் போய்விடும்- *டாக்டர் ஜான்சன்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## குதிரைக் காவலன் வெள்ளி எண்ணியது போல...

அரண்மனையில் இருக்கக்கூடிய குதிரைகளுக்கு காவலாக ஒருவரை நியமித்தார்கள்.

இரவு வேளையில் குதிரைகளைப் பாதுகாப்பதுதான் அவரின் பணி. இரவு என்றதும் அந்தக் காவலாளிக்கு உறக்கம் வந்துவிடும்.

என்ன செய்வது உறங்கினால் குதிரைகள் திருட்டுப் போய்விடும். எனவே உறங்காமல் விழித்திருந்து குதிரைகளைப் பாதுகாப்பதற்கு உரிய உபாயத்தை அறிவதில் அந்தக் காவலாளி ஈடுபட்டார்.

தனக்குத் தெரிந்த ஒருவரிடம் சென்று, விழித்திருப்பதற்கு உபாயம் கேட்டார். அதற்கு அவர், இரவில் வானத்தில் தோன்றும் நட்சத்திரங்களை எண்ணிக் கொண்டிருந்தால் உறக்கம் உன்னை அணுகாது என்றார்.

குதிரைக் காவலாளியும் அவரின் ஆலோசனையை ஏற்று, வானத்தில் தோன்றும் நட்சத்திரங்களை எண்ணத் தொடங்கினார்.

அவ்வளவுதான் லயத்தில் இருந்த குதிரைகள் அத்தனையும் திருட்டுப் போய்விட்டன.

மறுநாள் செய்தி மன்னனுக்குச் செல்கிறது. மன்னன் காவலாளிக்கு மரண தண்டனை விதிக்கிறான்.

எதற்காக நித்திரை விழிக்கிறோம் என்பதை மறந்து, நித்திரை விழிப்பதற்காக வேலை செய்யத் தலைப்பட்டதால் வந்த வினை இது.

இதுபோன்றுதான் இன்றைய இலங்கையின் நிலைமையும் உள்ளது.

தமிழ் மக்களுக்கு உரிமை கொடுக்கக் கூடாது. இந்த நாட்டில் அவர்கள் இரண்டாம் தரப் பிரஜைகள் என்பதில் உறுதியாக இருந்த இலங்கையின் ஆட்சியாளர்கள் அதற்காக சில உபாயங்களையும் தந்திரங்களையும் வகுத்தார்கள்.

அதன்படி அவர்கள் இந்தியாவுடன் உறவு வைத்தார்கள். பின்னர் இந்தியா தம்மைக் கட்டுப்படுத்திவிடும் என்று பயந்த போது, இலங்கையில் சீனாவுக்கு இடம்கொடுத்தால்தான் இந்தியாவை மடக்கலாம் என்று நினைத்தார்கள்.

இலங்கையில் ஏற்பட்ட ஆட்சிமாற்றம் இந்தியாவை அனுசரிக்க வேண்டியதாயிற்று. கூடவே சீனாவையும் வெளியேற்ற முடியவில்லை.

ஆக, இப்போது இந்தியா, சீனா ஆகிய இரண்டு நாடுகளும் சொல்வதை இலங்கை கேட்கவேண்டிய சூழ்நிலையில் உள்ளது.

சீனாவை வெளியேற்றாவிட்டால் இந்தியாவின் கோபத்துக்கு ஆளாக வேண்டிவரும். கூடவே அமெரிக்காவும் இலங்கையை பகைத்துக் கொள்ளும். மாறாக சீனாவை வெளியே போ என்றால், செய்தது ஒப்பந்தம் என்று சீனா சர்வதேச சட்டவிவகாரங்களைக் காட்டி வெளியேற முடியாது என்று கூறும்.

வெளியேறு என்று கூறிய பின்பு வெளியேற முடியாது என்று சீனா கூறுமாக இருந்தால், அது ஆக்கிரமிப்பு என்ற வகுதிக்குள் அடங்கிவிடும். ஆக, இப்போது இலங்கையை இந்தியாவும் சீனாவும் பங்குபோடக் காத்திருக்கின்றன.

அட, தமிழனுக்கு சமஷ்டி கொடுத்தால் அது நாட்டுக்கு, பௌத்த சிங்களத்துக்கு ஆபத்து என்று நினைத்து இந்தியாவையும் சீனாவையும் நாட்டுக்குள் கொண்டுவர, அதுவே இன்று இலங்கைக்கு பேராபத்தாகி விட்டது.

இந்நிலையில் தமிழ் அரசியல் தலைமையிடம் இராஜதந்திரம் இருந்தால் இந்திய மத்திய அரசைச் சந்தித்து நீங்கள் எல்லாம் செய்யுங்கள். நாங்கள் உங்கள் பக்கம் என்று ஒரு வார்த்தை கூறினால் போதும், தமிழர்கள் வென்று விடுவார்கள்.

## மின்சார சபை ஊழியர்களின் வேலைநிறுத்தம் தொடர்பாக வடக்கு ஊழியர்களுக்கு தெளிவூட்டல்

இலங்கை மின்சார சபை ஊழியர்களின் வேலைநிறுத்தம் தொடர்பில் வடமாகாண ஊழியர்களுக்கான தெளிவூட்டல் கருத்தமர்வு ஒன்று நேற்றைய தினம் யாழ். பொது நூலக சிற்றுண்டிசாலை வளாகத்தில் நடைபெற்றது.

இலங்கை மின்சாரசபையின் இணைந்த தொழிற்சங்கங்களின் தலைவர்களான மின் அத்தியட்சகர்களான பத்மஸ்ரீ மற்றும் எம்.ஐ.ஏ. உகாஸ் ஆகியோர் யாழ் மாவட்டத்துக்கு வருகை தந்து மேற்குறித்த தெளிவூட்டல் கருத்தமர்வை மேற்கொண்டிருந்தனர்.

இலங்கை மின்சார சபையின் உயர் அதிகாரிகளுக்கு சம்பளம் வழங்கப்படுகின்ற போது பாரிய மோசடிகள் இடம்பெறுவதாக கூறி தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்த போராட்டத்தை ஆரம்பித்துள்ளன.

மேற்குறித்த குற்றச்சாட்டு உள்ளிட்ட மூன்று கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 13ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த போராட்டம் குறித்து பல பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ள போதும், தீர்வுகள் எட்டப்படாத நிலையில் போராட்டம் தொடர்கின்றது.

இந்த நிலையில் போராட்டத்தின் முக்கியத்துவம் தொடர்பில் மாகாண, மாவட்ட ரீதியாக மின்சார சபை ஊழியர்களுக்கு தெளிவூட்டல் கருத்தமர்வு நடைபெற்று வருகிறது. அந்த வகையில் வடமாகாண ஊழியர்களுக்கான கருத்தமர்வு நேற்றைய தினம் காலை 10.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை இடம்பெற்றது.

இலங்கை மின்சார சபை தொழிற்சங்கத்தினர் ஆரம்பித்த வேலைநிறுத்த போராட்டத்திற்கு தமது ஆதரவும் இருக்கும் என ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். (மு-9)

## ஜே.வி.பியின் மாநாடு

மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) தலைமையில் "ஊக்கமுள்ள பிரஜைகள்" எனும் தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்ட மாநாடு, நுவரெலியா நகரில் நேற்றுக் காலை 11 மணியளவில் இடம்பெற்றது.

இந்த மாநாட்டில், மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திஸாநாயக்க, முன்னணியின் மத்திய குழு உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன், இலங்கை ஆசிரியர் சேவை சங்க நுவரெலியா மாவட்ட செயலாளரும் முன்னணியின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளருமான மஞ்சுள சுரவீர உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## மண்டை ஓட்டில் துப்பாக்கி ரவை: வெற்றிகரமாக நீக்கிய வைத்தியர்கள்


கேகாலை கஜுகஸ்வத்தை பிரதேசத்தை சேர்ந்த மூன்று வயது சிறுவனின் மண்டை ஓட்டிலிருந்த துப்பாக்கி ரவை வைத்தியர்களால் வெற்றிகரமாக நீக்கப்பட்டுள்ளது.

பயிர்ச்செய்கைகளை சேதப்படுத்தும் குரங்குகளை துரத்துவதற்காக பயன்படுத்தப்படும் காற்று துப்பாக்கி பற்றியமையினால் குறித்த சிறுவன் அண்மையில் காயமடைந்தார்.

சிறுவனின் சத்தம் கேட்டு தாயார் சென்ற போது தலை பகுதியில் இருந்து அதிகளவான இரத்தம் வெளியேறியுள்ள நிலையில் உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

இதன்போது பேராதனை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட சிறுவனுக்கு சிகிச்சை மேற்கொண்ட வைத்தியர், சிறுவனின் காது பக்கமாக சென்ற குண்டு மண்டை ஓடுவரை பயணித்துள்ளதாகவும், மேலும் சேதம் ஏற்பட்டால் சிறுவனின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என குறிப்பிட்டுள்ளார்.

அதன் பின்னர் குழந்தைகள் தொடர்பான விசேட வைத்தியர் குழுவொன்று மேற்கொண்ட வெற்றிகரமான சத்திரசிகிச்சையின் பின்னர் சிறுவன் ஆரோக்கியமான நிலைக்கு வந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். (இ-3)




## திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

அந்திய ஆடவர் யாரும் அரசனின் அனுமதியின்றி அதில் பிரவேசிக்கக்கூடாது. அப்படி அத்துமீறி நுழையும் ஆடவர்களுக்கு மரண தண்டனையேயன்றி மன்னிப்பு ஏதும் கிடையாது என்ற அரச கட்டளையும் அமுலில் இருந்து வந்தது.

இது எதுவும் அறியாமல் சோலையில் நுழைந்து சுகமாக நித்திரையில் ஆழ்ந்திருந்தான் ஸ்ரீநிவாசன்.

அந்தி சாய்ந்தது.

அந்தப் பொழுதில் ஆகாசராஜனின் புதல்வி பத்மாவதி தன் பாங்கியர் சகிதம் அந்த நந்தவனத்தில் அடியெடுத்து வைத்தாள். (தொடரும்)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**அரசாணைக் கோல் வழிபாடு**

அரசாணைக்கோல் என்பது இந்தக் காலத்தில் அரசாணிக் கால் என்று மருவி விட்டது. அரசாணைக் கோலை எதற்கு வழிபட வேண்டும். முடியாட்சி இருந்த காலத்தில் அரசரை திருமணத்திற்கு அழைக்க வேண்டும். அரசரை அழைத்த திருமணம் மட்டுமே செல்லும். அரசர் எல்லா திருமணங்களுக்கும் வரமாட்டார். அவர் சார்பில் அரசாங்கத்தில் இருந்து அவரவர் குலத்திற்கு ஏற்ப அரசு, ஒதியன், மூங்கில், வேம்பு, பால் விருட்சங்களின் கொம்புகள் அனுப்பி வைக்கப்படும். அந்தக் கொம்பினை மணமக்கள் வீட்டார் பெற்று அரசருக்கு செய்யவேண்டிய மரியாதையை அக்கொம்பிற்கு செய்வர். அரசாணைக்கால் வழிபாடு இவ்வாறுதான் குடியாட்சி காலத்திலும் செய்யப்படுகின்றது. (தொடரும்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக செவ்வாய்க்கிழமை 8.30 மணியிலிருந்து மாலை 05.00 மணி வரை யாழ்.பிரதேசத்தில கொல்லங்கலட்டி, வித்தகபுரம், மாவைகலட்டி, கீரிமலை, கூவில், நல்லிணக்கபுரம், கீரிமலை சந்தி கடற்படை முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### இறைவனின் நிழல்



மனத்தின் இயக்க நிலைகளை இப்போது ஆராய்ச்சித்து எடுத்துக் கொள்வோம். ஜீவகாந்தமானது உடலில் உள்ள உயிர்ச்சக்தித் துகள்களின் விரைவான சுழற்சியினால் எழும் அலைகளே. ஒரு உடலில் உள்ள உயிர்ச்சக்தித் துகள்களிலிருந்து இவ்வாறு வெளியாகும் அலைகள் அனைத்தும் உடலில் சுழன்று கொண்டே இருக்கின்றன.

பொதுவாக, எந்த ஆற்றல் சுழற்சி பெற்றாலும் திண்மை உடைய பகுதி மத்தியில் போய்ச் சேர்வதும், லேசான பகுதி புறத்தே நிற்பதும் துல்லியச் சமதளச் சீர்மை **(Specific Gravity)** தத்துவம் ஆகும். இந்த இயல்பின்படி, ஜீவகாந்தத்தின் பெரும்பகுதி தனது சுழலியக்கத்தினால் உடலின் மையப் பகுதிக்கு வந்து சேருகிறது. அங்கு இறுகி, குறுகி அழுத்தம் பெற்று ஜீவகாந்த நிலைக்களமாக அமைகிறது. இதனைக் கருமையம் என்றும், ஆன்மா என்றும் வழங்குகிறோம்.

மனிதன் எந்தச் செயல் செய்தாலும் உடலில் ஓடிக் கொண்டிருக்கும், ஏற்படும் தாக்கங்கள் அனைத்தும் கருமையத்தில் போய்ச் சேருகின்றன. இந்த நிகழ்ச்சியை வினைப்பதிவு என்று கூறுகிறோம். பதிவு என்றால் இங்கு எழுதி விளக்கக் கூடியதோ, அல்லது புலன்களுக்கு எட்டும்படியாக அடையாளம் கொடுக்கக் கூடியதோ அன்று.

கருமையத்தில் இறுகிக் குறுகி, நிலை பெற்றிருக்கும் ஜீவகாந்த அழுத்தம் ஒவ்வொரு செயல் அல்லது அனுபோக அனுபவங்களுக்கும் ஏற்ப, தரமாற்றம் பெற்றுக் கொண்டே இருக்கிறது. அப்படி மாற்றம் பெற்ற தன்மைகள் அதே மன அலைச் சுழல் மறுபடியும் வரும்போது, மூளையின் காந்த அலைகளால் விரித்துக் காட்டப்படுகிறது. அப்பொழுது உண்டாகும் அகக்காட்சியே எண்ணங்கள். இறைநிலைக்கும் மன நிலைக்கும் உள்ள தொடர்பை உணர வேண்டும் என்றால், அவற்றை உருவத்துக்கும், அதிலிருந்து தோன்றும் நிழலுக்கும் ஒப்பிடலாம். உருவத்தை விட்டு நிழல் பிரிவதே இல்லை. ஆனால், நிழலை எடுத்துக்காட்டவல்ல ஒளியானது உருவத்தின் மீது படும் கோணத்திற்கு ஏற்ப, நிழலானது அளவில் மாறுபடும். அது போன்று மனிதமனம் இறைநிலையை விடுத்து இயங்குவதே இல்லை.

# யாழ்.போதனா வைத்தியசாலையின் உத்தியோகத்தர்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டி





யாழ்.போதனா வைத்திய சாலை உத்தியோகத்தர்களி டையே முதற்தடவையாக இல்லங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டி நடைபெற்றது.

இறுதி நாள் நிகழ்வுகள் அண்மையில் துரையப்பா விளையாட்டரங்கில் நடை பெற்றது.

வைத்தியசாலையில் பணி யாற்றும் வைத்திய நிபுண ர்கள், வைத்தியர்கள், தாதியர் கள் உள்ளிட்ட 1600 இற்கும் அதிகமான உத்தியோகத் தர்கள் 6 இல்லங்களாகப் பிரிக் கப்பட்டு விளையாட்டு நிகழ் வுகள் கடந்த ஒரு மாத கால மாக நடைபெற்றன.

Green Gladiators, Blue Blasters, Yellow Young Stars , Red Real Heroes, Violet Vikings and Maroon Mega Dreamers ஆகிய இல்லங்களுக்கி டையே போட்டிகள் நடை பெற்றன.

இறுதி நாள் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக சுகா தார அமைச்சின் தொற்றா நோய்கள் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத் தியகலாநிதி திருமதி. சம்பி க்க விக்கிரமசிங்க வருகை தந்து சிறப்பித்திருந் தார். (க)

## கஜகோபன் அதிரடி

# நாவாந்துறை கலைவாணியை வீழ்த்தி சம்பியனானது ஊரெழு றோயல்



அராலி அண்ணா விளை யாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தி வரும் அணி க்கு 9 பேர் கொண்ட உதை பந்தாட்ட தொடரின் இறுதிப் போட்டி (16.09.2017) அன்று அராலி அண்ணா விளையா ட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.


இப் போட்டியில் றோயல் அணியை எதிர்த்து நாவா ந்துறை கலைவாணி அணி மோதியது. நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழகத்தை 1 : 0 என வீழ்த்தி கஜந்தன் தலைமையிலான ஊரெழு றோயல் அணி சம் பியன் பட்டத்தை தனதாக்கிக் கொண்டது. போட்டியின் ஆட்ட நாயகனாக றோயலின் நட்ச த்திர வீரர் கஜகோபன் தெரி வானார். (க)



பூநகரி லீக்கின் அனுமதியோடு கிராஞ்சி செந்தாரகை விளை யாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 11 பேர் கொண்ட வடமாகாண அணிகள் உள்ளடங்கலாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் (16.09. 2017) அன்று கலைம கள் அணிக்கும் யாழ்ப் பாணம் ஆழியவளை சக்திவேல் அணிக்கும் நடைபெற இருந்த போட்டி சக்திவேல் அணி சமூக மளிக்காத பட்சத்தில் அணி வோக்கர் முறை மூலம் வெற்றிபெற்றது.

# V.T. மகாலிங்கம் ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுத்தொடர்

## இறுதியில் அரியாலை மத்தி வி.கழகம்



யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கம் நடத்தும் வி.ரி. மகா லிங்கம் ஞாபகார்த்த (இரு பது-20) தொடரின் நான்கா வது லீக் போட்டி (16.09. 2017) அன்று வட்டுக்கோ ட்டை மைதானத்தில் இடம் பெற்றது.

இதில் சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து அரியாலை மத்திய விளையாட்டுக் கழ கம் மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று துடுப் பெடுத் தாடிய சென்றலைட்ஸ் அணி யினர் 19.2 பந்துப் பரிமாற் றங்களில் சகல இலக்குக ளையும் இழந்து 109 ஓட்டங் களை பெற்றனர்.

துடுப்பாட்டத்தில் ஜேம்ஸ் 27 ஓட்டத்தினையும் , யூலி யஸ் 25 ஓட்டத்தினையும் பெற்றனர். பந்துவீச்சில் ஜரோ ஷன் மற்றும் ஜெனன் தலா 3 இலக்குகளையும் டிஷான் 2 இலக்குகளையும் கைப்பற் றினர். பதிலுக்கு துடுப்பெடு த்தாடிய அரியாலை மத்தி 15.1 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந் தது.

துடுப்பாட்டத்தில் கிருபா கரன் 28 ஓட்டத்தினையும் ஜரோஷன் ஆட்டமிழக்காது 24 ஆட்டத்தினையும் பெற்ற னர்.

பந்துவீச்சில் மயூரன் மற்றும் ஜேம்ஸ் தலா இர ண்டு இலக்குகளை சாய்த்த னர்.

நேற்றைய வெற்றியுடன் அரியாலை அணி காலிறு திப்போட்டிக்கான வாய்ப்பை பெற்றுக்கொண்டுள்ளது .

அத்துடன் சென்றலை ட்ஸ் அணிக்கு எதிராக பெறப் பட்ட முதல் வெற்றியாகவும் அமைந்துள்ளது. (க)

# அரசடி ஸ்பேஸ் கழகம் அரையிறுதிக்கு தகுதி பெற்றது



மகேசன் விளையாட்டுக் கழகம் நடத்தும் மென் பந்து சுற்றுப் போட்டியில் வீனஸ் விளையாட்டுக் கழகத்தை வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது அரசடி ஸ்பேஸ் விளையாட்டுக் கழகம். (க)

# சென்மேரிஸை வீழ்த்தியது இலங்கை போக்குவரத்து சபை



இலங்கை உதைபந்தா ட்ட சம்மேளனத்தின் பிரிவு 1 தொடரின் (16.09.2017) அன்று நடைபெற்ற போட்டியில் யாழ்.நாவாந்துறை சென்மே ரிஸ் விளையாட்டுக் கழகம் மற் றும் இலங்கை போக்குவரத்து சபை அணிகள் மோதின. ஆட்டநேரமுடிவில் இலங்கை போக்குவரத்து சபை அணி 2-1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. (க)

# விசுவமடுவில் பிக்கப் தடம்புரண்டது

புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பிரிவில் முல்லைத்தீவில் இருந்து பரந்தன் நோக்கிச் செல்லும் வீதியில் உள்ள விசுவமடு மாணிக்க பிள்ளையார் ஆலயத்திற்கு அண்மையாக வேகக் கட்டுப்பாட்டை இழந்த பிக்கப் ரக வாகனம் வீதியை விட்டு விலகி அருகில் இருந்த பாலத்திற்குள் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் அதன் சாரதி தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ள நிலையில் சிறுகாயங்களுடன் மீட்கப்பட்டு தர்மபுரம் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் வேளை நடைபெற்றுள்ளது. (மு-15)



# திலீபனின் நினைவேந்தல் 3ஆம் நாள் முல்லையில் சிறப்புற இடம்பெற்றது

(முல்லைத்தீவு)

தியாகி திலீபனின் 30ஆம் ஆண்டின் 3ஆம் நாள் நிகழ்வுகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றுள்ளது.

நேற்று காலை 11.00 மணியளவில் நடைபெற்ற நிகழ்வில் திலீபனின் திருவுருவப்படத்திற்கான பொதுச்சுடரினை மாவீரர் ஒருவரின் துணைவி மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சியின் உறுப்பினர் ஒருவர் ஏற்றிவைக்க மலர் மாலையினை மாவீர ரின் பெற்றோர் அணிவித்தனர். தொடர்ந்து திலீபனின் திருவுருவப்படத்திற்கு மலர்தூவி வணக்கம் செலுத்தப்பட்டுள்ளது.

இதில் புதுக்குடியிருப்பு கைவேலி பிரதேசத்தை சேர்ந்த மக்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள். கைவேலி முறுகண்டிப்பிள்ளையார் அறநெறி பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்று நிகழ்வில் நினைவுரையினை புதுக்குடியிருப்பு வணிகர் சங்கதலைவர் செல்வச்சந்திரன் ஆற்ற சிறப்புரையினை ஜனநாயக போராளிகள் கட்சியின் செயலாளர் இளங்கதிர் நிகழ்த்தியுள்ளார். (மு-281,310)

# பொல பல சேனாவின் ஞானசாரர் நாட்டை விட்டு வெளியேறினார்

(கொழும்பு)

ஞானசார தேரர் போலி கடவுச்சீட்டு மூலம் நாட்டை விட்டுத் வெளியேறியுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சிங்கள இணையத்தளம் ஒன்று செய்து வெளியிட்டுள்ளது.

பொது பல சேனாவின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிராக பல்வேறு நீதிமன்றங்களில் வழக்குகள் இருந்த போதும் நல்லாட்சியிலும் அவர் சட்டத்தின் பிடியில் சிக்காமல் வலம் வந்து கொண்டிருந்தார்.

அவருக்கு, முன்னாள் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவின் ஆதரவும் பாதுகாப்பும் இருப்பதாக அப்போது பல்வேறு தரப்பினராலும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தது.

மேற்குறித்த குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில் விஜேதாச ராஜபக்ஷவின் அமைச்சுப் பதவி பறிக்கப்பட்டவுடன் திடீர் என்று மௌனித்துப் போன ஞானசார தேரர் சில நாட்களுக்குள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக செய்திகள் கசிந்தன. எனினும் குறித்த செய்தி உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை,

இந்நிலையில் சிங்கள புலனாய்வு இணையத்தளம் ஒன்று ஞானசார தேரர் போலி கடவுச்சீட்டு மூலம் கடந்த 01-ம் திகதி ஜப்பானுக்குத் தப்பிச் சென்றிருப்பதாக ஆதாரத்துடன் செய்தி வெளியிட்டுள்ளது.

தற்போது அவர் ஜப்பானில் உள்ள விகாரையொன்றில் வசித்து வருவதாகவும் அந்த செய்தியில் தொடர்ந்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு)

# இன்று முதல் பத்தரமுல்ல அரச அலுவலகங்களில் நேர மாற்றம்

(கொழும்பு)

பத்தரமுல்ல பிரதேசத்திலுள்ள அரச அலுவலகங்களில் நேர மாற்றம் இன்று திங்கட்கிழமை முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதுதொடர்பாக அரசாங்க நிர்வாக அமைச்சின் நிறுவனப் பணிப்பாளர் நாயகம் டபிள்யு.டி.சோமதாச தெரிவிக்கையில்,

அலுவலக ஊழியர்கள் காலை 7.30 முதல் 9.15 வரை சேவைக்கு சமுகமளிக்க முடியும். பிற்பகல் 3.30 முதல் 5.00 மணி வரை அலுவலக பணிகளை பூர்த்தி செய்ததன் பின்னர் வெளியேற முடியும் என்றார்.

நிர்வாகத் தலைவர்களின் அங்கீகாரத்துடன் மூன்று மாதங்களுக்கு இந்த வேலைத் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

பொதுமக்களின் சேவைக்கு தடை ஏற்படாத வகையில் புதிய அலுவலக நேரத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நிறுவனத் தலைமை அதிகாரிகளால் முடியும் என்று அரசாங்க நிர்வாக அமைச்சின் நிறுவனப் பணிப்பாளர் நாயகம் டபிள்யு.டி.சோமதாச மேலும் தெரிவித்தார். (மு)

# ஜனாதிபதி வரும் வரை பதில் பாதுகாப்பு அமைச்சராக ருவான்

(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன பதில் பாதுகாப்பு அமைச்சராக பதவிப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை அமர்வில் கலந்து கொள்வதற்காக நேற்று காலை அமெரிக்கா நோக்கிப் புறப்பட்டுள்ளார்.

நாட்டின் பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமெரிக்கா சென்றுள்ளதால், அவருக்கு பதிலாக பதில் பாது காப்பு அமைச்சராக இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 23ஆம் திகதி ஜனாதிபதி நாடு திரும்பும் வரை அவர் பாதுகாப்பு அமைச்சராக செயற்படவுள்ளார்.

இது குறித்து இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன தனது உத்தியோகப்பூர்வ டுவிட்டர் தளத்தில் ஒரு கருத்தையும் பதிவேற்றம் செய்துள்ளார். (மு)

# அமெரிக்கா சென்றார் ஜனாதிபதி நாளை ஐ.நாவில் உரையாற்றுகிறார்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் 72ஆவது பொதுச்சபைக்கூட்டத்தில் கலந்துகொள்ளும் நோக்கில் ஜனாதிபதி தலைமையிலான குழுவினர் நேற்றுக் காலை ஈ.கே 651 விமானத்தினூடாக நியூயோர்க் சென்றுள்ளனர்.

இதன்போது அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உள்ளிட்ட அரச தலைவர்களை ஜனாதிபதி சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். ஐ.நா பொதுச்சபைக் கூட்டத் தொடர் கடந்த 12ஆம் திகதி ஆரம்பமாகியுள்ள நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாளை 19ஆம் திகதி பொதுச் சபையில் உரையாற்றவிருக்கிறார்.

அதேபோன்று இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ள ஜேர்மன் அதிபர் ஏஞ்லா மேர்க்கல், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, பிரிட்டிஷ் பிரதமர் திரேசா மே உள்ளிட்ட பல்வேறு தலைவர்களையும் சந்தித்து ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

மேலும் ஐ.நாவில் உரையாற்றவுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் நல்லிணக்க செயற்பாடுகள், புதிய அரசியலமைப்பை உருவாக்கும் வேலைத்திட்டங்கள் போன்றவை தொடர்பாக உலகநாடுகளின் தலைவர்களுக்கு விளக்கமளிக்கவிருக்கிறார். (மு)

## 20-வது திருத்தம்...

நிலையில் 20வது திருத்தச் சட்டம் வாக்கெடுப்பில் தோற்றாலோ அல்லது உச்சநீதிமன்றம் பொதுமக்கள் கருத்துக் கணிப்புக்கு உத்தரவிட்டாலோ அவற்றைத் தவிர்த்து அனைத்து மாகாணங்களுக்குமான தேர்தல்களை ஒரே நாளில் நடத்த கபே அமைப்பு மாற்று வழியொன்றை பிரேரித்துள்ளது.

எதிர்வரும் ஒக்டோபர் 2-ம் திகதிக்கு முன்னதாக அனைத்து மாகாணங்களினதும் ஆளுநர்கள் மற்றும் முதலமைச்சர்களின் இணக்கப்பாட்டைப் பெற்று அனைத்து மாகாண சபைகளினதும் பதவிக்காலத்தை ஒரே நாளில் முடிவுக்குக் கொண்டுவருமாறு கபே அமைப்பு ஆலோசனை தெரிவித்துள்ளது.

அதற்காக ஜனாதிபதி மற்றும் பிரதமர் மாகாணங்களின் முதலமைச்சர்கள் மற்றும் ஆளுநர்களுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ள வேண்டும் என்றும் கபே கோரிக்கை விடுத்துள்ளது.

அதன் மூலம் சகல மாகாணங்களுக்குமான தேர்தல்களை ஒரே நாளில் நடத்தும் அரசாங்கத்தின் எதிர்பார்ப்பை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்றும் கபே அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

மாகாண சபைகளின் தேர்தல்களை ஒரே நாளில் நடத்துவதன் மூலமாக அரச வளங்கள், பொதுமக்களின் வரிப்பணம் மற்றும் அரச பணியாளர்களின் காலவிரயத்தைத் தவிர்த்துக் கொள்ள முடியும் என்று கபே அமைப்பு நீண்ட காலமாக வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (மு)

## கூட்டு எதிர்க்...

ராட்சி தேர்தல் திருத்தச் சட்டமூலம் ஆகியன தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது.

அரச அதிகாரிகள் தேர்தலில் போட்டியிட முடியாது என நிறைவேற்றப்பட்டுள்ள யோசனை அநீதியானது என்பதால், தேர்தலுக்கு முன்னர் அதனை திருத்துமாறு கூட்டு எதிர்க்கட்சியினர் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

இந்த சந்திப்பு குறித்து கருத்து வெளியிட்டுள்ள தினேஷ் குணவர்த்தன, பேச்சுவார்த்தை பலனளிப்பதாக இருக்கும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (மு)

## சர்வஜன வாக்கெடுப்பு...

இருந்தாலும் 20ஆவது திருத்தத்தை நிறைவேற்ற முடியாது போனால், சர்வஜன வாக்கெடுப்பு அவசியமென உயர் நீதிமன்றம் அறிவிக்குமானால், மாகாண சபைத் தேர்தல் முன்பைப் போல கட்டம் கட்டமாக நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது.

அவ்வாறு இடம்பெறும் பட்சத்தில் எதிர்வரும் 26ஆம் திகதியுடன் ஆயுள்காலம் நிறைவடையும் கிழக்கு, வட மத்திய மற்றும் சப்ரகமுக மாகாணங்களின் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை கோரும் அறிவித்தல் எதிர்வரும் 2ஆம் திகதி வர்த்தமானி மூலம் தேர்தல் ஆனைக்குழு விடுக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறு இடம்பெற்றால் குறித்த மாகாண சபைத்தேர்தல் உள்ளூராட்சி தேர்தலுக்கு முன்னர் இடம்பெறும்.

# பேருந்தில் மாணவியிடம் சேட்டை இராணுவச் சிப்பாய் கைது

(வவுனியா)

வவுனியா நோக்கி வந்த பேருந்தில் மாணவியிடம் சேட்டை புரிந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா ஈரப்பெரியகுளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

குருநாகல் பகுதியிலிருந்து வவுனியாவிற்கு வந்த பேருந்தில் விடுமுறையில் வீடு சென்ற இராணுவச் சிப்பாய் ஒருவர் அதே பேருந்தில் அவருக்கு அருகில் அமர்ந்து பயணம் மேற்கொண்ட தனியார் கல்வி நிலையத்திற்குச் சென்று கொண்டிருந்த மாணவி மீது சேட்டை புரிந்துள்ளார்.

மாணவி போட்ட கூச்சல் சத்தத்தையடுத்து குறித்த இராணுவச் சிப்பாயை பேருந்தில் பயணம் மேற்கொண்டவர்களின் உதவியுடன் ஈரப்பெரியகுளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

கலாபோகஸ்வவே இராணுவ முகாமில் பணிபுரியும் இராணுவச் சிப்பாயே இவ்வாறு சேட்டை புரிந்துள்ளார்.

குறித்த நபரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் பின்னர் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக ஈரப்பெரியகுளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (மு)

மாகாண சபைகளுக்கான தேர்தலை ஒரே நேரத்தில் நடத்துவது தொடர்பான 20 ஆவது திருத்தச் சட்டமூலம் அரசியல் அமைப்புக்கு ஏற்புடையதா இல்லையா என்ற உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு நாளை 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சபாநாயகரால் நாடாளுமன்றுக்கு அறிவிக்கப்படவுள்ளது.

அதன் அடிப்படையில் நாளை மறுதினம் 20ஆம் திகதி அரசியல் அமைப்பின் 20ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவது தொடர்பான விவாதம் பாராளுமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. எவ்வாறாயினும் 20ஆம் திகதி 20ஆவதுதிருத்தம் தொடர்பான பாராளுமன்ற விவாதம் உயர்நீதிமன்றத்தால் வழங்கப்படும் தீர்ப்பின் பிரகாரம் நடைபெறும் என தெரியவருகின்றது.

சர்வஜன வாக்கெடுப்பு தேவைப்படாது என உயர்நீதிமன்றத்தால் தெரிவிக்கப்பட்டால் பாராளுமன்ற விவாதத்தை நடத்தி 2/3 பெரும்பான்மையுடன் 20ஆவது திருத்தத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியும். இதே வேளை சகல மாகாண சபைத்தேர்தல்களையும் ஒரே தினத்தில் நடத்தும் நோக்கிலேயே 20ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (மு)

## கிளி.யில் வாள்...

யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி பரந்தன் பகுதியில் அமைந்துள்ள விடுதி ஒன்றின் பின்பகுதியில் உள்ள நான்காம் வாய்க்கால் வீதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த விடுதியில் இரு இளைஞர்கள் அளவளாவிக் கொண்டிருந்த போது அவர்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றிய நிலையில் அது இரு குழுக்களுக்கிடையேயான மோதலாக மாறி வாள்வெட்டில் முடிந்துள்ளது.

இதன்போது படுகாயமடைந்த நால்வரும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு அதில் ஒருவர் நோயாளர் விடுதிக்கு மாற்றப்பட்டுள்ள நிலையில் ஏனைய மூவரும் அவசர சிகிச்சை பிரிவில் தொடர்ந்தும் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். இவர்கள் ஆபத்தான நிலையில் இல்லை என வைத்தியசாலை தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை குறித்த சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பதில் பொறுப்பதிகாரியும், சிறுகுற்றப் பிரிவு பொறுப்பதிகாரியுமான உப பரிசோதகர் சுமனசிறி தலைமையிலான குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த விசாரணையின் போது சந்தேக நபர்கள் நால்வர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்ட போதிலும் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. (மு-15-281-312)

## 3 பொலிஸார் காய...

பட்டு வருவதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது இதனையடுத்து குறித்த பகுதிக்கு ,நேற்று முன்தினம் பிற்பகல் 7.30 மணியளவில் வாகனத்தில் சென்ற பொலிஸார் சந்தேகத்திற்கு இடமான நபர் ஒருவரை சோதனை செய்துள்ளார்கள். இதன்போது அவரிடம் இருந்து 3 கஞ்சாபைகள் மீட்கப்பட்டுள்ளது குறித்த நபரை கைதுசெய்ய முற்பட்ட வேளை சந்தேக நபர் கூச்சலிட்டு பிரதேசவாசிகளை கூட்டியுள்ளார்.

இதன்போது ஒன்று திரண்ட பிரதேச வாசிகளுக்கும் பொலிஸாருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டு கைகலப்பாக மாறியுள்ளது. இதன்போது பிரதேச வாசிகளின் தாக்குதலில் பொலிஸாரின் வாகனத்தின் பின்பக்க கண்ணாடி உடைந்துள்ளதாகவும் மூன்று பொலிஸார் அடிகாயங்களுக்கு உள்ளாகி வெலிஓயா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இச்சம்பவத்தினை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு முல்லைத்தீவில் இருந்து 100 பொலிஸார் அழைத்து செல்லப்பட்டு சம்பவம் நடந்த பிரதேசம் சுற்றிவளைக்கப்பட்டு பொலிஸாரின் நடவடிக்கைக்கு இடையூறு ஏற்படுத்திய மற்றும் பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியமை, அரச சொத்தை சேதப்படுத்தியமை தொடர்பில் 16 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

ஜனகபுரம் பகுதியில் குறித்த பெண் ஒருவர் நீண்டகாலமாக கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளார் இவரை பல தடவைகள் பொலிஸார் கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்தியுள்ளார்கள். இவர்கள் கணவன் மனைவி இருவரும் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த நிலையில் குறித்த பெண்ணின் மகன் ஒருவரை கொண்டு கஞ்சா விற்பனை செய்துவந்துள்ளமை பொலிஸாருக்கு தெரியவந்துள்ளது. கஞ்சா விற்பனைக்கு கொண்டு செல்லும் போது குறித்த மகனை பொலிஸார் சோதனை செய்துள்ளார்கள். இதன்போதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட இரண்டு பெண்கள் உள்ளிட்ட 12 பேர் வெலிஓயா பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களை கெப்பட்டிக்கொலாவ நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் கைதான நால்வர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் பொலிஸாரின் கண்காணிப்பின் கீழ் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களை முல்லைத்தீவு நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. (மு-281-310)

## வடக்கு அதிவேக...

அமைச்சர் சுஷ்மா சுவராஜ், இந்தியப் பெருங்கடல் மாநாட்டுக்காக கொழும்பு வந்திருந்த போது, இலங்கை வெளிவிவகார அமைச்சு இது தொடர்பான கோரிக்கைக் கடிதம் ஒன்றையும் சமர்ப்பித்திருந்தது.

ஏற்கெனவே, வடக்கு தொடருந்துப் பாதை புனரமைப்புக்கும் இந்தியா உதவிகளை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (மு)

## சேவைக்குத் திரு...

முன்வைத்து கடந்த 13 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த போராட்டம் குறித்து பல பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ள போதும், தீர்வுகள் எட்டப்படாத நிலையில் நேற்று 5வது நாளாகவும் போராட்டம் தொடர்கின்றது.

குறித்த போராட்டத்திற்கு நேற்று நள்ளிரவு தொடக்கம் இலங்கை மின்சார சபை தொழில்நுட்ப பொறியியலாளர் மற்றும் உதவி மின்சார அத்தியட்சகர்கள் ஒன்றிணைவதற்கு தீர்மானித்துள்ளனர்.

இந்நிலையிலேயே அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குறித்த பணிப்புறக்கணிப்பு காரணமாக மின்நிலைமாற்றிகள் மற்றும் மின்கம்பிகளின் பாதுகாப்பிற்காக பொலிஸாரின் உதவி நாடப்பட்டுள்ளது.

கிடைத்துள்ள சில முறைப்பாடுகள் மற்றும் அசம்பாவிதங்கள் தொடர்பில் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக மின்சக்தி மற்றும் மீள்புத்தாக்கல் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (மு)

## காணாமல் போ...

உறவினர்களின் தற்போதைய நிலை மற்றும் அவர்களுடைய கோரிக்கைகள் தொடர்பாக காணாமல் போனவர்களுடைய உறவினர்களையும், புத்திஜீவிகள், மனித உரிமை செயற்பாட்டாளர்களை யாழ்மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

அதில் காணாமல் போனவர்களுடைய உறவுகளின் பிரதிநிதிகளின் சந்திப்பின் போதே மேற்குறித்த விடயத்தினை முன்வைத்துள்ளனர். அவர்கள் சர்வதேச மன்னிப்பு சபையினரிடம் முன்வைத்த கோரிக்கைகள், கருத்துக்கள் தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேசத்தின் அழுத்தத்துடன் இலங்கை அரசு எமக்கான நீதியை தரும் என்ற நம்பிக்கையில் நாம் தொடர்ந்து எமது உறவுகளுக்காக போராடுகிறோம். இறுதியாக ஜனாதிபதியால் எமக்கு அளிக்கப்பட்ட கோரிக்கைகள் எவையும் நிறைவேற்றப்படவில்லை. அவர் வாக்குறுதி தந்து 3 மாத காலம் கடந்தும் எந்த விதமான ஆக்கபூர்வமான செயற்பாடுகளும், நடைபெறவில்லை. எமது பிள்ளைகள் இருக்கிறார்கள் என்ற ஆதாரத்துடன் தான் நாம் போராடிக்கொண்டு இருக்கிறோம்.

ஒரு நாளாவது எமது பிள்ளைகளுடன் நாம் வாழ வேண்டும். அதற்கு இலங்கை அரசுக்கு சர்வதேசம் அழுத்தம் கொடுக்க வேண்டும். அப்போதுதான் எமது எதிர்பார்ப்பு நிறைவேறும்.

ஜனாதிபதி எமக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத நிலையில் அவர்களால் தற்போது அமைக்கப்பட்ட காணாமல் போனோர் அலுவலகத்தை நம்புவதற்கு நாம் தயாராக இல்லை, அதன் ஊடாக எமக்கு என்ன தீர்வு தரப்போகிறார்கள்? அதன் பயன் என்ன என்று எமக்கு சந்தேகமாக உள்ளது.

எமக்கு முழுமையான சர்வதேச விசாரணை வேண்டும், இலங்கை விசாரணை பொறிமுறையில் நம்பிக்கை இல்லை. காணாமல் போன அலுவலகத்தில் நம்பிக்கை கொள்வதற்கு ஏற்ற வகையில் அந்த அலுவலகத்தில் பொறிமுறைகள் காணப்படவில்லை.

அதாவது நாம் போராட்டம் ஆரம்பித்து 200 நாட்களை கடந்த நிலையிலும் தொடர்ந்து தெருவோரத்தில் போராடி வருகிறோம்.

நாம் ஜனாதிபதியை சந்தித்த போது காணாமல் போனவர்களுடைய பெயர்ப்பட்டியல் வெளியிடப்பட வேண்டும், மறைமுக தடுப்பு முகாம்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும், தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவேண்டும், அபிலாஷைகள் நிறைவேற்றப்பட வேண்டும், நிலங்கள் மீட்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்திருந்தோம். ஆனால் அவர் எமக்கு காணாமல் போனோர் விடயத்தில் அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை, அதை நிறைவேற்றினால் நொந்து போயுள்ள எமது உள்ளங்களை வெல்லுவார். ஆனால் அதை அவர் செய்யவில்லை.

சர்வதேசத்துக்கு இவ் விடயம் தொடர்பில் பெரிய பங்குள்ளது. அடுத்து வரும் ஜெனிவா கூட்டத்தொடரில் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என மேலும் கோரியிருந்தனர்.

அவர்களின் பிரச்சினைகள், கோரிக்கைகள் தற்போதைய நிலை தொடர்பாக ஆழமாக கேட்டறிந்த சர்வதேச மன்னிப்பு சபை பிரதிநிதிகள், ஜனாதிபதிக்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் எந்த தடங்கலும் இருக்கப்போவதில்லை என தெரிவித்ததுடன், உறவுகளுடைய நிலைப்பாடுகளை சர்வதேச தலைமைகளுக்கும், இலங்கை அரசுக்கும் தெரியப்படுத்துவோம் என்று தெரிவித்திருந்தனர். மேலும் காணாமல் போனவர்களுடைய விவகாரத்தை அவர்களின் உறவுகளின் நிலையினை சர்வதேச மயப்படுத்துவது தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்வோம் என உறவினர்களிடம் உறுதியளித்து சென்றுள்ளனர்.

இந்தச் சந்திப்பில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்ட காணாமல் போனவர்களுடைய உறவினர்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (மு-9)


கண்ணீர் அஞ்சலி

அமரர் திருமதி இலங்கநாயகி இராசரத்தினம்
(ஓய்வுபெற்ற நெசவுப் போதனாசிரியர்)



எமது பாடசாலை ஆசிரியை திருமதி பாலமகிந்தன் வத்சலா அவர்களின் அன்புத் தாயார் திருமதி இலங்கநாயகி இராசரத்தினம் அவர்கள் 15.09.2017 வெள்ளிக்கிழமை அன்று காலமான செய்தியறிந்து துயர் அடைவதுடன் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்.
(397)

யப்பான் சயிக்கிள்



விலை 10,000/= லிருந்து

1.லேடிஸ் சயிக்கிள்கள்
2.யென்ஸ் சயிக்கிள்கள்
3.கியர் சயிக்கிள்கள்
4.மவுண்டன் சயிக்கிள்
5.மட்க்கும் சயிக்கிள்கள்

இலகுவான ஓட்டம்
பாட்ஸ் தாராளமாக உண்டு
கழுவிபூட்டுதல் திருத்த வேலைகள் இல்லை

"மின்னுவதெல்லாம் பொன் அல்ல" யப்பான் சயிக்கிள் ஒன்றை வாங்கி நீண்டகாலம் (10) வருடம் பாவிக்கலாம்
(400)

மொத்தக் கொள்வனவுக்கு விசேட விலைக்கழிவு உண்டு
அன்றன் என்ரபிறைசஸ்
பலாலி றோட், கோண்டாவில்.
(பாம் ஸ்கூல் முன்பாக)

எவரெஸ்ட் குமாரிக்கா சந்தனாதி தைலம்



- நீண்ட கூந்தல் வளர்ச்சிக்கும்
- இளநரையை போக்கவும்
- பொடுகிலிருந்து நிவாரணம் பெறவும்
- கண் எரிச்சல், தலை வலியை நீக்கவும்
- ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்யவும்
- ஏழு வகையான மூலிகைகள் உள் அடங்கிய சிறப்பு தைலம்

100 வீதம் இயற்கையானது

(கற்றாழை, வல்லாரை, நெல்லிக்காய், கரிசலாங் கண்ணி, கறிவேப்பிலை, பொன்னாங்காணி, அவுரி மற்றும் விற்றமின் E)
(9447)

எல்லா மருந்தகங்களிலும் சாதாரண கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

தயாரிப்பு:
எவரெஸ்ட் மருந்தகம்,
உசன், மிருசுவில்,
யாழ்ப்பாணம்.

ஏக விநியோகஸ்தர்
பிரமநாதன் & Co
என்.28, 26, பேரின்பநாயகம் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
கைபேசி எண்: 0776389356, 0777153571

உடனடி வேலை வாய்ப்பு
V2 TRAVELS
(C-5625)
UK-550/=Kg
விமானப் பயணச்சீட்டுக்கள் விரைவுப் பொதிகள் சேவை
நீண்ட காலமாக வேலை தேடுபவரா?
தகுதி - 30 வயதிற்குட்பட்டோர் (இருபாலரும்)
0768228241

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
• அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
UK - 550/= (C-9625)
CANADA - 400/= மட்டுமே
V2 TRAVELS-0768226240
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி
• சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.09.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.